உ

ஸ்ரீசற்குருவேநம:

# வேதாந்தசாரம்.

கோவிந்ததீரசுவாமிகள்,
சிஷியராகிய
சந்திரசேகரசுவாமிகளால்
தமிழில்மொழிபெயர்க்கப்பட்டது

இஃது
சேலஞ்ஜில்லாசிவில்கோர்ட்டுவக்கீல்
மா-ா-ா-ஸ்ரீ
அப்பாசுவாமிப்பிள்ளையவர்களாலும்
பாலக்காட்டுச்சேரி
சுலுத்தான்பேட்டையிலிருக்கும்
மா-ா-ா-அருணாசலம்பிள்ளைகுமாரர்
சிவராமன்பிள்ளையவர்களாலும்

பாரிப்பாக்கம்
மூனியப்பமுதலியாரது
மெய்ஞ்ஞானவிளக்கவச்சுக்கூடத்தில்
பதித்தது

1862.

உ

ஸ்ரீ சற்குருவே நம:

# வேதாந்தசாரம்.

## தெய்வவணக்கம்.

### சுலோகம்.

அகண்டசச்சிதானந்தமவாங்மனசகோசரம் *
ஆத்மானமகிலாதாரமாச்ரயேபீஷ்டசித்தயே...*

ஸ்ரீ அகண்டசச்சிதானந்தபரிபூரணமாகியும் அவாங்மனகோசரமாகியும் சமஸ்தத்துக்கு மாதாரமாகிய யிருக்கிற வாத்மாவைச்சர்வாபீஷ்டசித்தியின்பொருட்டு ஆசிரயித்து அனேககோடிப்பிரமாண்டங்களையு முதரத்தில் வைத்திருக்கிற பெருத்தவயிறுடைத்தான விக்கினேஸ்வரருடைய பாதபதுமங்களைவணக்கிப், பரமார்த்தமாயும் அத்துவிதானந்த ஸ்வரூபமாயும் அத்வைதத்தைக் கடந்தவராயும் ஆத்மார்த்தமாயும் சிவசொரூபமாயுமிருக்கிற ஸ்ரீ குருமூர்த்திகளுக்கு நமஸ்காரஞ்செய்து, சகலவேதாந்தசாத்திரங்களினுநிச்சயிக்கப்பட்டசித்தாந்தசாரங்களையெல்லாஞ்சங்கிரகித்து இதைப்பார்க்கிற தற்கு யோக்கியமுள்ளமுமுக்ஷுக்களுக்கு அநாயாசமாய்ச் சுடஞானம் பொருந்தும்பொருட்டுச்சொல்லப்படுகிறது. மேலும் இந்தச்சாத்திரமானது மூலசாத்திரார்த்தங்களையனுசரித்திருப்பதாலந்தமூலசாத்திரத்திற்சொன்ன அனுபந்த சதுஷ்டயங்களைச்சொல்லுகிறோம்.

அனுபந்தசதுஷ்டயம்.

வினா— அவ்வனுபந்தசதுஷ்டயமாவதேதெனின்,

விடை— அதிகாரி, விடயம், சம்பந்தம்பிரயோசனமென்று நான்குவிதமாயிருக்குமிந்த நான்குஞ்சாத்திரார்த்தபலத்துக்குப்பலம்.

வினா— அதெப்படியெனின்,

விடை— இந்தச்சாத்திரத்தின் பொருட்டுப்பிரவிர்த்திச்சபுருடனுக்குப்பலலட்சணமாயிருக்கிறதே பிரயோசனம், அந்தப்பிரயோசனமில்லாதவிடத்தில் மூடனுக்குக்கூடப்பிரவிர்த்தியில்லை.

வினா- ஆனவிந்தச்சாத்திரத்திற்கு அதிகாரியாவனெவனின்,

விடை- சாதனசதுட்டய சம்பத்தியுள்ளவனுமாய் புத்திசாமர்த்தியமுள்ளவனுமாய் வித்துவானுமாய் மேதாவியுமாயிருக்கிறபுருடனையதிகாரியென்று சொல்லப்படும்.

வினா- விடயமாவதேதெனின்,

விடை- யாதொரு சொரூபத்தினிடத்தில் சகலவேதாந்த அர்த்தங்களுங் கூடியிருக்கிறதோ அந்தவேதாந்த அர்த்தங்களிற் சீவப்பிரமாயிக்கிய சொரூபமாயிருக்கிற சுத்தசைதன்னியமே விடயமென்பது.

வினா- சம்பந்தமாவதேதெனின்,

விடை- இப்போது சீவப்பிரமாயிக்கியமான வஸ்துவைப்பிரமாணமாய்ச் சொல்லுகிற சாத்திரத்திற்குப் போதகபோத்தியலட்சணமாவதே சம்பந்தமென்று சற்புருடர்களாற் சொல்லப்படும்.

வினா- பிரயோசனமாவதேதெனின்,

விடை- பிரத்தியகான்மாவும் பிரமமுமயிக்கியானுபவமானதே யதார்த்தம், அவ்யதார்த்தானுபவத்தினுஞ்சகலசமுசாரபந்தத்துக்கமொழிகிறதே பிரயோசனமென்பது, இப்படியனுபந்தசதுட்டயஞ் சொல்லப்பட்டதில் யாதொரு புத்திசாலியாயிருக்கிறபுருடனுக்குச் சாதனசதுட்டய சம்பத்தி பொருந்தியிருக்கிறதோ அவனுக்கேயிப்போது சொல்லப்பட்ட பிரயோசனஞ் சித்திக்குமிதிலொன்று குறைந்தாலும்பலனில்லையென்றும். இந்த அர்த்தத்தில் மகாரிஷிகளானவர்களும் சாதனமாவது நான்குவிதமாயிருக்குமென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். ஆகையாலந் நான்கு சாதனமும்பொருந்தினவனுக்கேமுத்தி, அவற்றுள் ஒன்று குறைந்தாலுமுத்தியில்லை,

## சாதனசதுஷ்டயம்.

வினா- சாதனசதுஷ்டயமாவதேதெனின்,

விடை, நித்தியாநித்தியவஸ்துவிவேகமுதற்சாதனமென்றும், இகாமுத்திரார்த்தபலபோகவிராகமிரண்டாஞ் சாதனமென்றும், சமாதிசட்கசம்பத்தி மூன்றாஞ் சாதனமென்றும், முமூட்சுத்துவம் நாலாஞ்சாதனமென்றுஞ் சாத்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

## முதற்சாதனம்.

வினா- நித்தியாநித்தியவஸ்துவிவேகமாவதேதெனின்,

விடை- பிரமமே நித்தியம் அநித்தியமாயிருக்கப்பட்டதேகேந்திரியாதிசகலசெகத்து மநித்தியமென்றறிவது,

வினா- இதற்குத்திருஷ்டாந்தமெப்படியெனின்,

விடை- மிருத்திகையானது காலத்திரயத்திலு மண்ணாய்க் காண்கிற படியினால் நித்தியமென்றும் அதின் காரியமானகடாதிகளழிந்து போகின்றபடியினால் அநித்தியமென்றுங் கண்டாப்போலத்தோன்றுகிறதேகாதிசெகத்தெல்லாம் பிரமத்தின் காரியமான படியினால் அநித்தியமென்றும் இவ்வநித்தியமான செகத்துக்குப் பிரமங்காரணமானதால் கடத்துக்கு மண்ணெப்படி நித்தியமோ அப்படிபிரமமேநித்தியமென்றுஞ் சொல்லப்படும்.

வினா- ஆனாலிந்தத்தேகாதிசெகத்துப் பிரமத்தின்காரியமென்பதற்குப்பிரமாணமேதெனின்,

விடை- ஆத்மாவிலேநின்று மாகாசாதிபஞ்சபூதசெகத் துண்டானதென்று யசுர்வேதோப நிஷத்திலேகுருவானவர்சிஷ்யனுக்குச்சொல்லியிருக்கிறார் ஆதலால் செகத்துப் பிரமத்தின் காரியமானபடியினால் அநித்திய மென்பதற்குச்சந்தேகமில்லை மேலும் சகல செகத்துஞ்சாவயவமானபடியினா லநித்திய மென்று சகலசாத்திராருங் கண்டிருப்பதால் வைகுண்டாதிகளை நித்தியமென்றெண்ணியிருப்பது மூடர்களுடையபுத்திப்பிரமையே யொழியவேறில்லை, ஆகையால் நித்தியாநித்தியங்களிரண்டையுஞ்சுருதியினாலும் யுக்தியினாலும் பகுத்தறிகிறதே நித்தியாநித்திய வஸ்துவிவேகமென்று சொல்லப்படும்.

## இரண்டாஞ்சாதனம்.

வினா- இகாமுத்திரார்த்தபலபோக விராகமாவதேதெனின்,

விடை- இகலோகபரலோக போகங்களிரண்டுமநித்தியங்களென்றிருப்பதாலதுகளில் துச்சபுத்திசெய்து வெறுப்பது.

வினா- அதெப்படியெனின்,

விடை- புருடனாயிருக்கிறவனுக்கு நித்தியாநித்தியபதார்த்தவிவேகத்தினால் புஷ்பசந்தனவனிதாதிகளான அநித்தியவஸ்துக்களாயிருக்கிற சகலவிடயங்களிடத்திலும் வயிராக்கியமுடனேயுண்டாகுமென்றறி.

வினா- அதெப்படியெனின்,

விடை-காக்கையெச்சமாதிகளிலெவருக்குமசங்கிதபுத்தியெப்படிதோற்றுமோ அப்படியேவிஷயபோக்கியங்களிலும் அசங்கிதபுத்தியுண்டாம் ஆனதால் இதுவே தீவிர விரத்தியென்று சொல்லப்படும்.

வினா- தீவிரவிரத்திக்கடையாளமேதெனின்,

விடை- போகபோக்கியங்களிற்றோஷ திருஷ்டியாய்ப்பார்க்கிறதே யடையாளமென்று பெரியவர்களாற்சொல்லப்பட்டிருக்கின்றது ஆதலாலெவனுக்குந்தான்பிரவிர்த்திக்கிறகாரியங்களில் தோஷங்கண்டபிறகுந்திரும்பவும் பிரவிர்த்தியாகாது ஆகையால் இகபரலோகங்களிலிருக்கிறபதார்த்தங்களின் உண்மையை நன்றாய்விசாரிக்கவேவேணும் எந்தவஸ்துவினுடையகுணத்தை நிச்சயம்பண்ணி விசாரித்தறிகிறபோதும் அந்தவஸ்துவினிடத்திலிருக்கிறதோஷங்காணப்படும்.

வினா- ஆனால் அந்தத் தீவிரவிரத்தியையடையப்படுவதெப்படியெனின்,

விடை- மாதாவினுடைய வுதரத்தின்மலமூத்திரமத்தியிலிருந்து விடக்கிருமிகளாற்கடிக்கப்பட்டு மூலாக்கினியினால் தகிக்கப்பட்டதும் விசாரிக்கிறவனெவன்தான் வைராக்கியத்தையடையான் — தாயார் கெற்பம் விட்டுநீத்துத்தன்னுடல் மலமூத்திரங்களிலே மிதந்து மல்லாக்கச்சயனித்துப் பற்றி விழுகிறதும் பாலக்கிரகங்களினாற் பிடிக்கப்படுகிறதுமான குழந்தைப்பருவங்களை விசாரித்தவனெவன்தான் வைராக்கியத்தையடையான் — இதல்லாமல் பந்துக்களாலும்பிறத்தியாராலுமடிபட்டுக்கொண்டு மந்தஞானபாவமாகவு மதிக்கசஞ்சலமாகவுமசத்துக்கிரியைகள் செய்துக்கொண்டிருக்கிறகௌமாரபருவத்தை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான் — மதத்தினாலுன்மத்தனாகவும் பெரியவர்களை நிந்தித்துக்கொண்டுங்காமாதுரனாகவும் வேளைதப்பினவேளையில் ஸ்திரீகளுடனேபோகிக்கிற அன்மார்க்கனாகவும்பொருந்தினயௌவனத்தை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான் — ரூபஹீனமுஞ் சர்வாவமானமுஞ் சர்வத்திலுந் தீனத்துவமும் புத்திக்குறைச்சலுமாயிருக்கிறமூப்பில் தன்னை வந்தடுத்ததுர்த்திசைகளை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான் — வாதபித்தசுரங்குன்மக்ஷயம் சூலைசேஷ்மமுதலான ரோகங்களினாற் பிறந்ததீவிரதுக்கமும் சரீர[illegible]ற்கெத்

தீருமனைச சொந்தமில்லாமலிடைவிடாதிருக்கிறகவலைப்புமாகி, உடம்பைவிசாரித்தவனெவனோ அவன்தான் விரத்தியுடையான்— சிவத்துவம்பெடிக்கிறபோது எமனைக்கண்டாற்போலிருக்கிறபயமும் மரணமாதலுண்டான நடுக்கமும் உணர்த்துச்சுவாசம்விக்கிறபோது கெர்ப்பத்தில் கட்டுப்பட்டமையினை பொறுத்திய பிராணைப் பிரயாணகாலத்திற் காண்பிக்கிற துக்கத்தை விசாரித்தவனெவன்தான் விரத்தியுடையான்—சகலத்த்துவங்களும் பொங்கி இந்திரியங்கள் பதைறபட்டு அந்தக்கரணை விருத்தியழிந்து அந்தகாரத்திலமிழ்ந்திச் சுழலுகின்ற மரணவேளையிலுண்டாகு மயக்கத்தினை விசாரித்தவனெவன்தான் விரத்தியுடையான்—பிராணன் பிரிந்தபோது நெருப்பாற்றிலுந் தகிக்கப்படாநின்ற யாதனையிலுங்கொடியதான நரகத்திலுபசித்திரவதைத்திலும் யமதூதர்களால் தண்டிக்கப்பட்ட யாதனைகளை விசாரித்தவனெவன்தான் விரத்தியுடையான்—அப்பா புண்ணியம்பண்ணினபேர்கள் பரலோகமாகிய சுவர்க்கத்தில் நக்ஷத்திரரூபமாகவிருந்து அந்தப்புண்ணியக்ஷயமானவுடனே தேவதைகளினாலே தள்ளப்பட்டுத் தேகங்கள் சிதறிப் பூமியில் விழுகிறதைக்கண்டு விசாரித்தவனெவன் தான் விரத்தியுடையான்—வாயு அக்கினி சூரியனிந்திரன் முதலாகிய தேவதைகளும் சுவராக்ஷமையத்திலே லக்ஷமுள்ள மனோடு கூடினவர்களாய் சத்துருபட்சங்களிலேயடிபடுகிறதுக்கத்தை விசாரித்தவனெவன்தான் விரத்தியுடையான்—பிரமதேவன் முதல் சக்கிரவர்த்திகள் பரியந்தமுமிருக்கிறவானந்ததாரதம்மியங்களுஞ் சுருதியினாலே சொல்லப்பட்டிருக்கிற வுபாதிசனனதாலிலு வாஸ்தவமல்லவென்று ஆலோசித்தவனெவன்தான் விரத்தியுடையான்—சாலோக சாமீப சாரூப முதலாகிய பேதங்கள் புண்ணியகன்மசத்திலுண்டானதாவிருக்கண்டத்திலே கிடைத்த சாலோகாதிகளுக்கும் நித்தியத்துவங்கூடாதென்று விசாரித்தவனெவன்தான் விரத்தியுடையான்—யாதொருலோகத்திலேற்றக் குறைச்சலான தாரதம்மியங்களிருந்தாலும் இகலோகங்களில் துக்கமெப்படியோ அப்படியே அந்தப்பரலோகங்களிலும் துக்கமுண்டென்று விசாரித்தவனெவன்தான் விரத்தியுடையான்—உலகத்தில் விவேகிகளாயிருக்கிற புருடருள் நசிக்கப்பட்டவற்றாங்களாயிருக்கிறவைகளை நன்றாயிடைவிடாமல் நித்திய யாய்ப்பா

ரிக்கிறவன் எவன்றான் அதுகளிலாசையை வைப்பான் ஈது போல அஞ்ஞானிகள் விபரீதமாய் போகத்திலும் சகலமன தேகங்களிலிருக்கிறார்கள்—அப்பால் சொல்லப்பட்ட பிரகாரமாக ஆத்மனிருடன்மையாய் விசாரிக்கிறபோது சகலமும் வெளிருக்கிறது இதுகளொப்பானதாகிற ஒருவிதல் மனரப்பட்டிருக்கிறதென்னுடைத்தாகிய வேதாந்தத்தை விக்கேனப்ப விப்பரிகள்—ஆகையால் யோக்கியங்களானதுபா ஞ்சுஜன்மத்திற்ப்பயேடுவிருக்குமென்றறி.

வினா— அதெங்ஙனெனின்,

விடை— அத்திட்டமுக்கதைப் பிரிக்குப் பாரிக்கிறதற்கு பூஜென்னபுருஷோத்தமனைவு ஞானிகளுக்கும் போதிக்கிறதற்குயோக்கியமாகவுமிருக்கிற தெப்படியெனப்படியே சகலபோக போகங்களுக்கு காரணமாயிருக்கின்ற விஷயங்களை விசாரித்து பேர்களுக்குமாதும் பொதுக்கப்படுகிறதல்ல—ஆதலால் அதுங்கள் தீர்த்தப் போகியுக்தானிருக்கிற ருசியையிடப்படுப்பம்போகமட்டாமல் அருசியிலே சகல மெய்ப்படி பிறந்து போகும்போதுப்படியபவித்வத்யானவழுக்கிரகாதி சகலசுவிஷேத்தியங்களைவிட்டுப்பிரியமாட்டாமல் பிராந்தியினுலேறுக்கிறன்—மேசக்காட்புருஷனை அக்கினிமேல் துண்டுமான துலாவே தண்டனைக்கேடுக்க கிட்டிக்கொண்டிருந்தாலும் விடடவழியில்லாமல் மூடுக்கொண்டு துடித்திருந்திறக்கிறதெப்படியோ அப்படியே புத்திரகளத்திர மித்திரர்களிடத்தில் சினேக ஜனபந்துக் கூட்டுறவினால் மறைபட்டிருக்கத்தைவன் ஒருக்காலுமிந்தப் பந்தத்தில் நின்றுவிடமாட்டாமல் கிரகாதிகளிலிருந்து விபரீதமாயிறந்து போகிறான்—அப்பா இந்தக்கிரகாதிகளுக்கும் காரணகிரகத்துக்கும் நன்றாய் விசாரிக்கும்போது விசேடமென்னவிருக்கின்றது ஆதலால் காரணகிரகமும் கிரகாதிகளுமொன்றுதான் சரியே.

வினா— அதெப்படியெனின்,

விடை— காரணகிரகமானது, புருஷட்பிரவிர்த்திக வெப்படிவிக்கினமோ அப்படியே கிரகாதிகளும் மோட்சத்துக்குத் தடை செய்கிற விக்கினமாய்.

வினா— அதெப்படியெனின்,

விடை— கிரகஆசையெனவில்தீனாயப்பட்டவிலங்கு, ஸ்திரீயா

ஸைசேய கண்டபாசம், அஞானைகையேபோசிகசில்விழுகிறவேரியுடைய
ய் சாட்சாத்பிராணுக்கவேதுவாயிருக்கப் பட்டது—ஆகை
யாலிவ்வாஸைகளகிறவிவேகபாசங்களிற் கட்டுப்பட்ட பாசத்
தையுடைத்தானவ னென்றுநிற்கமாட்டாமல் காமக்குரோதா
திகளகிற சாஸ்த்ராகாரர்களாற் குழப்பட்டுக் கொண்டு அகோ
ராத்திரமே கேரமாகிற ஆவரணத்தினால் மறைக்கப் பட்டிருக்
கிறசமுசாரமெ கிறவிலங்குக் கூட்டத்தில் நின்று இடமொன்கிற
கைகளால் பரமகுருவை யெப்படிவெளியே வருவான்—மே
லும், காமாந்தகாரத்தினால்மறைபட்டகண்ணுடையவன் குருபி
யாயிருக்கிற ஸ்திரீயினிடத்திலுமோகிக்கிறான்.

விது- அதெப்படியெனின்,

விடை- அந்தகனுடைய திருஷ்டிக்கு நல்லது பொல்லாதெ
ன்கிறதினிடத்திலெப்படிவிசாரணையில்லையோ அப்படியெ
ன்றறி.

விது- ஆனால் ஸ்திரீலட்சணமாமேதெனின்,

விடை- கிலேஷ்டமொழுகுகிற நாசியும் பீளைதள்ளுகிற நேத்
திரமும் கோழைவடிகிற சர்வசரீரம் மலமூத்திர நிறைந்து
ற்கந்தம்வீசப்பட்டவுடலும் மற்றும் பன்னாதமானைத்து
ம் இச்சன்னையுடைய தென்றுமனைநினைத்தாவுங்கூடாது, இப்ப
டிக்கொத்த சரீரமானது நல்லபுத்தியுள்ளவர்களுடையக
ண்பார்வைக்கெப்படி பயங்கரமாகப் போகின்றது—விட்டி
லானது தூரக்கண்டக்கினிஜ்வாலையில் தானேபட்டுத்தியைவை
த்து அதில் வந்து விழுந்துகெப்படி மடியுமோ அப்படியே காம
மஞ்ஞல் ஸ்திரீயைரம்மியமாகவெண்ணி மனுஷனும் நடந்திரு
ஷ்டியாய் மடிந்துபோகிறான்—மயிசம் அஸ்திமச்சை மூ
த்திரங்களினால் நிறைந்தபாத்திரமாயிருக்கிற ஸ்திரீயைத்தனக்
குத்தானே ரமணியமாய்ப்பார்க்கிறான் ஆதலால் அப்படிகண்
கெட்டவன் குட்சமமார்க்கமாயிருக்கிற மூத்திரத்தை யெப்படி
பார்க்கப்போகிறான்— சாட்சாத்காமமென யெமனுகையால் வி
வேகிகளாயிருக்கிறவர்களுக்கு ஸ்திரீகளேயெமாலயம்
ஆகையால் கர்ப்பவாசக்குளமாலயத்திலாவதுவீட்டிலாவதுதாப
த்திரயமாகிறக்லேசங்கள் நிவிர்த்தியில்லை—அதினுக்கிரகத்திலி
ருக்கிறவனிதன் செத்துப்போகிறபோது தாபத்திரயமில்லாத
வைத்தக்கண்டுமூடபுத்தியினால் கிராமாதிகளைச்சுகம் போலெண்ணு
கிறான்— மேலும், உலகத்தில் பெயனுக்குங்காமனுக்குந்தாரத
மியம்விசாரிக்குமளவில்வெகுவித்தியாசமுண்டு-

வினா- அதெப்படியெனின்,

விடை- யமனானவன் சத்துருவாயிருந்துக் கொண்டே பாபங்க
ளைச் சோதித்துத் தண்டனையைக் கொடுக்கிறான் காமன் பிரியனா
யிருந்துக் கொண்டு அனர்த்தத்தைக் கொடுக்கிறான் — அதி
லுமெமனானவன் சத்துருக்களுக்குத் துன்பத்தைக் கொடுத்து
ப் புண்ணிய புருஷாளுக்குச் சுகத்தைக் கொடுக்கிறான் காமனா
னவன் சற்புருஷாளுக்கும் விவேகமில்லாதவர்களுக்குங் கூடப் பிரி
யனாயிருந்துக் கொண்டு நன் மார்க்கத்தைக் கெடுக்கிறான் ஆத
லாலசத்தாயிருக்கிறதேனாக் கெடுக்கிறதற்குக் கேட்கவேவேண்
டியதில்லை — பிரமாவானவர்தானே பிரஜாவிருத்தியை
க்கோரிச்சிருஷ்டி விருத்தியாகக்காமனையுண்டாக்கினார் அந்தக்
காமனால் உலகமோகிக்கப்பட்டுச் சந்திரனைக்கண்டகடலானதெ
ப்படிப்பொங்குமோவப்படியே சகலலோகங்களும்பிரவிர்த்தியா
கின்றது — லோகத்தைப் பிரமிக்கச்செய்கிற காமனென்பவன்
ஸ்திரீபுருஷாளுடைய மனதிற்குடியாயிருந்துக் கொண்டு சரு
சல்லாபலீலைகளைச் செய்வித்து அன்னியோன்னியமோகமு
ண்டாக்கிக்காமாந்தகாரத்தினால் ஒருவர்க்கொருவராசையா
கிறகயிற்றினாற் கட்டிப் பிரபஞ்சத்தை விருத்தியடையப் ப
ண்ணிப்பிரமதேவனுக்கினையை நிசப்படுத்துகிறான் — ஆதலா
ல்சகலசெந்துக்களுடைய மனதிலுங்குடியாயிருக்கிற காமவே
கத்தினாற்போகத்தினிடத்தில் சதாவாசையாலதுசித்தமாயிருக்
கின்றது அப்படியில்லைவிட்டால் அறியாதபதார்த்தங்களிலெப்ப
டி ஒருவன்பிரவிர்த்திக்கப்போகிறான் — சகல செந்துக்களுக்
குமாசையே பலவிதமாகையாலித்தத்தேகமரித்தாலு மாசை
யானதுகுறைகிறதில்லை — ஆதலால் விவேகிகளுக்குள் விடயங்க
ளிடத்தில்தோஷமென்றுகண்டு அதிலுள்ளநல்லபுத்தியையும் வி
ட்டுக்காமபாசத்தில் நின்றுஎவன் விடுபடுகிறானோ அவனே முத்
திமார்க்கத்திற் கூடுவான்.

வினா- ஆனால் சற்புருஷாளுக்குக் காமனைச்செயிக்கிற சூட்சும
மாகிய வுபாயமெங்ஙனமெனின்,

விடை- நினைப்பாகிறசங்கற்பத்தை விடுகிறதே சுலபமான வு
பாயம் — அப்பா இதல்லாமலும் கேட்கப்பட்டுங் காணப்ப
ட்டுமிருக்கிற சந்தபோக்கியவஸ்துவினிடத்திலும் நன்மை
யென்கிற புத்தியை விட்டால் காமப்பிரவிர்த்தியில்லை — காம
னுக்குவித்து சங்கற்பமந்தச் சங்கற்பத்தினாற் சகலப் பிரவிர்த்தி

றியுமுண்டாகும் ஆகலால் வித்தைக்கெடுத்தால் முளைவெப்படி
யில்லையோ அப்படியேசங்கற்பநாசத்தினால் காமனும் நாசமா
வான் மனிதனானவன் போகபோக்கியங்களிடத்தில் நல்லதென்கி
றபுத்தியினாற்பிரவிர்த்திப்பதேதவிர வொருத்தனுமாசையினாலே
பிரவிர்த்திப்பான் ஆகலால் காமனைச்செயிக்கவேணுமென்கிற
விச்சையுள்ளவன் விஷயங்களிடத்தில் நல்லதென்கிறபுத்தியை
த்தவிரவேணும்.

வினா- சங்கற்பம்பிறவாதிருக்கிறதற்குக்காரணமேதெனின்,

விடை- விஷயத்தினுண்மையையெதார்த்தமாய்க் காணுகிறது
மதையனர்த்தமாயெண்ணுகிறதுமான விரண்டினாலுங் கா
மப்பிரவிர்த்திக்கவகாசமில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- மாணிக்கத்தினிடத்தில் கல்லாய்ப்பார்த்தவனுக்குப் ப
யந்தோன்றாது அதனன்மையென்கிறபுத்தியுமில்லை அதை
க்கிரகிக்கவேணுமென்கிறபுத்தியுமில்லை—ஆகையால் ஒருவ
த்துவினுண்மையை யெதார்த்தமாய்ப் பார்க்கிறது மனர்த்த
மாயெண்ணுகிறதுமே சங்கற்பரூபமாயிருக்கிற காமன்பிர
விர்த்தியாதிருக்கிற வுபாயமென்று சொல்லப்படும்.

வினா- இனிதனலட்சணமாவதேதெனின்,

விடை- அது, பாபங்களுக்கெல்லாமிருப்பிடமாகவுஞ்சதாகாலமுமெ
ந்துக்கத்தை வளர்ப்பிக்கிறதாகவும் பயவுங்கெர்வத்தைக்கொ
டுக்கிறதாகவும்பந்துக்களுடையபகைப்பையுண்டென்னு
கிறதாகவும் சற்குணத்தைக் கெடுக்கிறதாகவும் மேலாயினரு
டைய சித்தத்தினால் வணங்குவதாகவும் முத்திநிலைக்கெ
டுக்கிறதாகவுமந்தக் கரணத்துக்குமலினங் கொடுக்கிறதாகவு
மிருக்கும்—ஈதல்லாமல் ராசாக்களால்பயமுஞ் சோரர்களால்
பயமும் அக்கினியினால்பயமுந்தாயாதிகளால் பயமுமா
யிருக்கிறதனமானது, பயத்தினால் அனேகமனர்த்தங்களுக்கெ
ல்லாமூலமாயிருக்கிறபடியினால் சற்புருஷர்களுக்குச் சுகங்
கொடுக்கமாட்டாது.

வினா- அதெப்படியெனின்,

விடை- தனத்தைச்சம்பாதிக்கிறதிலும் ரட்சிக்கிறதிலும் தானே

ம்பண்ணுகிறதிலும் செலவழிக்கிறதிலும் மனுஷனுக்குச் சதா து க்கங்கொடுப்பதால் தனஞ்சுகத்துக்குஞ் சாதனமாகமாட்டா து — மேலும், சற்புருஷனுக்குக் கூடத்தனலோபம் வருமானா ல். லோபத்தைக்கொடுக்குமந்தலோபத்தினால் விவேகங்கெட்டு ப்போம்விவேகங்கெட்டுப்போனால் நசித்துப்போவான் — மே லும்தனமானது கிடையாமற்போனால்மேலுந்துக்கங்கொடுக்கும் கிடைத்ததென்றால்லோபமிகவிளைக்கிறதும் ஆகையால் சதாவி சனத்தைக்கொடுக்கிறதனமானது எவனுக்குதான் சுகங்கொ டுக்கப்போகிறது — மனுஷனுக்குத்தனலோபத்தினால் மதங் கொடுக்குந்தானஞ் செய்தாற்பிறப்பைக்கொடுக்கு மிந்தவிர ண்டுவகையிலு மவனுக்கு நலமெதுங்கூடாமல் வியர்த்தமாய் ப்போகின்றது ஆகையால் தனத்தில் மதம்விருத்தியாகும் மத த்தினால் நினைவுகெட்டுப்போம் நினைவுகெட்டால் புத்திகெட்டு ப்போம் புத்திகெட்டால் தானுங்கெட்டுப்போவான் — தனமா னது சுகங்கொடுக்குமென்று ஆசையாகிறபாசத்தினால் திடமா யாவிக்கனம்பண்ணப்பட்டு அந்தத்தனசமீபத்திலே சதாகால மு மிருந்து பார்த்திருந்தமூடர்களுடைய பிராணனோத்தனம் போகிறபோது கூடத்தானேகொண்டுபோய்விடும் தனசட்டன் னானவன் அந்தகன்போலமுன்பின்தெரியாமல் சற்புருஷ ராலதிகரிக்கப்பட்டுத் துன்மார்க்கங்களிற் சுழன்று துன்மார்க் கக்கூட்டுறவோடேகூடியடிக்கொருக்கால்தப்பிமாற்றப்பட்டுமு டிவில் அந்தகார கூபத்தில் விழுவான் இப்படிப்பட்டதன ச ம்பன்னகுருடனுக்குக் கண்ணுமிலுமுடையாவது தரித்திர மாகியவைமெய்யாம் — மேலும், லோபமுங்குரோதமும் டம்ப மும்மதமாச்சரியமும் தனங்கிடைத்தமாத்திரத்தினால் வர்த்திக்கு ம் இப்படிவர்த்திக்கச்செய்யப்பட்டதனம் இகநிருமலத்தை யெப்படிகொடுக்கும் — இந்தத்தனமானது கிடையாமற் போ னாலும் பிரட்டிப்புத்துக்கம், கிடைத்ததனம் சிலவாகக் கண்டா லதைவிடமொட்டிப்புத்துக்கம் விவேகிகளுக்குத்தூர்விஷயத்திற் சிலவுவந்தாலதைவிடவிரட்டிப்புத்துக்கமாம் — இப்படி நித்தி யம் சதாகவலையைக்கொடுத்துப்பயத்தை யிடைவிடாமல் செ ய்கிறதனத்தினால் தன்கிரகத்திலேசற்பமிருந்தாலந்த வீட்டிற் சஞ்சரிக்கின்றவனுடைய சித்தமெப்படி நிலைக் கூடையிலே யோ அப்படியே சித்தநிலைக்கடைவரமாட்டாதென்றறி.

வி-ரு- இனிதனமில்லாதவனுடையலட்சணமெப்படியெனின்,

வி-டை- மனுஷர்சஞ்சாரமில்லாதவனத்திலுமனுஷர்வாழுகிறப

ட்டினத்திலுங்கள்ளர்சஞ்சரிக்கிற விடத்திலுமனுஷர் கூடியிருக்கிறவிடத்திலு மனுஷரில்லாத விடத்திலுந் தரித்திரமடைந்தவன் சொஸ்தமாய் சகலசனங்களாலு மாதரிக்கப்பட்டுச்சுகமாயிருப்பன் தனமுள்ளவன் சதாகவலைபொருந்தின புத்தியோடேதான் பெற்றபிள்ளையினிடத்திலும் பயப்பட்டுச்சஞ்சாகிலேசத்தையடைவன்—ஆதலால் தனமானது அனர்த்தத்துக்கிருப்பிடமாகையாலிந்த அர்த்தத்தினால் பிரதிகூலமேதவிரப்புருஷார்த்த சித்தியேயில்லை யென்றுசாதுக்களானவர்கள் அர்த்தத்தைவிட்டொழித்து வனமேபோய்விடுவார்கள்—இதுவுமல்லாமல் பத்திவிசுவாசகுணம் பொருந்தினகிரியை யுடனே பெரியோர்களுக்குச் சம்மதியாய் நடக்கிற புத்திரரையுந்தானத்துக்கும் போகத்துக்குமனுகூலமாயழியாமலிருக்கிறதனத்தையும் லட்சுமிகடாட்சம பொருந்தின கிரகத்தையும் சற்புருஷாளாயிருக்கின்றபேர்கள் சுருதியினாலும் அனுபவத்தினாலும் அநித்தியமென்றெண்ணி விட்டொழிவார்கள்—அஞ்ஞானியாயிருக்கிறபேர்கள் நித்தியமென்றெண்ணி மோகமாகிற சமுத்திரத்திலழுந்திப்போவார்களென்பது—யாதொருவர்மலக்கூட்டமாயிருக்கிற கிரகத்தினால் சுகமென்றெண்ணி மலத்திலிருக்கிறபுழுக்களைப்போல க்ஷேத்திரபாத்திரவாசையினால் அதைத்தேவதாசிரம்போலெண்ணிவாழ்ந்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக் கொருக்காலு மோட்சமென்கிற சொல்காதிலுங் கேட்கக்கிடையாது திரும்பவுங் கெற்பவாசாதிதுக்கங்களைக் கொடுக்கும்—எவர்கள் தாரபுத்திர தனங்களிலிருக்கிற வாசையைநிராசையா யொழிக்கிறார்களோ அவர்களுக்குமோட்சவிச்சாபலமானது சித்திக்குமன்றியிதராளுக்கில்லை—ஆதலால் ஸ்வார்ப்பண புண்ணியகன்மங்களினால் பாவங்களையத்தியந்தம்போக்கடிக்கிறவர்களாயும் வேதத்திற்சொன்ன அர்த்தத்தினிடத்திற் பிரவிருத்திக்கிறவர்களாயும் சித்தசுத்தியுள்ளபேர்களாயும் புத்திசாலிகளாயும் நித்தியாநித்திய பதார்த்தசோதனையையன்புடனே யடிக்கடிச்செய்துக் கொண்டிருந்ததினாலுண்டாகிற மகா வயிராக்கியமென்கிறவாளைப் பொருந்தினவர்களாயும் மோட்சமொன்றே வேணுமென்கிற வேட்கையோடு கூடினவர்களாயுமிருக்கிற சந்நியாசிகளுக்குச் சமஸ்த விஷயங்களிலும் படர்ந்திருக்கிற ஆசையாகிற கொடியை யறுக்கிறது சுலபம்—மேலும் பெலமாயிராநின்ற இந்தச் சம்சாரவிருத்தியான கோட்டைக்குப் பெரிதாகியவாசல் கள்ளுண்டென்றி.

வினா- அதேதெனின்,

விடை- காந்தையென்றுங் கனகமென்றுஞ் சிங்குரையென்றுஞ் சொல்லப்பட்ட இந்தவாசல்களை யடைக்கிறானோ அவனுக்குயிருத்தியபாயமில்லை—மோட்சலட்சுமி நகரத்துக்கு வொருத்தராலும் பிரவேசிக்கப்படாதபடிக்கிருக்கிற மூன்றுவாசல் ஒன்றுண்டு அந்தவாசலானது, அனேகஸ்திரீயென்கிற விரண்டு கதவினால் மூடப்பட்டுக் காமனென்கிற தாழ்ப்பாட்டியிருக்கும், யாதாமொருதீரனாயிருக்கிறவனிந்த மூன்றையும் பிளந்தெறிந்து போகிறானோ அவன் மோட்ச லட்சுமியுடைய சுகபோகத்தை யனுபவிக்கிறதற்கு யோக்கியனாவான்—ஆகையால் விவேகமாகிறபரியின் மேலேறிக்கொண்டு தீவிரவைராக்கியமாகிறவாளைத்தரித்துக் கொண்டுசீதோஷ்ணாதி சுகதுக்கலாபநட்டங்கள் வந்தாலுஞ் சமமாய்ப்பொறுத்துக் கொண்டிருக்கிற உபசாந்தனுக்குச் சத்துருவானவனில்லை—விவேகத்தினுண்டான தீவிரவைராக்கியத்தாலே மோட்சத்துக்கு நிலைக்கடையென்று சற்புருஷர்கள்சொல்லியிருக்கிறார்களாகையால் மோட்சம் வேணுமென்று இச்சித்த புருஷனானவன் முதலாய்த்தீவிர வைராக்கியத்தைப் பிரயத்தனம் பண்ணியாகிலுஞ் சம்பாதிக்க வேணும்—யாதொரு புருஷனானவன் வைராக்கியமில்லாதிருக்கிறானோ அவன் தேகாதிபந்தங்களைவிட்டொழிய மாட்டான் ஆதலால் வைராக்கியமானது பந்தங்களை யறுக்கிறதற்கு வொருவாளாயிருக்கும்—யமாலயம் போலிருக்கிற வீட்டில் மகா பெரியவர்களாகவிருந்தாலும் வைராக்கியமில்லாதபடியினால் தாபத்திரயங்களால் விடைந்தல் பட்டுக்கிலேசிப்பார்களாகையால் பிரயத்தனம் பண்ணியாகிலும் இந்தத்தீவிர விரத்தியைச் சம்பாதிக்கவேணுமென்றறி,

## மூன்றுஞ்சாதனம்.

வினா- இனிசமாதி சட்கசம்பத்தியாவதேதெனின்.

விடை- சமம், தமம், உபரதி, திதிட்சை, சிரத்தை, சமாதானமாகியவாறும்சமாதிசட்கசம்பத்தியென்றுசொல்லப்படும்.

வினா- இதில் சமமாவதேதெனின்,

விடை- மனதுக்குத்தன்றேட்டத்தி லொருமைப்பாடா யிடைவிடாமல் நிலைத்திருப்பதேசமமென்று சொல்லப்படும்—மேலும், இந்தச்சமமானது, உத்தமசாந்தியென்றும் மத்திமசாந்தியென்றும் அதமசாந்தியென்றுமூன்றுவிதமாயிருக்குமெனப் பெரியோர்கள்சொல்லுவார்கள்.

வினா- இதிலுத்தமசாந்தியாவதேதெனின்,

விடை- மனமானது விகாரத்தையொழிந்து லட்சியவஸ்துமாத்திரமாய் நின்றிருப்பதே பிரமநிர்வாண லட்சணமானவுத்தமசாந்தியென்றுஞ்சொல்லப்படும்.

வினா- மத்திமசாந்தியாவதேதெனின்,

விடை- பிரத்தியகான்மசொரூப வடையாளத்தைச் சதாவனுசந்தானம்பண்ணுகிறதே சத்துவலட்சணமான மத்திமசாந்தியென்று சொல்லப்படும்.

வினா- அதமசாந்தியாவதேதெனின்,

விடை- விஷயவியாபாரத்தை விட்டுச் சிரவணமனனாதிகளைச் செய்துகொண்டிருக்கிறதே மலின சத்துவ லட்சணமான அதமசாந்தியென்றுசொல்லப்படும்— இப்படிப்பட்ட சமமானதற்கு முன்னங்கமென்றும் பின்னங்கமென்றுமிரண்டங்கமுண்டு அவ்விரண்டங்கமும் பொருந்தினாலிந்தச்சமமானது சித்திக்கும் இல்லாதிருந்தால் சித்தியாது.

வினா- அவையேதெனின்,

விடை- தீவிரவைராக்கியமே முன்னங்கமென்றும் ஜீவகாருண்ணியமுதலானதுகளெல்லாம் பின்னங்கமென்றுஞ்சொல்லப்படும்— ஆயினும், இந்தச்சமமானது, காமக்குரோதலோபமோகமதமாச்சரியங்களாகிற அசத்துருக்களையுமெதுஞ் செயிக்கப்படவில்லையோ அவனுக்குச்சித்தியாது, சத்தாதிவிஷயங்களைவிடம்போலெண்ணித் தீவிரமோட்சவிச்சையிலிருப்பிப்பாரிருக்கிறவனெவனோ அவனுக்குச்சித்தியாது— எவனால் ஈஸ்வரனையாராதிக்கப்படவில்லையோ எவனுக்குக்குருகடாட்சமில்லையோ எவனுடைய சித்தம்நின்மலமாகவில்லையோ அவனுக்குச்சித்தியாது, ஆகையால்மனது நிருமலமாகும்பொருட்டுப் பெரியவர்களாற் சமாதானஞ் சொல்லியிருக்கிறபடியிந்தச்சமமானது சித்தித்தால்மனது நிருமலமாகும் சித்தியாவிட்டால் நிருமலமாகாது— பிரமசரியமும் அகிம்சையும் பூததயவும் வைக்கமும் விஷயாசத்தியம் அனுசாரமும் டம்பமும் அசத்தியமுமமதையுமில்லாதிருக்கிறதும் தயிரியமும் க்ஷமாமமமுமில்லாதிருக்கிறதும் ஈஸ்வரதியானம்பண்ணுகிறதும் பிரமவித்துக்க

னுடன் சாவகாசம் பண்ணுகிறதும் ஞானசாஸ்திரார்த்தங்களை அ
நுசமேட்பாடாய் விசாரிக்கிறதும் சுகதுக்கங்களைச் சமமாய்ப்பா
ர்க்கிறதும் சதா ஏகாந்தவிருத்தியாயிருக்கிறதும் மோட்சவிச்
சையுமாகியவிது முதலானவைகள் எவனுக்குண்டாயிருக்குமோ
அவனுடைய சித்தம் நிருமலமாகும்—எவனுக்காகிலு மிஃதில்
லாமல் பலவுறுதியில் சுழன்றால் அவனது சித்தம் நிருமலமாகமா
ட்டாது—மேலும், ஸ்திரீகளை நினைக்கிறதும் பார்க்கிறதுமவர்
களுடைய குணாதிசயங்களைக் கவனிக்கிறது மாதர்களை நன்மை
யென்றெண்ணுகிறது டம்பாகளிடத்திற் பிரியமானவர்களிடத்
தில் சகவாசிக்கிறது மாதர்களுடைய கூட்டுறவுமவர்களைக்கலக்கி
றதுமாகிய இந்த வெட்கிவிதூஷணைகளுனை மென்றும் அதற்கு
விலட்சணப்பிரத்தி நிருமலமான பிரமசரியமென்றுஞ் சொல்லப்
படும்—ஆகையால், மகாவாக்கியங்களினு லுயிர்களைப்பிடி
யாமலிருப்பதும் பூதயவுந் திரிகரணசுத்தியாய் சுதாவண
க்கமும் அயிசுவரிய தபசுரூபகுலவர்ணாசிரமாதி சகிதுகளஹ
ங்காரம் பிரவிர்த்தியாத படிக்கபிமானத்தை விட்டிருக்கிற
தும் குரு வேதாந்தவாக்கியார்த்தங்களில் திடநிச்சயமும் எவ
னுக்கிருக்குமோ அவனுக்குமனசு நிருமலமாகுமென்றறி.

வினா- இனி-தமமாவதேதெனின்,

விடை- பிரமசரியாதிதர்மங்களில் சித்தமேகாக்கிரமாயிரு
ந்துசத்தாதி விஷயங்களிலிந்திரியங்கள் செல்லாதபடி நிறு
த்துகிறதே தமமென்று சொல்லப்படும்—மேலும், இந்தி
ரியங்களுடைய பிரவிருத்திவிஷயங்களிற் செல்லாமல் நிறு
த்துகிறதும் சித்தசாந்திக்குச் சாதனமானது தமமென்றும்யோகி
களாற்சொல்லப்பட்டிருக்கிறது.

வினா- அதேதெனின்,

விடை- இந்திரியங்கள் விஷயங்களிற் செல்லும்போது மன
மும்கூடவும் அதனுடன்பாய்ப் போகுமாகையாலிந்திரிய நிக்
கிரகம்பண்ணினால்மனம் வெளியிலேபோகிறவேகமொடுங்கி
ச்சாந்திஸ்வரூபத்தையடைந்துமேனு நிருமலமுண்டாகும்—
ஆதலால் மனப்பிரசாதத்துக் கடையாளமிந்திரியங்களை விஷ
யங்களிற் செல்லாதபடி நிறுத்துகிறது, அப்படி நிறுத்தினா
ல் மனதுக்குப் பாகியார்த்தம்பாகங்களொழியும் அப்போது
சித்தமானது தன்னுடைய மலினபாவங்களொழிந்து மெள்ள
மெள்ளச்சாந்தியை யடையுமாகையால் சித்தத்தினுடைய பா

ஷியார்த்தபோகங்களை விட்டொழிகிறதே மோட்ச மென்று மோட்சலட்சணத்தை யறிந்தபெரியோர்கள் சொல்லுவார்கள் ஆகலால்—முமுட்சுக்களுக்குமனோ நிருமலமாகிறதற்குச்சுலபமானது இந்த தபத்தைத் தவிரவேறொன்றில்லை மேலும் இந்தத்தபத்தினால் மனதுக்கு நிச்சலனமும் நிருமலமு முண்டாகுமாதலாலிந்தப் பிராணாயாமத்துக்குத்தக்கத் தேசகாலமிது முதலான நியமமும்வேண்டியபடியினால் புத்திமானாயிருக்கிற வனிதுகளெல்லாமதுக்கு விரோதமென் றெண்ணிச் சித்தசாந்தியடைகிறதின் பொருட்டுச்சோம்பலில்லாமல் இந்தத்தபத்தையே அப்பியாசிக்கவேணும்— இந்தத்தபாப்பியாசத்தால் சகலவிந்திரியங்களுடைய போக்கைநிறுத்துகிறதினாலும்போகபோக்கியங்களைத்தோஷ திருஷ்டியாய்ப் பார்க்கிறதினாலு மீசுவரப்பிரசாதத்தினாலுங் குருப்பிரசாதத்தினாலுங் கொஞ்சகாலத்தில் சித்தசாந்தியடையும்.

வினா - இனி-திதிட்சையாவதேதெனின்,

விடை- பிராரத்தகன்மவேகத்தினால் ஆதியாத்மீகமாதியவுதிகமாதி தைவீகமாகிற தாபத்திரயாதிதுக்கங்கள் தன்னைவந்தடைந்தாலுமதுகளை யெண்ணமல் பொறுக்கிறதே திதிட்சையென்றுசொல்லப்படும்— முமுட்சுக்களுக்குத்திதிட்சைக்குச் சமானமானவங்க ரொட்சைவேறொன்றில்லை ஆகையால் திரபுருஷராளாகவிருக்கிறபேர் களிந்தத்திதிட்சையைக்கவசமாகத்தரித்துக்கொண்டு சகல விக்கினங்களையுந்திரணீகரித்து மாயையைச்செயிப்பார்கள்— இந்தத்திதிட்சையுள்ள பேர்களுக்கியோக சித்தியுமோட்சசாம்பிராச்சியலட்சுமீககபோக சித்தியுமுண்டு, எப்படிப்பட்டவர்களும் திதிட்சையில்லாத வராயின் விக்கினங்களால் அடிபட்டு மரத்தில் நின்றஇலைகளானது பிரசண்டவாயுவினாலே யெப்படி பூமியில் விழுந்து போகுமோ அப்படியே நாசமாகிவிடுவார்கள் திதிட்சையுள்ளவன் தபசியக்கியதீர்த்தம் விரதம் கேவ்விஜசுவரியம் சொர்க்கமோட்ச முதலானதுகளில் எதுகளை யிச்சித்தானோவதுகளையடைவான்— இதுவன்றியும்— பிரமசரியம்அயிம்லைசசாதுக்களைப் பூசித்தல் பிறர்ட்ழிக்கிறத்தைப் பொறுத்தலாகியவிவைகளெல்லாந்திதிட்சையுண்டானவனுக்கே சித்திக்கும் —இந்தத்திதிட்சையானது, சகல சாதனங்களினு முத்தமசாதனமாகையால் எந்தத்தாபத்திரயாதிவிக்கினங்களானதுமிதனால் நிவாரணமாகும்— ஆதலால்தனக்குவருகிற துக்கங்களை திதிட்சையி

னால் பொறுத்துக்கொண்டு சத்தியாநுசாரமாய் மெள்ளமெள் ளச் சிரவணாதிகளைப்பிரயத்தனம் பண்ணவேணும்.

வினா- அப்படிப்பிரயத்தனம்பண்ணித் திட்டமாய் சாதித்ததற் குப்பிரயோசனமேதெனின்,

விடை- பிராரத்தகன்மவேகத்தினால் அனேகருவற்றதுக் கங்களை ப்பொறுக்கிறதே பிரயோசனம்.

வினா- இனி உபரதியாவதேதெனின்,

விடை- சித்தசுத்திக்குச் சாதனங்களாய்க்கண்ட நித்தியநைமித்தி யாதிசகலகன்மங்களையும் வைராக்கியமென்கிற விதியினால்விட் டொழிகிறதே சந்நியாசமென்றும் உபாயமென்றுஞ்சம்புரு ஷர்களுக்குச்சம்மதமாய்ச் சொல்லப்படும்—மேலும் உபரதி யென்கிறசத்தார்த்தமாவது—சகலகன்மத்தியாகம்பண்ணுகிற தற்கேயானதாலிதுவேகன்மசந்நியாசமென்றுஞ்சொல்லப்ப டும்— வேதத்திலுஞ் சகல கன்மத்தியாகமே சந்நியாசமென் று சொல்லப்பட்டிருக்கின்றது இதுவன்றியுங்கன்மங்களினா ற்சாதிக்கப்பட்டலோகாதிகளுக்கும்வேதங்களினால் அனித் தியத்துவங்கேட்டிருப்பதால் நித்தியபலத்தையிச்சிக்கி றபரமார்த்தனுக்குஇப்படியழிந்து போகிறகன்மங்களினாற் பிரயோசனமேதிருக்கின்றது,மேலுங்கன்மத்தினாற்சாதிக்கப்ப ட்டபலம் உற்பாத்தியமென்றும்ஆப்பியமென்றுஞ் சமஸ்காரி யமென்றும்விகாரியமென்றும்நான்குவிதமாயிருக்கும்இதை வி டவேறில்லை நித்தியமாயிருக்கிறபிரமத்துக்கு இந்நான்குங்கூ டாது.

வினா- அதெப்படியெனின்,

விடை- சதசித்தமாயும் சர்வதாதாரணைடந்ததாயும் நிஷ்களமா யும்நிஷ்கிரியமாயு மிருக்கப்பட்ட பிரமத்தையும் பேன்னி னொருவஸ்துவுமில்லையென்று வேதத்தில் நிஷேதிக்கப் படுகிறதுஆகையால் பிரமமுற்பாத்திய மாகமாட்டாது—யா தொருபோகத்தைதயடைகிறவனுக்கு மந்தப்போகத்துக்கும் பேதமுண்டானால்போது அடையப்படுகிறவனாற் போகம டையப்படும் அப்படி பேதமில்லாமல் சர்வதாயத்தனாயடை ந்திருக்கிறபிரமத்துக்கொருக்காலுமாப்பியங்கூடாது—மேலு ம் உலகத்தில் மலினமாயிருக்கிற கண்ணாடிமுதலானதுகளுக்கு த்துலக்குவிக்கிறதான சமஸ்காரியம் மேலும் அப்படியில்லா

மேலாகாசம்போல் நித்திய சுத்தமாயிருக்கிறபிரமத்துக்கொருகாரியகாரியமில்லை— இது ஸகலவிதப் பின்னமாயும் நிட்கிரியமாயுமிருக்கிற பிரமத்துக்கு எந்தத் தோஷங்கட்படாதிருக்கிறது, என்னுடையதுவான நிமித்தோபாதானமாயிருந்தாலதினுடைய டானையவினைப் போக்கச் சகுணகாரியம் வேணும்— அப்படியில்லாமல் வேதத்தில் கேவலமென்றும் நிர்க்குணமென்றும் பிரமத்தைச் சொல்லியிருப்பதால் அப்படி நிற்குணமாயிருக்கிற பிரமத்துக்குக் காரியகாரணத்துவத்தையுண்டென்னக் கூடாது— மேலும், லோகத்தில் பிரவிஷ்டமாயிருக்கிற பஞ்சபூதங்களுக்குப் பரிணாமாதி விகாரங்களுண்டானதுபோலிருக்கினமாயிருக்கிறபிரமம்விகாரியமாகப்பட்டாது.

வினா- அதேதெனின்,

விடை- சுருதியானதுநிஷ்களம் நிஷ்கிரியம்சாந்தம் நிரஞ்சனமென்று வஸ்துவினுடைய தத்துவத்தை யுள்ளபடிசொல்லுகிறது— ஆகலால்கர்மத்தினால் சாதிக்கப்பட்ட உற்பாத்தியவிகாரங்கள்பிரமத்துக்கொருக்காலுஞ்சொல்லக்கூடாது.

வினா- பிரமம்கன்மத்தினால்தான்சாதிக்கப்பட்டதோவெனின்,

விடை- கன்மம், அசத்தியம்- பிரமம், அநாதி நித்தியமாகையால் கன்மத்தினாற்சாதிக்கப்படுகிறதல்ல.

வினா- கன்மசாத்தியமானதை அசத்தியமென்கிறதெப்படியெனின்,

விடை- கன்மத்தினாலுண்டாக்கப்பட்டிருக்கிறதேகாதிப்பிரபஞ்சம் இகத்திலெப்படி யழிந்துபோகுமோ அப்படியே புண்ணிய கன்மத்தினாற்சம்பாதிக்கப்பட்ட பரலோகங்களானது அழிந்துபோகும் சகலருக்குஞ்செய்யப்படுகிற கிருத்தியங்களழிந்து போகுமென்கிற எது ஜாக்கிரதையாய்த் தோற்றிக்கொண்டிருக்கின்றது ஆகையால் கன்மசாத்தியமானசொர்க்காதி லோகங்களைவித்துவானாயிருக்கிறவன் நித்தியமென்று மோகப்படான்— மேலும் ஜகத்காரணமான பிரமம் நித்தியமென்கிறது சகலருக்குஞ்சம்மதம் சுருதியிலுமிந்தப் பிரமந்தானே ஜகத்காரணமென்றும் சொல்லுகிறது, அதினுஞ் சாமவேதோபநிஷத்தானது, சகலமும்பிரமமென்றுஞ்சத்தியமென்றுஞ்சொல்லி அந்தப்பிரமத்துக்குத்தானே நித்தியத்துவமுஞ்

செகத்காரணத்துவமுந் நித்தியமாய்ச் சொல்லுகின்றது ஆகையாற் பி
ரமமேசர்வநித்தியமென்கிறதிற்சந்தேகமில்லை, மேலும்வேதவா
க்கியமானது கன்மத்தினாலும் புத்திரனாலும் தனத்தினாலும்
மோட்சம்வாராமாட்டாதென்று கன்மாதிகளைப்பிரத்தியட்சமாய்நி
ஷேதிக்கின்றது—ஆகையால் எவனொருவன் பிரத்தியக்ஷமான
வது பிரமவித்தென்று சதாவிசாரித்துச் சகலகன்மமுந் நிஷே
த்தம் பண்ணுகிறானோ அவனுக்குப்பரப்பிரமலட்சணமான கை
வல்லியஞ்சித்திக்கும் அதுதவிர கங்காஸ்நானங்களினாலுந் தீர்
த்தஸ்நானங்களினாலுந் தேசாடனங்களினாலுஞ் சாந்திராயண முதலான த
பசுகளினாலும் அசுவமேதாதி யக்கியங்களினாலும் பிறகுதேவதா
திகளினாலும் பிரமத்தையடையமாட்டானென்பது நிச்சயம்—
ஞானத்தினால் மோட்சமென்றுஞ் சகல கன்மங்களையும் நிஷே
த்துஞானமே மோட்சமேவது என்றுஞ் சுருதியிற் சொல்லுகி
ன்றது—அப்பா, விவேகியாகவும் விரக்தனாகவும் பிரமமே நித்
தியமென்றறிந்தவனாகவும் பிரமத்தையடைவேனென்கிற இ
ச்சையுடைத்தாயிருக்கிறவனாகவுமிருக்கின்ற புருஷனுக்கு அ
நித்தியமாயிருக்கிற கன்மசாமக்கிரியங்களில் பிரீதிவாராமாட்
டாது—ஆகலால் அநித்தியமான சொர்க்காதிசாதனங்களாய்ச்
சொல்லப்பட்டிருக்கிற நித்திய நைமித்திகாதி சகல கன்மசாத
னங்களையும் பிரமபதமடைய வேணுமென்கிற முமுட்சுவான
வன் தன்றுப் விட்டொழியவேணும்.

வினா- முமுட்சுவானவனுக்குச்சாதனங்களேதெனின்,

விடை- இரண்டுகையுடையவனுக்கு எப்படிதன்னுடன் சகல
காரியமுஞ் சாதிக்கப்படுமோ அப்படியேபோலச் சிரவணாதிக
ளே சாதனம், மேலும், தீபமானதைத் தூண்டிக்கொளுத்தா
லெப்படி பிரகாசமாமோ அப்படியே சிரவணத்தினால் ஞா
னமும் பிரகாசிக்கும் மோட்சத்துக்குச்சாதனம் ஞானமென்
று பிரமவித்துக்கள் சொல்லியிருப்பதால் ஞானத்தை நிச்சி
த்தமாயப்பியாசம் பண்ணவேணும்—அப்பா விசிஷ்டமாய்ப்
பண்ணவேண்டிய கன்மங்களை முமுட்சுவானவர்க ளெப்ப
டிவிடப்படுமென்று மூடர்களைப்போல் நீயுஞ்சங்கை பண்
ணவேண்டாம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- கன்மத்தினுடையபலம் வேறு ஞானத்தினுடைய பல
ம்வேறு கன்மசாமக்கிரியம் வேறு ஞானசாமக்கிரியம் வேறு

கன்மாதிகாரியென்று ஞானாதிகாரியென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வினா- அதெப்படியெனின்,

விடை- ஆசையுடன் கூடினவன் கன்மாதிகாரி, நிராசையுடன் கூடினவன் ஞானாதிகாரி, ஐசுவரியவானாகவுஞ் சாமர்த்தியவானாகவுமிருக்கிறது கன்மாதிகாரியினுடைய லட்சணம், நிர்வாணதிசையைப் பொருந்தினவனாயிருக்கிறது ஞானாதிகாரிலட்சணம்— மோட்சத்துக்கதிகாரி இகமுத்திரார்த்த பலபோகத்திலே பாசையில்லாத ஞானியாகிய சந்நியாசி, கன்மம் அனேகதிகாரிகிரகமாகிய வீடுடையவன்— கன்மிக்குச் சாதனம் யஞ்ஞாதி வேதவிக்கியபாத்திரங்கள், ஞானிக்குச் சாதனம் குரு சிரவணத்தைத்தவிர வேறு சாதனமில்லை— கன்மத்தினால் நாளாய் மேன்மேலும் அகங்காரம் விருத்தியடையும் ஞானமான சிரவணத்தினாலடிக்கடியகங்காரமழிந்துபோம்— கன்மசாத்திரமானது பிரவிருத்தியைக் கொடுக்கும் இதையனுட்டிக்கிறவதிகாரிகளுக்குமொன்றுக்கொன்று பின்னமாயிருக்கும்— கன்மிக்கும் ஞானிக்குமொருத்தருக்கொருத்தர் கூட்டுறவுமில்லை, கன்மிக்குச் சாமக்கிரியம்புறம், ஞானிக்குச்சாமக்கிரியம் அகம், ஞானம் உயர்ந்த கதியைக்கொடுக்கும், கன்மம் அதோகதியைக் கொடுக்கும், அப்படிப்பட்ட ஞானகன்மங்களிரண்டையுமொன்றையொன்றெப்படியபேட்சித்திருக்கும் ஒன்றிலேயொன்றெப்படிக்கூடியிருக்கும். அக்கினிக்குந்திரணத்துக்குமிருட்டுக்கும்பிரகாசத்துக்குமெப்படியொன்றுதல் கூடாதோ அப்படியே ஞானகன்மங்களுக்குமொன்றுதல் கூடாது, ஒன்றுக்கொன்று சத்துருக்களானதால் ஒன்றுக்கொன்று எப்படியதிகமாயிருக்குமாகையால் ஞானத்தின் சந்நிதான விசேஷத்தினால் கன்மமானது மறைந்துபோம், கன்மத்தினால் ஞானமறைபடமாட்டாது.

வினா- அதெப்படியெனின்,

விடை- அனேகமாயிரங்கோடி விறகுகட்டுப்போட்டெரித்த அக்கினிஜ்வாலையானதும் சூரியபகவானுக்கெவ்வளவாகிலுமறைப்பாகிறஉபகாரம்பண்ணமாட்டாதெப்படியோ அப்படியேலட்சசகஸ்ரகோடி கன்மங்கூடியும் ஞானத்தைமறைக்கமாட்டாது, அந்தக்கன்மங்களும் — ஞானத்துக்குள்ளே யொடுங்கிப்போம் ஒருபுருடனிடத்திலாசிரயித்துக்கொண்டிருக்கிறவிரண்டுவகைகளுங்கூடித்தொழிற்செய்யும் அதுபோல்ஞானக்

ன்மங்களொன்றுங்கூடத்தொழிற் செய்யமாட்டாது — கன்மங் கர்த்ருதந்திரம், ஞானம்வஸ்துதந்திரம், கர்த்தா விருத்தக்கன்மங்கள்செய்யவுஞ்செய்யாதிருக்கவுங்கூடும் அப்படி வஸ்துவைக்குறித்த ஞானத்துக்கொருகாலுங் கர்த்ருதந்திரங்கூடாது — ஒருவன் வஸ்துவை, கண்ணுக்கெதிராகவெப்படிக்காணுகிறதோ அப்படியே ஞானமானது அனுபவப்பிரமாணங்களினுண்டாகும் அதுதவிரக் கன்மங்களைப்போலப் புத்தியைப்பற்றியதல்ல, ஆதலால் ஞானம் வஸ்துதந்திரமென்கிறதிற் சந்தேகமேதிருக்கின்றது, பெரியவர்களாலும் ஞானம் வாஸ்துவமல்லவென்று சங்கிக்கக்கூடாது.

வினா- அதெப்படியெனின்,

விடை- லோகத்தில் பிரத்தியட்சப் பிரமாணமாய் பதார்த்தத்திற்சமுசயாதிகளெப்படி வாஸ்தவமாயில்லையோ அப்படியே அனுபவப்பிரமாணமாய்க் கண்ட ஞானமும் ஸம்சயாதிகளில்லாமல்சத்தியமாயிருக்கையால் வாஸ்தவமல்லவென்பது கூடாது, நித்தியசித்தமாயும் நிரவயவமாயுமிருக்கின்ற பரப்பிரமம் அவனவன் தன்மனதிலேயனுபவமாய்க்காண்கிறபோது வேறொருதோஷமிலுபேட்சியாது.

வினா- அதெப்படியெனின்,

விடை- கண்ணினாற்பார்க்கிறரூப ஞானமானது நன்றாய்ப்பார்க்கிறபோது மற்றொன்றில்கூடாமல் பிரத்தியட்சமாயெப்படித் தோற்றப்படுமோ வப்படியே சந்தேகமறத் தோற்றுமன்றி வேறொன்றிற்செல்லாது ஒருபுருஷன் ரூபத்தைப்பார்க்கிறதற்கு நயனத்தைத் தவிர வேறொன்றை யெப்படியபேட்சிக்கவில்லையோ அப்படியே பரப்பிரமவஸ்துவைப்பார்க்கிறதற்கும் பிரவணாதிகளுண்டாகிற ஞானத்தைத்தவிர வேறொரு தொழிற்செய்யத்தேவையில்லை — கர்த்துருவினுடையகாரியங்கண்மம், அதினுடையகாரியங்கள் சுபாசுபங்களினுகளைப் பிரமாணமாயறிகிறது அனுபவமானதாலிந்தஜென்மத்துமாயா காரியமென்பதிற்சந்தேகமில்லை — ஈசோபநிஷத்தில் வித்தையவித்தையிரண்டையுமொருமித்துச்செய்யவேணுமென்று சொல்லியிருப்பதுங் கன்மோபாசனையைச் சொல்லியதே தவிர ஞானத்தையுங் கன்மத்தையுமொருமைப்பாடாய்ச் சொல்லவில்லை — ஆகையால் நித்தியாநித்தியவஸ்துவிவேகமும் இகாமுத்திரார்த்தபலபோகவிராகமுமில்லாமலிருக்கிறவனுக்கேகன்மோபாசனை பண்ணுகிறது சாதவம் தீவிரவைராக்கியம் பொருந்திப்புத்திசாலியாய்ப் பிரமாணத்தத்

தைவிரும்பின முமுட்சுவுக்குக் கன்மங்கள் தேவையில்லை — யாதொருவனுக்குமோட்ச விச்சையிருந்தபோது தீவிர வைராக்கிய முண்டாகுமோ அப்போதே கன்மசந்நியாசம் பண்ணுகிறது கடமையம் — ஆகையால் புத்திமான்களிதே பிரமாணமென்று நிச்சயிக்கவேண்டும்.

வினா. அதெப்படியெனின்,

விடை — அமோட்சஞானத்துக்குக் கன்மசாதனங்கள் தேவையில்லையென்று வேதங்களால் நிஷேதிக்கப்படுகிறது. கீதையிலும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூடத்தானவர் வேதத்திலும் தபசிலும் காணப்படுகிற வசல்லொன்று சொல்லியிருக்கிறார் — மேலும், சுருதியில்பிரவிருத்தியென்றும், நிவிர்த்தியென்றுயிரண்டு விதஞ்சொல்லி யிருக்கின்றது, அதிற்பிரவிருத்தியினால் மனுஷனுக்குப் பெந்தமும் நிவிர்த்தியினால் மோட்சமுமாகையால் மோட்சத்தைவிரும்பினவர்கள் கன்மசந்நியாசம் பண்ணவேணுமே தவிர ஞானகன்மங்களிரண்டையு மொன்றாய்க் கூட்டுகிறது ஒருக்காலுங் கூடாது ஆகையால் ஞானம் வேணுமென்கிறவன் சகல கன்மங்களையும் விடவேணும் யாதொருவன்கன்மங்களைச்சாதனமென்றும்இட்டமென்றுங்கிரகித்தானே அவன் அந்தவஸ்துக்களழிந்துபோமென்று நன்றாய்த் தெரிந்தபோதிலுமே நாசப்படுவான் — உபாதிசத்தாரித்துமானது மூன்கண்டயாதொருவிடயவஸ்துக்களையும் விட்டொழிகிறதாகையால் அந்த உபாதிமுக்கியமென்றுங்கௌணமென்றும் தொழிலேனுவிரண்டுவிதமாகும்.

வினா — அதேதெனின்,

விடை — விருத்திக்குத்திரிசியமான விஷயங்களைப்பரித்தியாகம் பண்ணுகிறதே முக்கியோபாதியென்றும் வேதாங்கங்களாயிருக்கிற கன்மங்களை விடுகிறதே கௌணோபாதி யென்றுஞ் சொல்லப்படும்.

வினா — அதேதெனின்,

விடை — யாதொருபுருஷனும் பிரதானமான உபாதி சித்தியார்த்தமாகும் பொருட்டுவேதாங்கமான கன்மங்களைச் சந்நியாசம் பண்ணவேணும் அந்தக்கன்மசந்நியாசமான அங்க ஹீனமானால் பிரதான உபாதிசித்திக்க மாட்டாது — ஆதலால் இ

இகாமுத்திரார்த்த பலபோகங்களில் நன்றாய் விரத்தி வந்தவுடன் கன்மசந்நியாசம் பண்ணவேணும் அப்படியே வைராக்கியமில்லாமல் கன்மசந்நியாசம் எவன்பண்ணுகிறானோ அவனுக்குச் சண்டாளனாயிருக்கிறவ னிடத்தில் வேதமந்திரங்க ளுபதேசித்தாலெப்படிப்பலமில்லாமல் நிஷ்பலமாய்ப் போகுமோ அப்படியே நிஷ்பலமாய்ப்போகும், மோட்சம் வேணுமென்று ஒரு தேவதையைக்குறித்துக் கழுத்தையரிந்துகொள்ளுகிறவனெவனோ அவனுக்கும், கங்காப்பிரவேசமாகிறவனுக்கும், புத்திர தேகாதிகளிடத்திலெப்படி வெறுப்போ அப்படியவனுக்குவிரத்திவருகின்றதோ அவனுக்குச்சந்நியாசங் கூடுமன்றி யிதராளுக்குக் கூடாது—ஆகையால் வைராக்கியம் வந்தவன் சந்நியாசம்பண்ணவேணும்மற்றவன் கிரகத்திலேயிருக்கவேணும், சந்நியாசம் பண்ணியும் விஷய விச்சையிருந்தானால் நரகங்களில்வாதைப்படுவான்—ஆதலால்சகலகன்மங்களையும்விட்ட சந்நியாசியானவன் பூர்வங்கிரகஸ்தனாயிருந்தாலும்போனதான விஷயவாசனைகளைவாந்தியசனம் போல் வெறுப்பாயெண்ண வேணும்.

வினா- இனிசிரத்தையாவதேதெனின்,

விடை- குருவேதாந்த வாக்கியங்களில் சத்தியபுத்தியுண்டாயிருப்பதே மோட்சசாதனமான சிரத்தையென்று சொல்லப்படும், இந்தச் சிரத்தையுள்ளபுருடரெவர்களோ அவர்களுக்கேபுருஷார்த்த சூட்சமமாயும்பரமதத்துவமாயுமிருக்கிற சித்தியுண்டாகும் இதராளுக்குண்டாகமாட்டாது, சாமவேதோபநிஷத்தி லுத்தாலகரிஷியானவர் புத்திரனாயிருக்கிற சுவேதகேதுவைப்பார்த்து அப்பாநீ சிரத்தையைப்பொருந்தியிருவென்று சொல்லியிருக்கிறார்—ஆகையால்யாதொருவனுக்குஞ்சிரத்தையன்றிச் சன்மார்க்கப்பிரவிருத்தியில்லை, சன்மார்க்கப்பிரவிருத்தி யில்லாதவனாயினதுதானே சாதிக்கப்பட்ட புருடார்த்தமில்லை, அந்தப்புருடார்த்தசித்தியாகில் அசிரத்தையிருந்தால்சகலஜனங்களுமடிபட்டுச் சமுசாரசாகரத்தில் மூழ்கிப் போவார்கள்—ஆதலால் வேதத்திலுங் குருவினிடத்திலும் தெய்வத்தினிடத்திலும்மந்திரத்தினிடத்திலும்தீர்த்தங்களிடத்திலும்மகாத்துமாக்களிடத்திலுமெப்படி யெப்படிவிசுவாச மிருக்கின்றதோ அப்படியப்படியே சித்திக்கும்—அப்பா வஸ்துசத்பாவநிச்சயத்தினால் பிரமமுண்டென்றறிய வேணுமந்தச் சத்பாவ நிச்சயம் சாத்திரகுருசித்தமான சிரத்தையினால்வரும்— ஆ

கையால் குருவேதாந்தவாக்கியங்களில் சிரத்தையுண்டான முமூட்சுவுக்கேபலஞ் சித்திக்கும்அதுதவிரச்சித்தியாது.

வினா- அந்தச் சிரத்தை பிரவிருத்திக்கிறதற்குக்காரணமேதெனின்,

விடை- ஸ்ரீ சற்குருசொன்னவார்த்தைகளை யெதார்த்தமா யெண்ணுவதேகாரணம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- வேதமீசுவரவாக்கிய மென்பது, எதார்த்தமென்கிறதில் சந்தேகமெப்படியில்லையோ அப்படியேமுமூட்சுவாயிருக்கிறவனுக்குச் சற்குருவும் ஈசுவரசொரூப மானதாலவர் வசனமும் யெதார்த்தமே—சற்குருவேதாந்த வாக்கியங்களினால் யுத்திமான்களாயிருக்கிற சற்புருடனுக்குச் சிரத்தையானது சித்திக்கும்.

வினா- இனிசமாதானமாவதேதெனின்,

விடை- வேதத்திற் சொல்லபட்ட அர்த்தமறிகிறதின் பொருட்டு வித்துவாம்சிகளாயிருக்கிறபேர்களுக்கு அறியவேண்டியவஸ்துவினிடத்திற் சித்தத்தைநன்றாய் நிறுத்துகிறதே சமாதான மென்றுசொல்லப்படும்.

வினா- இதற்குக்காரணமேதெனின்,

விடை- சித்தம், சாத்தியமான பிரமத்தினிடத்தில் நிலைத்திருப்பதேபுருடார்த்தமான நியமத்துக்குக்காரணம் அதுவன்றிவேறொன்றினாலுஞ் சாதிக்கப்பட்டசாத்தியஞ்சித்தியாது, சாத்தியமானது சித்தியாதபோதுமனதுசஞ் சலப்படும் மனதுசஞ்சலப்பட்டால்பண்ணினபிரயத்தினம்பலியாது, ஆகையால்சித்தமுந்திருஷ்டியுங்கரணமும்ஒருமைப்பாடாயொருவிடத்திலேநிறுத்தினால் அந்தலெட்சியம்பொருந்தும் அதுதவிரவொன்றுகுறைந்தாலும்லெட்சியம் பொருந்தாது,

வினா- எப்படியெனின்,

விடை- தனுநாணிலேபூட்டினவம்பானது குறிதப்பினாலெப்படிதப்பியதோவப்படியேவியர்த்தமாய்ப்போம்—அஃது சித்திக்குஞ் சித்தசமாதானமே அசாதாரணகாரணமானதால் முமூட்சுக்களாயிருக்கிற பேர்களிந்தச் சமாதானத்தில்சதா நிலைத்திருக்கவேணும் மிகுந்ததீவிரவைராக்கியமும் பிரமத்தையடையவே

றுமென்கிறவிசாரரூபமாகியவிவிரண்டுஞ்சாக்ஷாத்காரத்துக்குக் காரணம்மேலும்பிரமனைவஸ்துவையடைகிறதற்குப்பாகியாங்க மென்றும் அந்தராங்கமென்றுமிரண்டங்கங்களுண்டு அவற்றுட் பிரமசரியயோக்கியதாதி பாகியாங்கமென்றுஞ்சமாதிசட்கசம்பத்தி அந்தராங்கமென்றும்பெரியவர்களறிந்துசொல்லுவார்கள் — பாகியாங்கத்தைக் காட்டிலுமந்தராங்கம் வலிதாயதால் சொரூபத்தைப்பற்றியவேண்டியவனந்தராங்கமானசமாதிசட்கத்தைப்பிரயத்தனமட்பியாசிக்கவேணும் — யாதாமொருவனந்தராங்கமப்பியாசியாதபடிக்குக் கேட்டிருந்தசிரவணம் பண்ணினாலுஞ்சொரூபநிட்டைபொருந்தாது.

வினா- எப்படியெனின்.

விடை- தைரியமில்லாத புருஷனுக்குச் சகலவாயுதமிருந்தாலும் யுத்தமுகத்திலெப்படிபலியாதோ அப்படியேபாலென்றறி.

நான்காஞ்சாதனம்.

வினா- இனிமுமூட்சுத்துவமாவதேதெனின்,

விடை- எந்தவிவேகியானவன் பிரமாணமாய் வைராக்கியானுபவஞானத்தினால் சமுசாரபெந்தத்தை விடவேண்டுமென்றெண்ணியிருக்கிறானோ அவனை முமூட்சுவென்று சொல்லப்படும், அப்பாசகல சாதனங்களுக்குள்ளுதம் முமூட்சுத்துவமூலகாரணம் அந்தமுமூட்சுத்துவத்திலிச்சையில்லாமலுநிற்பிரவிருத்தி யில்லாமலும் வைணிருக்கிறானோ அவனுக்கு வேதாந்தசிரவணமும் அதன்பலமும் வரமாட்டாது — இந்தமுமூட்சுத்துவமானது தீவிரமென்றுமந்தமென்றுமத்தியமென்றும்அதிமந்தமென்றும்நாலுவிதமாயிருக்குமென்றுபெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது.

வினா- அதேதெனின்,

விடை- அனேகரூபமாயிருக்கிற அதிதாபத்திரயங்களினால் நித்தியமுந்தாக்கப்பட்டு வெகுவாயந்தக்கரணங்கலக்கமடைந்து பெண்டுபிள்ளைபண்டபதார்த்தங்களையனித்தியமென்றெண்ணிச் சுட்டசட்டிகைவிட்டதுபோல் விட்டொழிகிறவனெவனோ அவனைத்தீவிர முமூட்சுவென்று சொல்லப்படும் — மேலுமெனுந்தன்னைவந் தடைகிறதாபத்திரயங்களைக்கண்டுஞ் சொரூபத்தினுடைய நிலவரங்கண்டும் பெண்டுபிள்ளைபண்டபதார்த்தங்களைவிட்டொழியமாட்டாமல் சஞ்சலம்பொ

ருந்திய மனதுடன் கூடியிருப்பவனெவனோ அவனே மத்திம முமூட்சுவென்றும், மோட்சமடைகிறதற்குக் காலவிளம்பமில்லாமல் பின்றுமே யிருக்கின்றது இப்பேர்த்தீவிரமென்கை, போசக்கோ டெல்லாம்பொசிந்துச் சுகைபிரயத்ன வியாபாரமுஞ் செட்டு முடித்து அதற்குமேல் மோட்சத்தைப் பண்ணுவோமென்று ன்னியிருக்கிறவனெவனோ அவனே மந்தமுமூட்சுவென்றும் வழியார்க்கம்போகிறவனுக் கெதிரே பொன்கிடைத்தாற்போல வனுக்குமோட்சம் கிடைத்ததானால் நான் கிருதார்த்தனாகுவேனாதலால் சந்தியில் பிரயத்தனம் பண்ணவேண்டிய தென்னெவன்று மூடபுத்தியாயிருக்கிறவனெவனோ அவனே அதிமந்த முமூட்சுவென்றுஞ் சொல்லப்படும்—ஆகையால் மேலேகண்டயிரண்டு சென்மங்களில நல்வினைபாராதிருந்தால் மனோவலித்தன் நிவிர்த்திக்காய் சகல சாஸ்திரங்களையுங் கற்றறிந்து குணமீதென்று தோஷமென்று சொர்தாபேதகப்பாதகங்களிலாசைய புரித்தாதிக்கியாதிக்கியபடி கிருத்தியத்தையும் திருந்த மோட்சகாமனாய் அக்கினியிலிடப்பட்டதிறந்தவனுக்கு தேகட்டவன் உடம்பை யருவிப்பானடிபெட்டியதிலே கரும்பிலிட்டுவிட்டு ருமே அப்படியே தீவிர மோட்சவிச்சையிருந்தால் கிரகாதிகளை மயவன் விடுவிப்பிருமே அவனிருக்கிசைவைமரணங்களை கிறசுமூசாரத்தைக்குறுக்கோட்டிருந்து டவேலைவிட்டு ப்ரியன்—ஆகையால் யாதொருவன் தீவிர முமூட்சுவாயிருக்கிறானோ அவனந்தச் சென்மத்திலேதானே சிவன் முத்தனாவான், மத்திமனானவன் சென்மாந்தரத்தில் மோட்சமடைவான், மந்தனானவன் பலசென்மங்களில் முத்தியடைவான், அதிமந்தனானவன் கற்ப கோடிகாலங்களினாலும் முத்தியடையமாட்டான்—அப்பா! நானுனக்கு போதிக்கப் போகின்ற சாதனங்களுக்குச் சாதியாகவேயிருக்கப் பட்டவர்கள்இவ்வுலகில் மனுஷர் செய்சென்மமெடுக்கப்பட்டது மகா துர்லபமென்று பெரியோர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலும் புத்தி சொன்னபடியிலாமல் புருஷசென்மமாயிருக்கிறது மகாதுர்லபம் அதிலும் பிராமணனாயிராமல் விவேகத்துடன் கூடியிருக்கிறது மகாதுர்லபமான ஞானத்தையடைந்தவனாகவிருந்து அதன் பேரும்போரும் பெருகின்ற வைராக்கியத்துடனே கூடியிருந்த அறிவுடன் மூட்சுவையுடைய தீவிர வைராக்கியத்துடனே கூடியிருந்த தீவிரவை ராகியத்துடனே கூடியிருந்தயைடகி

றதின்பொருட்டு இந்தத்தீவிரமோட்சவிச்சையையேயத்தனம்பண்ணவேணும்—அப்பா! புத்திரமித்திரகளத்திராதி சுகபோகங்கள்ஜென்மங்கடோறுமுண்டாகும் அதில்மனுஷஜென்மமும்மனுஷஜென்மத்தில் புருஷஜென்மமும் அதில்விவேகமுங்கிடைக்கமாட்டாது—ஆகலா லரிதாயிருக்கிற மனுஷஜென்ம மெடுக்கிறதிலும்புருஷஜென்மமெடுத்துப்புருஷஜென்மத்திலும் நித்தியாநித்தியமீதென்றுபகுத்தறிகிற விவேகத்தையடைந்தவன் நித்தியத்தைப்பொருந்தாமலிகலோகவிச்சையைப்பொருந்திவிட்டானானாலப்படிக்கொத்தவற்புத்தியோடேகூடின பருடன்றனது ஜென்மத்தைச்சுடவேண்டுமென்பதிற்சந்தேகமில்லை.

வினா- அதேதெனின்,

விடை- மிருகபட்சியாதிகள் தினந்தோறும் பெண்டுபிள்ளையோடேகூடிப் போகமாகிய விஷயாதிசுகங்களைப் புசித்துக் கொண்டிருக்கின்றன, அந்தச் ஜென்மங்களும் இகலோகசுகத்தையிச்சித்திருக்கிற துர்மார்க்கர்களுடைய ஜென்மங்களுஞ்சரியானதால் தீவிரமோட்சவிச்சையுள்ளவர் திரும்பவுமிகலோகசுகத்தை இச்சிக்கலாகாது—அப்பா! சரீரத்தில்ரோகம் விருத்தாப்பியம் வந்தடுக்கிறதற்கு முன்னும் புத்திரனமாகிறதற்கு முன்னும் மிருத்துவைப் பார்க்கிறதற்கு முன்னும் இந்ததானமான சஞ்சலமில்லாமல் வேதாந்த சாரத்தைக்கிரகிக்கிறதில் வேகமுள்ளவனை விவேகி சீக்கிரமாக முத்தியடைகிறதின்பொருட்டுத்தீவிரமோட்ச விச்சையில் பிரயத்தனம்பண்ணவேணும்—உலகத்தில்தேவர்களெண்மர் ரிஷிகளெண்மர் பிதிர்க்களெண்மர் இதுவுமன்றியில்மனுஷாளைந்தக்கோடியுண்டு. அதில்ஜெனனமாகிறபெந்தத்தைநன்றாய்விட்டுவிட்டுமிரமதிஷ்டனாயிருக்கிறவனொருவனிருப்பானென்றறி—அப்பா அந்தப் பெந்தத்தினால் கட்டுப்பட்டிருக்கிற வனுக்குப்பாகிய பெந்தம்விட்டதினால்பிரயோசனமேதிருக்கிறது ஆனதாலந்தப்பெந்தத்தைவிட்டுவிடுகிறதின் பொருட்டெந்தத்தொழிற்செய்யவேணுமோ அந்தத் தொழிற்செய்கிறபேர்களோடே கூடி அதுசெய்யவேணும்—அந்தத்தொழிலினுடைய ஒருமிப்பே தீவிரமோட்சவிச்சையென்றுசொல்லப்படும் அதைவிட அன்னியமான தெல்லாஞ் சொல்லுக்குயோக்கியமானதேது தவிரச்சுருதிசம்மதமில்லை—ஆனதால் கிரகபுத்திரதனாதிகளை யெல்லாம் அனித்தபுத்தியாயெண்ணிவிட்டுப் புருடசவுக்கிய விச்சை

யினால் மிர்தமாய்ப்போன புருடனோடேகூட அக்கினிப்பிரவேசம் பண்ணுகிற ஸ்திரீகளுக்குத் திடவைராக்கிய மெப்படிபொருந்திற்றோ அப்படி தீவிரவைராக்கியம் பொருந்தியிருக்கிறவனுக்கே மோட்ச இச்சையானபலன்சித்திக்கும்,

வினா- இந்தமோட்சவிச்சாபலன்சித்திக்கிறதற்குக்காரணமேதெனின்,

விடை- நித்தியாநித்திய வஸ்து விவேகமாந் தேகத்திலிடத்திலனித்தியத்துவபுத்தியிருக்குமவிடத்தில்வருகிற பயமும் பயத்தினாலுண்டாவதாபமுமறிகிறதேகாரணம், ஆயினும் வைராக்கியம் வருகிறதற்குக்காரணம் நித்தியாநித்திய வஸ்துவிவேகமே, சந்நியாசத்துக்குக்காரணம்தீவிரவைராக்கியம், சிரவணாதிகளுக்குக்காரணம்சந்நியாசம், ஞானத்துக்குக்காரணம் சிரவணாதிகள் என்றறிந்த இந்தஞானமானது மோட்சத்துக்குக் காரணமாதலிதற்குமுன்சொன்னலட்சணங்களைப்பொருந்தின விவேகிகளெச்சதாகாலமும் பசனைபண்ணவேணும்— அப்பால் நித்தியாநித்தியவஸ்துவிவேகமே சிரசு, இகமுத்திரார்த்த பலபோகவிராகமேகழுத்து, வைராகமேசரீரம், சமாதிசட்கசம்பத்தியேஅங்கங்கள், முமுட்சுத்துவமேபிராணனென்றுசொல்லப்படும்— இப்படிக்கொத்தவடிவுடனே கூடியசொரூபத்தை யறியவேணுமென்று புத்திசாலியானவன் ஞானகுரு வேதாந்தவாக்கியங்களாகிற சாணையில் தீட்டப்பட்டநல்லஞான மென்கிறவாளினால் மிருத்துவைச்சங்கரிப்பன்— ஆனதால்அப்படிசொல்லப்பட்ட சாதனசதுட்டயசம் பத்தியுள்ளவனு யான்மாவை யடையவேணுமென்கிற புருடன்தன்னையறிகிறதின் பொருட்டுக்குருவைக்குறித்து உபசாரபாணியாகவொடுக்க வணக்கத்துடன் போகவேணும்.

## ஆசாரியலட்சணம்.

வினா- அந்தக்குருவானவரெப்படியிருக்கவேணுமெனின்,

விடை- சகல வேதார்த்தங்களை யறிந்தவராயும் பிரமநிட்டைபொருந்தினவராயும் சாந்தியுடையவராயுஞ் சத்துருமித்துருசமசம்பன்னராயும் மதவகங்கார மில்லாதவராயுஞ் சீதோஷ்ணசமத்துவம்பொருந்தினவராயும்விடயாசத்தியில்லாதவராயும் ஒன்றின்மேலபேட்சியாதவராயும் ஆசாரசாமர்த்தியமுள்ளவராயுமிருக்கிறவரெவரோஅந்தப்பிரமநிஷ்டரேசிரேஷ்டமான சற்குருவாம்— அப்படிக்கொத்த சற்குருவைத்தன்னை யறிய வேண்டினவன் அந்தவஸ்து சித்திக்கும்பொருட்டுஅவரிடக்

குருவிடம் விசாரித்து அந்தக்குருவினுடைய சாதனாதிகளையவேனும் அனேகங்கோடி ஜென்மங்களினுமன் புண்ணியவடிவை கிரலட்சணம் பொருந்தியிருந்த பக்தியே மேலிட்டு வீட்டினைப் பூஜைபண்ணப்பட்டுச் சாந்தாதிக்கலைவராய் தயவினுல் பிரத்தியட்சமாகக் குருருபங்கொண்டு இடன் பரிசைக் கேள்வீட்டப்பட்டுத்தத்துவத்தை நேராகக்காட்டுவித்து அந்தச் சிஷ்யனைச் சுயஞ்சாரமாகிறதுக்கசமுத்திரத்தைக் கடக்கப்பண்ணுவார் — ஆனதால் சாட்சாத்சிவமே குரு, குருவே சிவம் ஆகையால் முமுட்சுக்களாயிருக்கிறபேர்களிந்தவிருவரையும் பேதபுத்தியாப்பார்க்கலாகாது — அப்பா! அவித்தியாருபமான இருளை நிவர்த்தியாகிற பாசபந்தங்கள் எவரால் விமோசனமாகின்றதோ அவரே குருவென்று குருசாஸ்திரத்தையறிந்த பெரியவர்கள் சொல்லுவார்கள் — ஆகலால் கிருதகிருத்தியனுகியும் பொருபுத்தனுகியும்பிரதிட்டனுகியுமிருக்கிறகுருவைத்தேடிப்போய் — னும், ஸ்ரீ சற்குருகடாட்சத்தினலேகாக்கும் இருக்கிறசம்சாரசாகரமானது பசுவினுடைய குளம்படிபோலேயாகும் ஆகையால்பணிவிடையினுலுஞ்சகல பக்தியினுலும் சந்தோஷப்படுத்தினும் வணக்கமுள்ள உத்தரவினுலும் குருவைத் தம்வசத்தில் பிரீதியுள்ளவராக்கிக்கொண்டு அறியவேண்டிய சொருபநிச்சயத்தைக்கேட்கவேண்டும்,

## சிஷ்யலட்சணம்.

சிஷ்- ஐய், கருணைக்கடலாயிருக்கிறசுவாமீ! பவமாகிறசமுத்திரத்தைக்கடக்கிறதற்குத்தேரிற தெப்பமாயிருக்கின்றது ஐயசுவாமீ! பரிதாபமுள்ளவர்களுக்கும் பாவிருக்கிற சற்குருவை ஆசிரயித்தவர்கள் சம்சாரசாகரத்தைக்கடந்தார்கள். ஜென்மாந்தரத்தில் நான் செய்த அனேகந்தப்புண்ணியபலத்தினலின்றைக்கு நீர் எனக்குப் பிரத்தியட்சமானீர் அடியேனும் தேவரீருடைய கிருபைக்குப் பாத்திரனானேன் — பிரம விஷ்ணுக்களாயிருக்கிற உங்கள் பார்வையானது நேத்திரங்களுக்குச் சந்தோஷமும் சித்தத்துக்குப் பிரசன்னமும் அந்தக்கரணத்துக்கு ஆனந்தமும் கொடுத்துமோக பாசத்தையறுத்து ந்திலைமையுங் கெடுக்கும் — பதினாயிரஞ் சந்திரர்கள் பதினாயிரஞ் சூரியர்கள் பதினாயிரமக்கினிகள் கூடியும் அந்தமில்லாதிருக்கிற அஞ்ஞானமான உள்ளிருளை நீக்கமாட்டார்கள் உங்களைப்போல ஆன்ம சொருபத்தை யறிந்த பெரியோர்கள் ஒருக்கால் நேத்திரப்பார்வையினுலிந்த அஞ்ஞானமானவிருளை நீக்குவார்கள் —

ஆசையால் ஆசைகளாகிற பிரவாகங்களோடே கம்பீரத்தையுடைத்தாயு
ம் பூரணமில்லாதிருக்கிற சென்மக்கடலின் வியாத்தியாதித்துக்கங்
களாகிற செந்துக்கள் மேலு மேலுந் தொடர்ந்து கடிக்கத்தொ
டங்க புத்திர பித்திர களத்திராதி பாசங்களை முடம்பின விழு
ந்தக் காமங்களாகிற வலைகளால் கட்டப்பட்டுப் போய்
க் காத்தமாட்சி கழன்று கொண்டிருக்கிற வென்னை அநு
கிரகித்துக் கரையேற்றிப் பிரட்சிக்கிறதற்கு இதமாயி லோருத்த
ராயுங்காணேன் — நான் இப்போது என்னடைக்கலமாய் வந்
தேன் அந்தப் புண்ணிய பாத்திரதால் உங்கள் பாதாரவிந்த
ங்களைக் காணப் பெற்றேன் இப்படிக் கொத்துப் பத்திலிருக்கிற
என்னைக் கருணைக் கண்பார்வையினால் பிருத்து விடுபடா
மலில்லாமல் ரட்சிக்க வேணுமெனின்,

விடை— அப்படி, சொன்ன சீடனைப்பார்த்துக் குருவானவர் இ
ருப்பதினால் அடிக்கடி பயப்படாதே என்று அபயப்பிர
தானம் பண்ணி வாயில் வேதாந்தங்களை சீடனுக்கு அது நித்திய
முழும் பரமானந்தமும் நித்தியமும் பரப்பிரமமாயி
ருக்கிற வுனக்கு மிருத்தியுபய மொருக்காலுமில்லை பிரமை
யினாலே யிருக்கிறது விள்ளன முண்டென்று நினைந்தப்ப
த்தாலே சம்சாரப் பயமென்று சொல்லுகிறாய் அதெ
த்தவறால் நிதிகளைப் போனவன் புலம்பின தெப்படி யெனி
ல் அத்தமே அப்படியே நீ புலம்புவதுங் காத்துப் பொய்யெ
ன்றறி.

வினா— அதெப்படியெனின்,

விடை— ஒருவன் காடாந்தகாரமான ராத்திரியிலே போகிறவன் வெகு
ட்பாதையிலே தன்னை ஒரு சர்ப்பந் தீண்டக்கண்டு அந்தப்ப
யத்தினால் நடுங்கி நிறத்தே மயங்கி வாதிக்க முடியாமல் ஆட்கொ
யிருக்கிறவன் கண்டு அவனைக் கையினால் தட்டி யெழுப்பி யவ
னை யென்னுடைய தீண்டினதெங்கே யென்று அவன் சொன்ன
துபோல் நீ சொன்ன சொல்லுமப்படியே பொய்யென்றறிவே
யும், ஒருபுருஷன் தானவனாந் தவிடத்தில் காந்லதுக்க முடனே
தப்பாம் பென்று கிராமத்து விசேஷமாம் பென்று
சப்திதுப்பயந்து நடுங்கித் திருட்டி விசாரித்துப் பார்வைனக்
கெட்டபாம் பென்கிறது பொய்யாய்ப் போனதே அப்ப
டியே யுண்மையா யிருக்கிற வுனக்குச் செனன மரணவியாதியாதி

ச்சங்களும் பொய் என்னும் பிரமையாய்ச் சொல்லப்பட்டவைகளி னைகளும் பொய் ஆனாலுன்னுடைய ஆன்மாவைநன்றாய் வி சாரித்துப் பயத்தைவிட்டொழி, அப்பா! நீ அஞ்ஞானமாயிரு க்கிறபோதெல்லாம் ஆன்மசொரூபமானவன், நித்தியவா போதித்துக்கொண்டிருக்கிறேன் அந்த அஞ்ஞானவிருத்தங்க ளாலேபயத்தைவிட்டுச் சுகமாயிரு.

வினா- இந்தப்படி குருவானவர் சொல்லச்சீடன் கேட்டுவாரு ம் சுவாமீ! மோட்சலட்சுமி கடாட்சம்பொருந்திய உங்களா ல் சகலமும் பொய்யென்று திருஷ்டாந்தத்துடனே சொல்லப் பட்டதைத் தாஷ்டாந்தத்திலே பார்க்கிறபோது பிரவிருத்திகலா னதுக்கங்கள் சகல சனங்களுக்கும் பிரத்தியட்சமாய்ப் பிரசி த்தமாய்க் காண்கின்றது — இப்படிப் பிரத்தியட்சமாய்க் கண்ட ப தார்த்தமானது எப்படிப் பொய்யாய்ப் போகும்? கண்ணுக்கு வி டயமாய்க் கண்டதைத் தனப்படி பொய்யென்று சொன்னவன் நிசமாயிருக்கிற பதார்த்தத்தைப் பொய்யென்று சொன்னதெ ப்படிகூடும் — இது, சகல சனங்களுக்கும் பிரத்தியட்சப் பி ரமாணமே. பின்னாத்துமனுடைய சென்மாதி துக்கங்களு ண்டானதாயும் அந்நியாயசாயுமிருக்கிறவனுக்குப் பிரமத்துவ மும் நித்தியத்துவமும் பரமானந்த சொரூபத்துவமும் எப் படிகூடும் — ஆத்மாவானவர்? அஞ்ஞானமாவதேது? இந்த ஆத் துமாவுக்குத் தமக்குமுடைய லட்சணமெப்படி? அஞ்ஞானமா யிருக்கிற தேகாதிகளிலே யாவரொருவன் பேதமாயிருக்கிறதெப் படி? அஞ்ஞானமாவதேது? அந்த அஞ்ஞானத்திலுண்டான பய மேது? அந்தப்பயத்தை விடுகிறதெப்படி? இது வெல்லாந் திருப்பூர்வமாகக் கரதலாமலகம்போலெனக்குத் தெரியக் கருணைக் கடலாயிருக்கிற தேவரீர் அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்னின்,

விடை- வாராய் சீடனே நீயே, சன்னியாசி கிருதார்த்தன் அதிகா ரீ விவேகி உனக்குச் சிவகடாட்சம் பொருந்துமுண்டாயிருக் கின்றது.

வினா- அதெப்படியெனின்,

விடை- பிராகிருதராயிருக்கிறபேர்கள் சஞ்சரிக்கிற மார்க்க ங்களைவிட்டு மர்மத்தையறிகிற திண்பொருட்டு எத்தனைப்ப ண்ணுகிறதால் நீதன்னியனே — மேலும், சிவகடாட்சத்தை த்தவிர சித்திவராமாட்டாது, சிவப்பிரசாதந்தவிர ஞானப்பத்தி வா ராமாட்டாது, சிவப்பிரகாசத்தவிர மோட்சங்கிடையாது, சிவகடா

ட்சத்திரனால்சுகர்வாமதேவராதிகள் அஞ்ஞானங்களைவிட்டுச்செ
னனமரண ரூபமான சமுசாரபந்தங்களைவிட்டொழிந்தார்கள்.
அப்படிக்கொத்த இலட்சணமானது அனந்தசனனமெடு
த்துத்தபசுசெய்ததினாலே பிறவிவிடுகிறதற்கு ஏதுவாகவரும்.
அப்பா! லோகத்திலேமனுஷருக்கு கோடிசென்மங்களில்சுக
வார்ப்பிதமாய்ச்செய்ததபசுகளினாலும் ஈசுவரப்பிரசாதத்தினா
லும்விவேகப்பிறக்கும் ஆனதால் நீயும்பரமார்த்தத்தையடைகி
றதின்பொருட்டு ஆரம்பம் பண்ணினவனானலல்லவோ மனு
ஷனுக்கு விவேகம் வந்ததற்குப்பலன் — அப்பா! மனுஷசெ
ன்மமெடுக்கிறதிலும் புருஷசென்மமாகவும்அதிலும்பிராமண
சென்மமாகவும்அதிலும் விவேகம் பொருந்தினவனாகவுமிருக்
கிறதுமோட்சத்துக்கு முக்கியபலமென்று பெரியவர்களால்
சொல்லப்பட்டிருக்கிறது — இந்தவிவேகமில்லாமற்போனால்
எல்லாவியர்த்தமாய்ப்போம் மோட்சமுமில்லை ஆனதால் நீங்க
ட்டசங்கைகள்நல்லதே, ஆன்மதத்துவத்தையடைகிறதிலேயிச்
சையுடன் கூடினவனாயிருக்கிறஉனக்குச்சங்கைகளையும் ஆறுமு
தற்கொண்டு நன்றாய்த்தெரியும்படி சொல்லுகிறோம், சந்தோ
ஷத்துடன் கேட்பாயாக — அப்பா! மனுஷத்துவமுன்னிட்டுத்தி
ற்பிரமையினால் கற்பிக்கப்பட்டிருக்கின்றது அதினாற்பிறவி முத
லான துக்கங்களுண்டாயிற்று அதினாலுண்டான துக்கங்களுக்
கில்லை அந்தத்துக்கங்கள்தப்பிப்போய் அதெப்படியென்றால் நி
த்திரையாகிற மோகத்தினாலடையப்பட்டிருக்கிறதுக்கங்க
ள் நித்திரை தெளிந்தெழுந்தபோது ஒருவிடத்திலுமின்மை
யாய்க்கண்டதுண்டே — அப்படியிருக்கச்சகலசெனங்
களாலும் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டிருக்கிற இந்தப்பிர
பஞ்சத்தைப்பொய்யென்றெப்படிச் சொல்லப்படுமென்று நீ
மோகத்தினால்விசாரணையில்லாமற்சொன்னசங்கைகூடாது.

வினா— அதெப்படியெனின்,

விடை— கூகையினுடைய திருஷ்டிக்குப் பிரகாசமான பகலா
னது பிரத்தியட்சமா யெப்படி யிருளாகத் தோற்றுகிற
தோ அப்படியே பிரமையினாலடையப்பட்ட பிரத்தியட்.
சாதி விவகாரங்களெல்லாம் பிராந்தனுக்குச் சத்தியமாய்த்
தோற்றும்,

வினா— அதெப்படியெனின்,

விடை— இதுகடமென்கிறபோது அந்தப்பேருடனேபிரத்திய

ட்சமாகக்கண்ணுக்குரூபமாய்க்காணுகிறது. பரமார்த்தமாய் விசாரிக்கும்போது அந்தக்கடமென்கிற நாமமில்லாமல் கடமாவதற்கு விலட்சணமான மிருத்திகையாயிருக்கிறது. இதுவன்றியும் சூரியனைப்பிரத்தியட்சமாய்ப்பார்க்கிறவர்களுடையகண்ணுக்குச் சூரியனொருசாணளவாய்க்காணப்படுகிறது, சாஸ்திரத்திலேயென்றால் லட்சம்யோசனை விஸ்தாரமுள்ளதாய்ச் சொல்லுகின்றது இப்படி பிரத்தியட்சப் பிரமாணத்துக்குஞ் சாஸ்திரப்பிரமாணத்துக்கும் விசாரிக்கிறபோது பிரத்தியட்சப்பிரமாணந் தள்ளுபட்டதால் இப்போது நீசொன்னபிரத்தியட்சப்பிரமாணங் கூடாது—ஆனதால் இவ்விடத்தில் இந்தேகாதிப்பிரபஞ்சங்களெல்லாம்பிராந்தியினால் காணப்பட்டது. இந்தப்பொய்மையைச்சத்தியமென்றெண்ணாதே பிரமானந்தசொரூபமானபரப்பிரமம் நீயாகும் உனக்குப் பின்னமானவஸ்து வேறொன்றில்லை யென்றுபுத்தியினால் நன்றாய் விசாரித்து—லோகாந்தரங்களிலும் பர்வதாந்தரங்களிலும் தீர்த்தாந்தரங்களிலும் மன்மதாவதாரங்களிலும் சாஸ்திராந்தரங்களிலும்பிரமத்தைத்தேடாது அப்படிக்கொத்தபிரமத்தை நன்றாய் விசாரிக்கிறபோது நாமேபிரமமாவன்—அப்பா! தனக்குள்ளிருக்கிற தத்துவத்தையறியாத மூடனாயிருக்குமவன்சாஸ்திரங்களைப்பார்த்துச்சடமாகிறான்.

வினா—அதெப்படியெனின்,

விடை— இடையனொருவன் கக்கத்தில் குட்டியையிடுக்கிக்கொண்டு கூடத்தைப்பார்க்கிறபோது அந்தக்கூடத்தில் குட்டியிருப்பதாய்க்கண்டு தானெண்ணின அந்தக்குட்டியானது கூடத்தில் விழுந்ததென்றுதானுங்கூடவிழுந்ததைப்போலும்—மேலும், ஆத்மாவாயிருக்கிறவர்கள் தேகமாத்மாவென்றும் அந்தப்பரமாத்மாவேதானென்றுமெண்ணியிருக்க அஞ்ஞானிகளாயிருக்கிறபேர்கள் வெளியிலிருக்கிற பஞ்சகோசங்களிலும் ஆத்துமாவிருக்கிறதென்று தேடுகிறார்கள்—அப்படியே நீயும்பரமார்த்தமாயிருக்கிற வஸ்துநிச்சயத்தைமறந்து அந்தந்த விவிடத்தில் அவஸ்துவான தேகாதிகர்மங்களை பாவித்துக்கொண்டு வியர்த்தமாகக்கிலேசமன்றியொருபிரயோசனமொன்றில்லை—ஆனதால் ஆத்துமானாத்துமவிவேகத்தையுனக்குச்சொல்லுகிறோம்அன்புடனே கேள் இதைச்சிரவணப்படுத்துகிற நீ உனக்குஆத்மாவாகிய தேகங்களைவிட்டபிறகாவென்று குருவானவர் சீடனைத்தன்வயப்படுத்திக்கொண்டு கருணையினாலே

நித்தியமாக அத்தியாரோப அபவாதயுக்தியினாலே ஸ்ரீகுருவும் நிஷ்ப்பிரபஞ்சமான பிரமத்தைச் சீஷனுக்கு இயல்பாய்ச் சாக்ஷாத்காரங்கடைந்திடப் போதிக்கத் தொடங்கினார்.

## குருவுபதேசம்.

வினா— ஆத்மாவுக்குத்தவிலைகையாது தந்தமெனின்,

விடை— வாராப்பிடிமேலே வஸ்துவானபரப் பிரமத்தினிடத்தில் அவஸ்துவான நாமரூபமுதலியதெல்லாத் திப் பிரபஞ்சத்தைக் கற்பிக்கிறதெதுவோ அதுவே அத்தியாரோபமென்று சொல்லப்படும்,

வினா— அதெப்படியெனின்,

விடை— பாம்பன்றியிருக்கிற பழுதையினிடத்தில் பாம்பை யாரோபிக்கிறது போலச் சச்சிதானந்தலட்சணமான பரப்பிரமமொன்றினிடத்திலே நாமரூபாதிப் பிரபஞ்சத்தை அஞ்ஞானசத்தில கற்பித்ததுபோலக் கற்பிக்கப்பட்டது.

வினா— இப்படிக்கற்பிக்கப்பட்டதற்குக் காரணமேதெனின்.

விடை— அஞ்ஞானமேகாரணம் அந்தஞானம் சத்துவகுணமுடையவனியமாயிருந்தாலும் லட்சணமல்ல அஞ்ஞானத்தைப்பற்றிப்போலுங் கண்டுருப்பதால் அவ்வளவு மெய்யென்று தெரிந்துமாம் கொண்டுசொல்லப்பட்டிருக்கின்றது.

வினா— அதெப்படியெனின்,

விடை— சுத்தியினிடத்தில் வெள்ளி யாரோபமானதைத் திரும்பிவிசாரிக்குமளவில் பின்புறங்காட்டிப் பொய்க்கோணமாயிருக்கிறதும் என்பதை அறிவிப்பதென்று நிச்சயத்தபின்பு வெள்ளி புருவெப்படியாயிருக்கப்பட்டதோ அப்படியே சுருதியுத்தி அனுபவத்தினால் பிரமத்தைக் கண்டபின்பு அவஸ்துவான அஞ்ஞானபரிதாபோய் —மேலும் திரிகாலங்களிலேயுஞ் சத்தியமுமில்லாமல் அநிலைபோதமான வெள்ளியுருவுக் கெட்டபடி அனித்தியத்துவங்கண்டதோ அப்படியே அஞ்ஞானபரிதாபோய்ப் பிரமம் மூன்றுகாலத்திலும் அழியாமல் நித்தியத்துவமாயிருக்கும்,

வினா— அப்படிக்கொத்த அஞ்ஞானமான அத்தியாசத்துக்குக் காரணமேதெனின்,

விடை— சத்தோவென்றால் சத்துமல்ல, அசத்தோவென்றால் அ,

சத்துமல்ல, அசத்தோவென்றால் அசத்துமல்ல, ஆனதால் அநிர்வசனியமென்றுந் திரிகுணங்களோடே பொருந்தினதென்றும் வஸ்துதத்துவத்தையறிந்ததினால் வாதிக்கப்பட்டுப் போமென்றும் அபாவலட்சணமென்றுஞ் சொல்லப்படும் — அவ்வஞ்ஞானம் பொய்யானபடியினால் பிரமத்தினிடத்தில் ஆசிரயித்துக்கொண்டிருக்கிறது.

வினா - பிரமத்தினிடத்தில் அஞ்ஞானமாசிரயித்துக் கொண்டிருந்தால் ஆசிரயதோஷம் வருமாமெனின்,

விடை - சிப்பியில் வெள்ளியாசிரயித்திருந்ததினால் சிப்பிக்கெட்டபடியாசிரயதோஷம் வரவில்லையோ அப்படியே பிரமத்துக்குமாசிரயதோஷமில்லை.

வினா - இப்படிச்சொன்னால் பிரமமென்றுமஞ்ஞானமென்றுமிரண்டு த்விதமாயிற்றேயெனின்,

விடை - அவ்வஞ்ஞானத்துக்குப் பிரமத்தைத்தவிரச் சுதா சத்தையில்லாதபடியினால் இரண்டாகமாட்டாது.

வினா - ஆனாலஞ்ஞானமுண்டென்கிறதிலடையாளமேதெனின்,

விடை - சராசரமான செகத்திருக்கிறதும் வேதசாத்திரங்களிருக்கிறதும் நானஞ்ஞானி என்கின்றவனுபவமிருக்கிறதும் அடையாளம் — ஆனதாலந்த அஞ்ஞானத்தையே மூலப்பிரகிருதியென்றும் சத்தியென்றும் அவித்தையென்றுஞ் சொல்லப்படும் அது சத்துமல்ல, சத்தைத்தவிரப் பின்னமுமல்ல அபின்னமுமல்ல.

வினா - ஆனால், தீபமும்பிரகாசமுமான சாவயவமோவெனின்,

விடை - சாவயவமுமல்ல.

வினா - வித்துருளாயுமான நிரவயவமோவெனின்,

விடை - நிரவயவமுமல்ல, ஆனதால் அநிர்வசனியமென்றே பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது — இப்படிக் கொத்தவஞ்ஞானத்தைச் சமஷ்டிவியஷ்டியென்றிரண்டு விதமாகச் சொல்லப்படும்.

சமஷ்டி.

வினா - அதேதெனின்,

விடை - நானாவிதமாய்த்தோற்றப்பட்ட அஞ்ஞானங்களொன்

றாய்க்கூட்டிச்சமட்டியென்றும் தனித்தனியேபிரிப்பது வி யட்டியென்றுஞ்சொல்லப்படும்.

வினா- சமட்டியாவதெப்படியெனின்,

விடை- நானாவிதமாய்த்தோற்றப்பட்டிருக்கிறமரங்களெல்லா ம் ஒன்றாய்க்கூட்டி ஒருதோப்பென்பதுபோல, நானாவிதமான அஞ்ஞானங்களை அபேதமாய் ஒன்றாய்க்கூட்டுகிறதே சமட்டி என ப்படும்- இந்தச்சமட்டி அஞ்ஞானமானது சுத்த சாத்திகுண ம்பொருந்திச் சிரேஷ்டமானதால் மாயையென்று சொல்லப்படு ம், அந்தமாயையிற் பிரதிவிம்பித்தசைதன்னியஞ்சர்வஞ்ஞத்து வாதிகுணங்களுஞ், சிருஷ்டிஸ்திதிசம்மாரமும் பொருந்தினதா ல் அவ்வியாகிருதமென்றும் அவ்வியத்தமென்றும் ஈசுரனென் றுஞ்சொல்லப்படும்- இந்தமாயாப்பிரதிவிம்பமான ஈசுரனுக் குச்சர்வசத்தி குணங்களுஞ்சகல அஞ்ஞானங்களைவிளங்கச்செய் கிறதும்சுதந்தரத்துவமும் சத்திய சங்கற்பத்துவமுஞ்சத்தியகா மத்துவமுமிருக்கையால் ஈசுவரனென்றும்- இந்த ஈசுவரனுக் குச்சர்வஞ்ஞத்துவமும் மீசரத்துவமும் சத்திய சங்கற்பத்துவ முஞ்சுதந்தரத்துவமுமுண்டாகிறதற்குக்காரணமான சுத்தசா த்திகம் பொருந்தின சமட்டியஞ்ஞானமாகிய மாயையே யவ ருக்குக்காரண சரீரமென்றும் பெரியவர்களாற் சொல்லப்படு ம்— இந்தமாயையானது, ஈசுரனுக்குமிகவுமானந்தம் பொரு ந்தச் செய்து கத்தியையுறையானது மறைத்ததுபோல ஆவ ரணமாகஈசுரசொரூபத்தை மறைக்கையால் ஆனந்தமயகோச மென்றும்— இப்படிப்பட்டமாயைதானே ஈசுரனுக்குச் சர்வ சங்காரத்துவ காரணமான சுழுத்திஸ்தானமென்றும் பிராகிரு தப்பிரளயமென்றுஞ் சொல்லப்படும்— இந்தமாயையாகிய அ ஞ்ஞானத்தைவியஷ்டியபிப்பிராயமாய் விசாரிக்கும்போது அநேகவிதமாய்ப் பின்னமாயிற்று, அந்த அஞ்ஞானவிருத்திக ளேயென்றுக்கொண்டு குணவிலட்சணமானதால் நானாவித மென்றுசொல்லப்படும்.

## வியஷ்டி.

வினா- அதெப்படியெனின்,

விடை- வனத்தைத்தனித்தனிவியஷ்டியாய்விசாரிக்கும்போது மரங்களனே கவிதமாவதெப்படியோ அப்படியே அஞ்ஞானம் வியஷ்டியி னால் அநேகவிதமாகவிருக்கும்— இந்தச்சமஷ்டிவியஷ்டிகளி லேயுங் குணத்திரயங்களில் வியாபிக்கப்பட்டிருப்பதனாலித் துச் சமஷ்டி வியஷ்டியென்கிற பேருண்டாயிற்று— இவ்வியஷ்

டியஞ்ஞானமானது மலினசத்துவப் பிரதானமானதாலும் இ ரசத்தாமதங்களிடமைப் பொருந்தியிருப்பதாலும் நிக்ருஷ் டமாய்ப் பிரத்தியகாத்மாவுக்குபாதியாயிருக்கும் இந்தமலினசத்து வப் பிரதானமான வியஷ்டியஞ்ஞானத்துக்கு அந்நிஷ்டமான சைதன்னியமே, பிரத்தியகான்மா இந்தவிதத்துயில் பிரதிவி ம்பித்தசைதன்னியமே பிராஞ்ஞனென்று சொல்லப்படும்— இந்தவிதமானது பிராஞ்ஞனுக்குயிகவு மானந்தத்தைக் கொடுத்து, சுத்தியைப்புலமைறுத்த போலத்தனைக்கு ஷிஷ்டமான மான பிரத்தியகாலமாகவப்பதைத்தந்து விருப்பயானந்தமையேன சொன்றும் விடக்கிடல்லால ஆட்சமங்களுக்குக் காரணமான தால் காரணசரீரமென்றும் — இந்தப்பிராஞ்ஞனுக்குத்துயே த்திரியாதி விடாயங்களை யொடுக்கி யானந்தத்தைக் கொ டுப்பதாலிதற்குச் சுழுத்தியவஸ்தையென்றுஞ் சொல்லப்படும்,

வினா- இதற்குஉபமையென்னெனின்,

விடை- பலர்பொருக்குஞ் சாக்ஷமாய் நித்திரைபண்ணியேனெ ன் றொன்றுமறியேனென்று நித்திரை தெளிந்தெழுந்திருந்த பொழுதுஞ் சொற்றாலுமறியாதகும் சொல்லுகிறதோ டனுபவமே ஞ் பத்திரசயம்—மேலும், வைவிருட்சங்கள் போலிருக்கிற சமஷ்டிவியஷ்டிக்கு ஒருசாதிவஸ்து வென்றதும் போலவி ஸ்வாமலபடியேபோ அப்படியேயந்தப் பிரதிவிம்பி த்த சீவசாக்ஷிக்கும் அபேதமே.

வினா- அதெப்படியெனின்,

விடை- சமுத்திரசலத்தையுமலையையு மொன்றாய்ப் பார்க்கி றபோது அதிற்பிரதிவிம்பித்த சூரியனுமொன்றாகியப்ப டியேதோற்றுகிறதோ, அப்படியேயுபாதியான சமஷ்டி வி யஷ்டி ஞானமிரண்டும் பேதமாகிறபோது அதிற்பிரதி விம்பி த்த சீவேசுவரனுக்குமபேதந்தவிரப் பேதமில்லை—மேலும், இ ந்தவியஷ்டிசமஷ்டியான அஞ்ஞானங்களுக்கும் அதிற்பிரதிவி ம்பித்த ஆபாசவிரண்டுபேருக்கும் ஆதாரமான சுத்தசைதன் னியமொன்றேயாகுமதனிடமென்றும், அந்தத்துரியவுபாதி களான குணங்களோடேகலந்து பிரியாமலிருக்கும் போதுமகாவா க்கியத்துக்குவாச்சியார்த்தமென்றும், பிரிந்தபோது லட்சியா ர்த்தமென்றுஞ் சொல்லப்படும்—இதுவல்லாமல்மேயோபாதி கரணசுசுவான் அனந்தசத்திசளுடைனை கூடிக்கொண்டிபார் வையிருவர் சராசரமானசெகத்தைச் சிருஷ்டிக்கிறார் ஆதலால்

ஆன்மாவாகியும் அத்துவைதமாகியும் வேறே அன்னியவஸ்துவில் லாமல் தானாயிருக்கிற மாயாவியும் சிருட்டியாதிசாதனங்கள் தன் னிடமாக இல்லாதவராகியுமிருக்கிற ஈசுவரன் தனக்குத் தே வைப்பட்டபடியிந்தச் செகத்தைச் சிருட்டித்தாரென்றாசங்கை செய் யவேண்டாம்.

வினா— அதேதெனின்,

விடை— பிரபுவான ஆத்மாவே ஈசுவரன்தானே இந்தச் செகத்துக் குஉபாதானகாரணமும் நிமித்தகாரணமுமாயிருந்து இந் தத் தாபரசங்கமமான பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கச் சங்கற்பம் பண்ணுகிறார்.

வினா— அதெப்படியெனின்,

விடை— இந்தச் செகத்தினுடைய சிருஷ்டிக்குத்தாமே முக்கி யமாயிருப்பதால் நிமித்தகாரணமாயும் தம்மையாச்ரயித்த வுபாதிப்பிரதானமாயமாயையினுடைய உபாதான காரணமாக வுமிருந்தது ஆன்மாவன்றிமற்றில்லை.

வினா— அப்படியானவராயிருக்கிற ஆன்மாவுக்கு நிமித்தகார ணமாகவுமுபாதான காரணமாகவுங்கூடுமோவெனின்,

விடை— பட்டுப்பூச்சியானது தான் பிரதானத்தினால் நிமித்த காரணமும் சரீரப்பிரதானத்தினாலுபாதானகாரணமுமா யெப்படியிருந்ததோவப்படியே ஈசுவரனுக்கு நி மித்தகாரணமுமுபாதானகாரணமுங்கூடுமென்றறி, அதற்கு மேல் சத்துவ தாமத குணம்பொருந்திய விகாரசத்தியோடேகூ டின ஆன்மாவினிடத்தில் நின்று ஆகாசம் பிறந்தது அவ்வாகா சத்தில் வாயுபிறந்தது அவ்வாயுவில் அக்கினிபிறந்தது அவ்வ க்கினியில் அப்புபிறந்தது அவ்வப்புவில் பிருதிவி பிறந்தது— இப்படித்தாமச விகாரமான சத்தியினாலுண்டாக்கப்பட்ட பஞ் சபூதங்களிலொருபூதமாகிலுமசையமாட்டாமல் நிச்சலமாய்ச் செடமாயிருப்பதுகண்டதால் அந்தச்சத்திக்குத்தாமதப்பிரதா னமென்பதிற்சமுசயமில்லை, ஆனதால் செடமாயிருக்கிற பஞ் சபூதங்களைச் சிருஷ்டித்ததாமதசத்தியுஞ் செடமே, காரணத் தில் இருந்த குணங்களைக் காரியத்திலுஞ் செடமாகக் கண்டதால் காரணமுங் காரியம்போற் செடமென்றறி— இப்படி யுண்டா ன பஞ்ச பூதங்கள் சூக்ஷமமாயிருப்பதால் சூக்ஷம பூதங்களெ ன்றுந்தன்மாத்திரைகளென்றுஞ்சொல்லப்படும், இந்தத்தன்

மாத்திரைகளோடு கைத்தசைதன்னியத்துக்குச் சாக்ஷியென்
றும் பேரையுமென்று ஞானதீர்க்கனென்றும் விசித்திரனென்றும்
பிரபாவனென்றும் பேராயிருக்கும் இப்படிக்கொத்த சூட்சம
பூதங்களினின்றும் சூட்சமதேகங்களுண்டாயின.

வினா- அதெங்ஙனெனின்,

விடை- இந்தச் சூட்சம பூதங்களினின்றும் ஒன்றோடொன்று க
லந்து ஸ்தூலபூதங்களாகின்றது மேல் அபஞ்சீகிருத பூதங்
களாற் பண்ணப்பட்ட பதினேழு தத்துவத்தைப் பொருந்தினதே சூட்
சமதேகமென்றும், சூட்சுமசரீரமானதால் லிங்கசரீரமெ
ன்றும் ஆன்மாவினுடைய போகத்துக்குச் சாதனமானதால்
போகாயதனமென்றுஞ் சொல்லப்படும்.

வினா- இந்த லிங்கசரீரமாகிய பதினேழு தத்துவங்களெவையெனின்,

விடை- சுரோத்திராதிகளான ஞானேந்திரியங்களைந்தும் வாக்
காதியான கர்மேந்திரியங்களைந்தும் பிராணாதிவாயுக்களைந்தும்
மனம்புத்தியிரண்டும் ஆகப் பதினேழு தத்துவமும் கூடினது லி
ங்கசரீரமென்று சொல்லப்படும்.

வினா- இந்தப் பதினேழு தத்துவத்தினுடைய லட்சணமே
தெனின்.

விடை- சுரோத்திரத் தொக்குச் சட்சு ஜிஹ்வா க்ராணமெ
ன்னப்பட்ட ஞானேந்திரியங்களுக்கும் தனித்தனியே நின்
று சூட்சமமான ஆகாசாதி பூதங்களோடே சத்துவகுணங்களைத் தனித்
தனியே பிரகாசம் பொருந்தினதாகி உண்டாயின —
இந்தச் சூட்சுமாகாசாதி பஞ்சபூதங்களில் கலந்த அஞ்சு சாத்தி
காம்சங்களொன்றுக்கொன்று கலந்தொருமித்துச் சகலத்துக்
கும் காரணமான அந்தக்கரணம் பிறந்தது — இப்படிப் பிறந்த
து ஞானேந்திரியங்களும் அந்தக்கரணமும் பிரகாசசொரூபமானது
சாத்திவிகாம்சத்துவமென்று சொல்லப்படும் அந்தக்கரணமாவ
து சொப்பிரகாசமான அந்தக்கரண ஞானேந்திரியங்
களும் பிரகாச சொரூபமென்பதற் சந்தேகமில்லை — இப்ப
டிக்கொத்த அந்தக்கரணம் விருத்திபேதங்களினால் நாலுவித
மாய் மனம் புத்தி சித்தம் அகங்காரமென்று சொல்லப்படும்.

வினா- அதெங்ஙனெனின்,

விடை- சங்கற்ப விகற்பத்திலே மனமென்றும் நிச்சயிக்கிறதிலே

ந்தியென்றுஞ் சிந்தனையினுஞ் சித்தமென்றும் அபிமானத் தினுலகங்காரமென்றுஞ் சொல்லப்படும் — ஆதலாற் பஞ்சஞா னேந்திரியத்தோடே கூடினவிச்சரீரமிருக்கிறதின் பொரு ட்டிமனோபுத்திசித்தவகங்காரங்களென்றாயிற்று.

வினா- அதேதெனின்,

விடை- ஒருவனுடைய சங்கற்பரூபத்தினோடுஞ் செய்வதால்மன திடத்திற் சித்தன்மையும் புத்திக்குத் தேகாதிகளிடத்தில் நானென்கிறவபிமானந் திடசித்தமாயிருப்பதாற் புத்தியிலக ங்காரதன்மையும் — புத்திக்குக் கர்த்தத்துவமும் புத்தியினுலேவ ப்பட்ட இந்திரியங்களுக்குக் காரணத்துவமுஞ் சித்தித்தது — இப்படிப்புத்தியானது, ஞானேந்திரியங்களுடன் கூடியதாலும் பின்னும் அறிகிறதே பிரமாணஜனகதாலும் ஆன்மாவைமறைப்ப தாலும் விஞ்ஞானத்தின்சீராய் விஞ்ஞானமயகோசமென்று சொல்லப்படும் — இந்தக்கர்த்தத்துவலட்சணம் பொருந்தின அகங்காரவிருத்தியுடன் கூடினவன் சகலசமுசாரங்களையும் வ சித்துக்கொண்டிருக்கிறவிஞ்ஞானமயனுவன்.

வினா- அதேதெனின்,

விடை- நானென்கிறதனுசந்தானரூபத்தேகேந்திரியாதிகளிட த்திலுமிராகாதியிலிடத்திலுமபிமானத்தைவைத்திருப்ப தால் விஞ்ஞானமயனென்றுஞ் சீவனென்றும் புருடனென் றுஞ் சொல்லப்படும் ஆனதாலவனே கர்த்தா அவனே போக்தா அ வனே ஞானியென்றறி — அந்தச்சீவன் தன்னுடைய பூர்வவாச னைகளோடே கூடியப்பட்டவனுய்த்தினந்தோறும் புண்ணி யபாவரூபமான கன்மங்களைச்செய்து அந்தக் கன்மங்களினுல் வரப்பட்ட சுகதுக்கங்களையிகலோகபரலோகங்களிலும் போ சிக்கின்றான் — இன்னம் அந்தச் சீவனனேகாயிரங்கோடி ஜெ ன்மங்களில் பிறந்திறந்தும் போகிறதாயிருக்கப்பட்டசு ம்சாரமண்டலத்திற் கிடந்துசுழலுகின்றான் - அப்படிப்பட்ட சங்கற்பரூபமான மனதானது ஞானேந்திரியத்துடன் கூடினமை னோமயகோசமென்றுசொல்லப்படும்.

வினா- அதேதெனின்,

விடை- எதுமனோமயகோசமென்று சொல்லப்படுகிறதோ அ தில் மனமே பிரபலமானதால் அதனை மனோமயகோசமென் றுசொல்லப்படும் — கைகால்முதலாகிய கர்மேந்திரியங்களாகிய

னெல்லாமிந்தமனோமயகோசத்தின் தொழில்களாகும்.

வினா - அதேதெனின்,

விடை - மனதிலெந்தவஸ்துவையுமெண்ணப்படுகிறான் மனதினால் பலத்தையிச்சிக்கிறான் மனதினால் பாவபுண்ணியப்ரயத்தனைப்பண்ணுகிறான் மனதினால்சகலதொழிலுஞ்செய்கிறான் மனதினால் சகல போகங்களும் போகிக்கிறான் ஆகையால் மனமே சகலத்துக்குங்காரணமென்றறி — இந்தச் சகலவிகாரங்களுக்கும் ஏதுவான மனமே அந்தர் பாகியங்களிலிருக்கிற விஷயங்களையெல்லாமறியும்.

வினா - அதெப்படியெனின்,

விடை - கேட்கிறது மனதினால், பார்க்கிறது மனதினால், சந்தத்தை அறிகிறது மனதினால், வசனிக்கிறது மனதினால், பரிசத்தை அறிகிறது மனதினால், சகலதொழில்களு மனதினால், புருடனுக்குப் பந்தமோட்சமு மனதினால், ஆத்மரூபஞானத்தரு மனதினாலென்றறி.

வினா - அதெப்படியெனின்,

விடை - மனோசக்தியினால் மோட்சரூபமேருமையினைத்திருத்திபந்தரூபம் விவேகத்தினால் ஆத்மரூபமேரு - அவிவேகத்தினால் அனாத்மரூபமாகும் — இந்தமனம், இராசதகுணத்துடன் கூடினதால்விடய சொரூபமான காயக்கோதாங்கள இராசத்துக்களாலுடைபட்டுச் சஞ்சலமாய்க் கூட்டமாக்கி மயிருக்கிற சொரூபத்தை அறியமாட்டாமல் மிகவும் பிரமித்துக் கெடும்.

வினா - அதெப்படியெனின்,

விடை - பெருங்காற்றில் வைத்த தீபமானது சஞ்சலித்து அதின் பிரகாசமான தன்மையெப்படியுண்டு போகுமோ அப்படியேயென்றறி — ஆனதால், முமுட்சுவானவன் பிறவியாகிற பெந்தத்தை யொழிக்கிறதின் பொருட்டு இராசதமான கோபமுதலின் தொழில்களையும் விட்டொழித்து சித்தத்தை சத்துவகுணத்துடன் கூட்டிப் பரிசுத்தமாக்கிப் பிரயத்தனமாய் நிர்விடயம் பண்ணவேணும்.

வினா - அதேதெனின்,

விடை - மனோநிருமலமில்லாதது புருடனுக்குப் பெந்தமென

அது நிருமலமானது பந்தத்துக்கு முத்தியானதால்மனது நிரும லமாம்பொருட்டு விவேகியானவன் சாதனநிக்கிரகம் பண்ணவேணும் — முன்சொல்லப்பட்ட தனித்தனியாயிருந்த சூட்சுமபஞ்சபூதங்களி லிராசதாம்சங்களைந்திலுந் நின்றுவாக்குபாதம்பாணிபாயுருவுபஸ்தமாகிற கன்மேந்திரியங்களுண்டாயின.

வினா- அதெப்படியெனின்,

விடை- ரசோகுணங் கலந்தவாகாசத்தில் வாக்கிந்திரியமும் அவ்வக்கினியிற் பாதவிந்திரியமும் அவ்வப்புவில் பாயுவிந்திரியமும் அப்பிருதிவியி லுபஸ்தேந்திரியமு முண்டாயின - அந்தச் சூட்சுமபஞ்சபூதங்களிற் றனித்தனியாகவுந்த ரசோகுணங்களை ன்றுமொன்றுக்கொன்று கலந்து சமட்டியாய்க்கூடி யொருமித்து நின்றுல்கிரிய ரூபமான பிராணாதிவாயுக்களுண்டாயின, இந்தப் பிராணாதி பஞ்சவாயுக்களை வேதாந்திகள் விதிப்பட்டென்றும் விசுவகர்த்தாவென்றும் விசுவயோனியென்றும் புருடனென்றுமயமென்றுஞ்சொல்லப்படும்.

வினா- இந்தப்பிராணாதிவாயுக்களுடைய லட்சணமேதெனின்,

விடை- உளர்த்தமுகமாய்ப்புறப்பட்டதாற் பிராணனென்றும் அதோமுகமாய்ப்புறப்பட்டதினால் அபானனென்றும் உள்ளே வியாபகமாயிருப்பதால் வியானனென்றும் போசிக்கிறபதார்த்தங்களைக் கண்டத்திலிருந்து இறக்கிறதினால் உதானனென்றும் அப்படியிறங்கின அன்னசாரத்தை நாடிகளிலேதானுங் கலக்கச்செய்கிறதினாற் சமானனென்றுஞ் சொல்லப்படும் — இதுவல்லாமலும் உபவாயுக்கள் ஐஞ்சுண்டு.

வினா- அவையேதெனின்,

விடை- விக்கல் பிறப்பிக்கிறது நாகனென்றும் கண்ணிமைத்துவிழிப்பிக்கிறது கூர்மனென்றும் தும்மலுண்டுபண்ணுகிறது கிரிகரனென்றும் கொட்டாவியுண்டாக்குகிறது தேவதத்தனென்றுஞ் சரீரத்தைப் பருக்கப் பண்ணுகிறது தனஞ்செயனென்றுஞ் சொல்லப்படும் — இந்தவுபவாயுக்களுஞ் சேர்த்து முன்சொன்ன பிராணாதிபஞ்சகத்திலொடுக்கம், இந்தப்பிராணாதிகன்மேந்திரியங்கள் கிரியைசெய்கிறதே பிரதானமானதால் இவை ரசோகுண அம்சத்திற் பிறந்ததென்று பெரியோர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது — இந்தப்பிராணசத்தியானது கிரியை

பண்ணுகிறதே பிரதானமாயிருக்குமென்பதும் தாமசத்திரா
னது ஜடரூபமாயிருக்குமென்பதுஞ் சாத்துவிகசத்தியானது பிர
காசரூபமென்றும் ஆசாரியர்களாற் சொல்லப்படும் — இந்த
ப்பிராணபஞ்சகங்களுங் கர்மேந்திரியமுங் கூடினால் தேக
த்திருட்டிக்கிற தற்குச் சாக்கியமானதினாலும் பிராணமய கோச
மென்றும், இந்தக் கன்மேந்திரியங்களினாலேதான் புண்ணிய
பாபாதி கன்மங்களைச் செய்யப்படுகிறதோ அதுவே பிராணம
யகோசகாரியமென்றுஞ் சொல்லப்படும்.

வினா— அதெப்படியெனின்,

விடை— வாயுவினாற் சலிக்கப்பட்டவிருட்சமானது நானாரூப
மாட்சேட்டிக்கும் அந்தவாயுவில்லாதவனையில் அசையாம
லிருக்கும் அதுபோலப் பிராணகன்மேந்திரியங்களினால் தே
கமானது லைப்பட்டு விகிதாவிந்தவ்வானை நானாவிதக்கிரியை
களைச் செய்துகொண்டுவரும் அந்தப்பிராணகன்மேந்திரியங்
களில்லாவிட்டாற் சேட்டியாமலிருக்கும் புருஷிய வின்று அ
மயகோசமென்னமைகேசச் இந்தப் பிராணமயகோசமுக் கூடி
ஆன்மாவுக்குச் சூட்சுமமாயிருக்கிறபடியால் அப்பிரதி
விம்பத்துக்குப் போக்கியமானதாலும் இந்தலிங்கசரீரமென்று
ம் தூலத்தைத்தட்டி இஞ் சூட்சுமமாயிருப்பதால் சூட்சுமசரீர
மென்றுஞ் சொல்லுவார்கள் — இப்படி சமஷ்டிலிங்கசரீரங்களை
யுமொன்றாய்க் கூட்டினதால் மாக்கட்டத்தை யவ்வமென்பது
போற்சமஷ்டி சூட்சும சரீரமென்றும், இந்தச்சமஷ்டி சூட்சு
மசரீரத்துடன் கலந்தபிரதிவிம்ப சைதன்னியத்தைப் பிரமனெ
யகற்பனென்றுஞ் சூத்திராத்மாவென்றும் மகாப்பிராணனெ
ன்றும் பெரியவர்களாற் சொல்லப்படும்.

வினா— அதெப்படியெனின்,

விடை— சொர்ணப்பிரகாசமாயிருக்கிற புத்திக்குள்ளே
ஆன்மா, பிரதிவிம்பித்துச் சொர்ணப்போலவிளங்குவதுபா
லிரணியகற்பனென்றும் — சமஷ்டிலிங்க சரீரங்களினுடை
யில் தான் கோக்கப்பட்டிருந்ததுபோல ஆன்மாவியாபித்தப்ப
ட்டிருப்பதால் சூத்திராத்மாவென்றும் சகலசரீரங்களையுஞ்சி
ருட்டிக்கப்பண்ணுகிறதால் மகாப்பிராணனென்றுஞ் சொல்ல
ப்படும் — இப்படிக்கொத்த சமஷ்டி சூட்சுமசரீரமானது சகலி
த்தனியாய்ப்பிரிந்ததால் வியஷ்டி சூட்சும சரீரமென்று, இந்த
வியஷ்டி சூட்சுமசரீரங்களிற் றேகபாசமுட்பிரதிவிம்பித்த சை

தன்வியஷ்டிக்குத் தைஜசனென்றும் பெரியவர்கள் சொல்லு வார்கள்.

வி-று- அதெப்படியெனின்,

விடை- தேஜோமயமான அந்தக்கரணோபாதியோடே கூடி னதால் தைஜசனென்றும் ஸ்தூலதேகத்தைக் காட்டிலுஞ் சூக்ஷ்ம மானதால் வியஷ்டி சூக்ஷ்மசரீரமென்றும், இந்தச் சூக்ஷ் மசரீரமானது சாக்கிரத்தினுடைய வாசனைகளைச் சூக்ஷ்மமாய்க் கொண்டிருத்தலால் சொப்பனாவஸ்தையென்றுஞ் சொல்லப்படும் அந் தச் சொப்பனத்திற் செய்கிறகிரியைகளைச் சூக்ஷ்மமாயறிகிற தால் பிரவிவிக்தபுக்கென்று சொல்லப்படும்— இந்தத்தைஜச னென்பவன் சொப்பனத்திற் சாக்கிரகாலத்திலநுபவிக்கப்பட்டவா சனைகளைச் சூக்ஷ்மபுத்திவிருத்திகளினாற் சூக்ஷ்மவிஷயங்களை யநுபவிக்கிறான்— இந்தச்சமஷ்டி சூக்ஷ்மசரீரங்களும் வியஷ் டி சூக்ஷ்மசரீரங்களும் மேற்சொன்ன காரணசரீரத்தைப்போலச் சாதிவ்யக்திபோல அபேதமென்றறி— இந்தச்சூக்ஷ்மவி யஷ்டிசமஷ்டியிரண்டிலும் ஒன்றனாவிதனை அபிமானித்த சூத்தி ரான்மாவுந் தைஜசனிரண்டும் முன்சொன்ன காரணசரீர அபிமா னியாகிய பிராஞ்ஞனைப்போலப் பேதமில்லை அப்படியே அ பேதமென்று, இந்தப்படி சூக்ஷ்மப்பிரபஞ்சத்தினுடைய ல ட்சணஞ் சாஸ்திரசம்மதமாய்ச் சொல்லப்பட்டது— இனிஸ்தூ லப்பிரபஞ்சத்தினுடைய பிறப்பைச் சொல்லுகிறோம்.

ஸ்தூலப்பிரபஞ்சம்.

வி-று- அதெப்படியெனின்,

விடை- முன் சூக்ஷ்மமாயிருந்த ஆகாசாதி பஞ்ச பூதங்க ளொன்றுக்கொன்று பஞ்சீகிருதமாய்க்கலந்து ஸ்தூலபூதங் களாயின.

வி-று- அதெங்ஙனெனின்,

விடை- ஆகாசாதிபூதங்களைந்தும் ஒவ்வொன்றிரண்டாய்ப்பிரி ந்தன, அதில்தன்னுடைய பாகத்தைப் பாதியாயிருப்பவை த்தியற்றப்பிபாதியை யொவ்வொன்று நான்காய்ப்பி ரிந்து சடாவகிஷம் நிற்கலுற்ற நாலுபூதங்களிலு மொன்றாக் கொண்டு அவைக்கால் பங்காய்ச்சேர்ந்தன— இப்படிப்பிரிந்த ஆ காசாதியைந்துந் தங்களுடைய அர்த்தபாகத்தைப் பிரியாதிருக்கை த்துநான்காய்ப்பிரிந்த பூதங்கள் பாதியும் ஒருமித்துக்கூடி ஒவ்வொன்று ஐந்துபாகமாய்க்கலந்து ஸ்தூலபூதங்களாயின— இ ந்தப்பஞ்சீகரணத்தை அட்டிசமானதென்று சங்கிக்கவே ண்டாம்

வினா- சாமவேதோபநிஷத்தில் திரிவிதகரணமாய்ச்சொல்லியி ருக்கின்றதேதெனின்,

விடை- வாயுவாகாசங்களிரண்டும் அமிர்த்திரவியங்களானதாலு ம்மிர்த்திரவியங்களாகிய பிருதிவு அப்புத்தேயுக்கள் அதில் ஒடுக்கமாகையாலும் இந்தப்பஞ்சீகரணத்தைப்பிரமாணிய மென்று பெரியவர்களாற் சொல்லப்படும்— இப்படி சொல்ல ப்பட்டபஞ்சீகரணமன்றித் திரிவிதகரணஞ்செய்தாற்பிரத்தி யட்சாதிவிரோதம் வரும் ஆனதாலிந்தவாகாசவாயுக்களுடைய தன்மம் வன்னியாதிகளில் காணப்பட்டிருக்கிறது அந்தவாகா சவாயுக்களில்வன்னியாதிதன்மங்காணப்படவில்லை.

வினா- அதெதினாலெனின்,

விடை- இந்தவன்னியாதியங்கிச வியாப்தியானது சொற்பமா ய்க்கலந்ததினால் இதினுடைய தர்மமாகாசவாயுக்களிற்காணப் படவில்லை--சமஸ்தத்திலுங் காரணத்தைப்போற் காரிய முங்காணப்பட்டிருப்பதாலிந்தப் பஞ்சீகரணம் பிரமாண மென்றே பெரியவர்களறிந்திருக்கிறார்கள் ஆனதாலிந்தப்பஞ் சீகரணத்தினாலுண்டான ஸ்தூலபூதங்களுடைய பிரமாணங்கேட் பாயாக,

வினா- அதேதெனின்,

விடை- ஆகாசத்துக்குக்குணம் சத்தம் வாயுவுக்குக்குணஞ் சத்த பரிசம் தேயுவுக்குக்குணஞ் சத்தபரிசரூபம் அப்புவுக்கு க்குணம் சத்தபரிசரூபரசம் பிருதிவுக்குக்குணஞ் சத்தபரி சரூபரசகெந்தங்களென்று சொல்லப்படும்--இந்தவாகாசா தியங்கிசகுணங்கள் ஞானகர்மேந்திரியங்களில் காணப்பட் டிருக்கிறது.

வினா- அதேதெனின்,

விடை- சுரோத்திரம் ஆகாசாங்கிசமானதால் சத்தத்தையும் தொ க்குவாயுவாங்கிசமானதால் பரிசத்தையும் சட்சு அக்கினியாங் கிசமானதால் ரூபத்தையுஞ்சிங்குவை அப்புவினங்கிசமான தாலிரசத்தையும் ஆக்கிராணம் பிருதிவியங்கிசமானதால் கெந் தத்தையுங்கிரகிக்கின்றது--வாக்கும் ஆகாசாங்கிசமானதால்வச னிக்கும் பாணியும் வாயுவாங்கிசமானதாலிடுதலெடுத்தல்செய் யும் பாதமும் அக்கினியாங்கிசமானதால் கெமனாதி தொழிற்க ளைச்செய்யும் பாயுரு அப்புவினங்கிசமானதால் மலவிசர்க்கங்

கனாவிடச் செய்யும், உயர்ந்தப்பிரதிவிம்பனத்திசயமானதால் அஞ்ஞானந்தத்தைச் செய்யுமென்றறி.

வினா- இதற்கதிதெய்வமேதெனின்,

விடை- சுரோத்திரத்துக்குத் திக்கும் தொக்குக்கு வாயுவும் சட்சுவுக்குச் சூரியனும் சிங்குவைக்கு வருணனும் ஆக்கிராணத்துக்கு அசுவினிதேவதைகளும் வாக்குக்கு அக்கினியும் பாணிக்கு இந்திரனும் பாதத்துக்குத் திரிவிக்கிரமனும் பாயுருவுக்கு மிருத்தியுவும் உபஸ்தத்துக்குப் பிரசாபதியும்— மனதுக்குச் சந்திரனும் புத்திக்குப் பிரமனும் அகங்காரத்துக்கு உருத்திரனும் சித்தத்துக்கு க்ஷேத்திரஞ்ஞனும் அதிதேவதைகளாம்— இந்தத் திக்காதிதேவதைகள் ஆகாசாதி பஞ்சபூதங்களில் நின்றும் சத்துவகுணாம்சங்களிற் பிறந்த இந்திரியங்களிலிருந்து அந்தந்தப் பிராணிகளுடைய கன்மானுரூபமாக அனுக்கிரக நிக்கிரகங்கள் செய்துகொண்டு சரீரகரணப் பிரமாண கூட்டங்களுக்கு அதிதேவதையாயிருப்பதால் சகலசனங்களுடைய பிரவிருத்திக்கு ஏதுவாகவிருப்பார்கள்— ஆகையால் கன்மத்துக்குத் தக்கபடி குணமுண்டாகும், குணத்துக்குத் தக்கபடி மனது பிரவிருத்திக்கும், சீவன் மனத்தையாசிரயித்துக்கொண்டு ஞானேந்திரிய கன்மேந்திரியங்களோடே கூடப் புண்ணியபாவத்திலே சேர்ந்து வருகிறான்— இப்படிச் செய்துவருகிற விஞ்ஞானமயனான சீவன் செகமே தானாகவிருந்து கர்த்தா நானென்று தேகத்தையபிமானிக்கிறான், ஆன்மாவோவென்றால் சாட்சியாயிருந்துகொண்டு ஒன்றுஞ்செய்யாமலுஞ் செய்வியாமலுந் தடஸ்தனாயிருக்கிறார்— அகங்காரியே, பார்க்கிறதும் கேட்கிறதும் வசனிக்கிறதும் கர்த்தாவாயிருந்து கிரியைபண்ணுகிறதும் போக்தாவாகிப் போசிக்கிறதுமாயிருக்கிறான், ஆன்மாவானவர் இந்தவிகாரங்களிலே பொருந்தாமல் சாட்சியாகத்தானேயிருப்பார்- ஆனதால் ஆன்மாவுக்குக் கர்த்தத்துவமும் போக்த்ருத்துவமுமில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- லோகத்திற் பிராணிகளுடைய சேஷ்டைக்குச் சாட்சியாயிருந்த சூரியனைப்போலாம்.

வினா- அஃதெப்படியெனின்,

விடை- சூரியனானவர் தாமொருதொழிலுஞ் செய்யாமலுமே

ருத்தனைக்கொண்டு செப்பியாமலுயிருக்கப்பிராணிகள் அவ
கள் சுபாவகுணங்களினால் பிரவிர்த்திக்கிறதுபோல ஸூ
ரியனை பிரத்தியான்ம சந்நிதானத்தில் நின்று தேகேந்தி
ரியாதிகள் சேஷ்டிக்க அவரவர்களுக்கெல்லாஞ் சாட்சியாயி
ருக்கிறார் — இப்படிக்கொத்த பரமதத்துவத்தை அறியமா
ட்டாமல் மாயையினால் மோகிக்கப்பட்ட புத்தியை யுடைத்
தானவர்கள் தனக்கன்னியமான தேகேந்திரியாதிகள் செ
ய்கிறதொழிலை ஆன்மாவாயிருக்கிற தன்னிடத்திலாரோபித்
துக்கொள்ளுகிறார்கள்.

வினா- மூடனாயிருக்கிற புருடனானவன் அசங்கனாகவுஞ் சித்
ஆ ரூபனாகவுமிருக்கிற ஆன்மசொரூபத்தைக் காணாமல் ஆ
ன்மாவினிடத்திலேயனான்மகாரியமான தொழில்களையாரோ
பித்துக் கொள்ளுகிறதெப்படியெனின்,

விடை- ஆகாசத்தில் சந்திரனையோட்டாமலிருக்கிற மேகங்க
ளோடுகிறதைக்கண்டு சந்திரனோடுகிறானென்பதுபோலா
ம்-ஆதலால், அப்பா! ஆன்மானான்மவிவேகமுனக்குத் தெரி
யும்படி முன்னதாகச் செகத்துண்டானவழியை அன்புட
னே சொல்லுகிறேம் விவேகியாயிருக்கிற சீடனே நீகேட்
பாயாக.

## ஸ்தூலப்பிரபஞ்சம்.

வினா- அதேதெனின்,

விடை- ஈசுரலட்சணம் பொருந்தின பஞ்சீகிருதமான ஆகா
சாதி ஸ்தூலபஞ்சமகாபூதங்களினாலிந்தச் சராசரமான பிர
மாண்டங்களுண்டாயின — இந்தப்பிரமாண்டத்துட் பட்ட
நாலுவகையோனியாகிய சகல சரீரங்களுக்கும் நெல்லுமுத
லாகிய சகல ஓஷதிகளும் வாயுதேஜஸ அப்புபூமிகளுடன் அ
ன்னமாயின.

வினா- அதெப்படியெனின்,

விடை- சிலசெந்துக்கள் வாயுபட்சணம்பண்ணுகிறதும் சில
செந்துக்கள் சந்திரகிரணஞ் சூரியகிரணங் களைப்பட்ச
ணம் பண்ணுகிறதும் சில செந்துக்கள் மேகத்திவலைகளை
ப்பட்சணம் பண்ணுகிறதும் சிலசெந்துக்கள் மண்ணைப் பொ
சிக்கிறதும் சிலசெந்துக்கள் கல்லுகளைப்பொசிக்கிறதும் சில
செந்துக்கள் பழுப்பிலைகளைப் பொசிக்கிறதும் சிலசெந்துக்
கள் புல்லுகளைப்பொசிக்கிறதும்சிலசெந்துக்கள்மாமிசாதிகளைப்

போசிக்கிறதும்இலசெந்துக்கள்முதல்லூருதவியதுகளைப்போ சிக்கிறதுமாய்ச் ஜீவிக்கின்றனவாம்.

வினா- நாலுவகையோனியாவதேதெனின்,

விடை- சராயுசமென்றும்அண்டசமென்றும்சுவேதசமென்றும் உற்பீசமென்றும்நாலுவகையோனிகளாய்அதனதன்கர்மா னுசாரமாயிந்தச் செந்துக்கள் பிறக்கின்றன, அவற்றுள்சரா யுசமாவது கோற்பையில் நின்றும் பிறந்தமனுடர் முதலான செந்துக்களும், அண்டசமாவது முட்டையில் நின்றும் பிறந்த பறவைமுதலானசெந்துக்களும், சுவேதசமாவது வேர்வையில் நின்றும்பிறந்தபேன்ஈர்முதலானதுகளும், உற்பீசமாவது பூ மியைப் பேதித்துக்கொண்டு பிறந்தவிருட்சமுதலானதுகளு மென்று சொல்லப்படும் — இந்நாலுவிதமான பௌதிகங்களே ஸ்தூலசரீரமாயின — இந்தத்தூலசரீரங்களைத்திருஷ்டியேக சித் தமாய்ப்பார்க்கிற போது சமட்டியென்றும் — இந்தச் சமட்டி ஸ்தூலசரீர அவிச்சின்னமாகியும் பிரதி விம்பமாகியுமிருக்கிற சைதன்னியமெதுவோ அந்தச்சைதன்னியத்தையே உலகத்திலு ள்ள மனுஷாதி செந்துக்களில் நானென்கிற அபிமானத்துவம் வைத்ததால் வைசுவாநரனென்றும் நாலுவிதரூபங்களாய் விள ங்குகிறதால் விராட்டென்றும் இந்தச்சதுர்விதங்களானஸ்தூல பௌதிகசமஷ்டிகளில்அதனதன்சாதிவிசேடங்களாய்ப்பிரித் துப் பின்னமாய்ப் பார்க்கிற போது வியஷ்டியென்றும் இந் தவியஷ்டி ஸ்தூலசரீரத்தில் அவிச்சின்னமாகவும் பிரதிவிம் பமாகவுமிருந்த சைதன்னியமெதுவோ அதையே விசுவமா யிருக்கிற ஸ்தூலதேகத்தில் நானென்கிற அபிமானம்வைத்திரு ப்பதால் விசுவனென்றும் அந்த வியஷ்டியான விசுவனுக்கு ஸ்தூலசரீரமென்றும் இந்தஸ்தூலசரீரமானது அன்னவிகார மானபடியினால்அன்னமயகோசமென்றுஞ்சொல்லப்படும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- இந்த ஸ்தூலதேகமானது, பிதாப்போசித்த அன்ன விகாரத்தினாலுண்டான சுக்கிலசோணிதங்களால்பிறந்து அ ன்னத்தினால்விருத்தியடைகின்றது அன்னசாரமில்லாதபோ து நசித்துவிடுகின்றது — ஆகலால் ஸ்தூலதேகம்அன்னவிகார மானபடியினால்அன்னமயமென்றும்ஆனந்தமயகோசமுதலா னநாலுகோசங்களையும் வாளாயுதத்தை உறையானதுமறைத்த துபோல்மறைத்திருப்பதால்அன்னமயகோசமென்றும் இந்தஸ்

தூலதேகமான்று ஆன்மாவுக்குஸ்தூலபோகங்களைப் புசிக்
கிறதற்கிருப்பிடமென்றும் பெரியோர்களாற் சொல்லப்படும்.

வினா- அதேதெனின்,

விடை- ஆன்மாவானவர் சரீரத்திலிருந்து ஸ்தூலமான சத்தா
திவிஷயங்களைப் புசிக்குஞ் சாக்கிராவஸ்தையிலி
ருந்ததால் ஸ்தூலதேகம் போகமனுபவிக்கிறதற்கு இருப்
பிடமென்று சொல்லப்படும்.

வினா- போக்தாவென்பதேதெனின்,

விடை- இந்திரியங்களினாற் கொள்ளப்பட்ட சத்தாதிவிஷய
போகங்களை ஆன்மாவானவர் தேகேந்திரியமனதோடே கூ
டி அனுபவிப்பதால் போக்தாவென்று பெரியோர்கள்சொ
ல்லுவார்கள்.

வினா- அதெப்படியனுபவிக்கிறாரெனின்,

விடை- பதினொருவாசல் பொருந்தின தேகமான மேடை
யில் இந்திரிய பந்துவர்க்கங்களாகிற பரிவாரங்கள் சூழ ஆன்
மாவானவர்மகாராஜனாய் அந்தக்கரணமென்கிற சிங்காதன
த்திலிருந்து விஷயபோகங்களைப் புசித்துக்கொண்டிரு
க்கிறார்—இப்படிக்கொத்த ஆன்மாவை ஞானேந்திரியங்களைந்
தும் அதற்கதிதேவதைகளைந்தும் கர்மேந்திரியங்களைந்தும் அத
ற்கதிதேவதைகளைந்தும் மனதுமுதலானதும் அதற்கதிதேவ
தைகளைந்தும் அதனதன் தொழில் விளங்கப்பிரகார
மாயிருந்துகொண்டு உளப்பக்காரர்போல் சாக்கிருதையாய்ப்
பஜனைபண்ணுகின்றன—இந்த ஆன்மாவானவர் தூலதேகத்
தோடேகூடித்தூலவிஷயங்களைப் புசித்துக்கொண்டிராநின்றவே
ளைதன்றுவிவகாரம்பண்ணுகிறதால் இதுவேசாக்கிர அவத்தை
யென்றும், இப்படிசொல்லப்பட்ட சமட்டிவியட்டி யானச
ரீரங்களுக்கு அபிமானிகளான விசுவவைசுவாநரர்களுக்குஞ் சா
க்ஷிவஸ்துமூன்றுட்சுமகாரணவியட்டிசமட்டிக்குஞ்சொன்ன அ
போலப்பேதமில்லாமல் அபேதமென்றும், இப்பாலுனக்கு
ச்சொன்ன தூலசூட்சுமகாரணப் பிரபஞ்சங்களெல்லாம் ஒன்
றாய்க்கூட்டி மகாப்பிரபஞ்சமென்றும், இந்தமகாப்பிரபஞ்ச
த்துக்கு அவிச்சின்னமாகவும் விஸ்வப்பிரஞ்ஞாதி லட்சணமா
ய்விராட்டூற்தசுரபரியந்தமும்நின்றசைதன்னியம் ஒன்றே
யென்றும், யாதொருசைதன்னியம்அனுதியாகவும் அனந்தமா

சவும்வியக்தமாகவும் அசமாகவும் அட்சரமாகவு மிருக்கின்றதோ அதுவேயிந்தமகாப் பிரபஞ்சத்துடன் கூட்டாய பிண்டம் போத்கலந்திருப்பதால் சர்வம்பிரம மென்னும் மகாவாக்கியத்தாற் சொல்லப்படுகின்றது இந்தவாக்கியார்த்தத்தைப் பெரியவர்களால் வாச்சியார்த்தமென்னும் இதைவிட்டுப்பிரிந்த ஆன்மாவுக்கு லட்சியார்த்த மென்னுங்காரிய காரணலட்சணமான வ்விதுவதல் ஞானபரியந்தங் காணப்பட்ட சகலத்தையு மொன்மை மென்னுஞ்சொல்லப்படும்.

வினா- ஆன்மாவாவதாரோவெனின்,

விடை- அந்தக்கரணத்தையும் அதினுடைய தொழிலானமேனு புத்திசித்தவகங்காரங்களையுங்கண்டுகொண்டு தானும் அழியாதபடி விகாரமின்றியிருந்ததைசுயமெதுவோ அதுவே ஆன்மாவென்று குட்சமபத்தியினு லறிந்துக்கொள்— மேலும், இந்தப் பிரத்தி கான்மா வானவர் சுயப்பிரகாசர் நிரங்கிசர் அசங்கர் சர்வகாலத்திலுமேகரூபமாயிருக்கிறவர் நித்தியர் அகண்டானந்த சொரூபர்சகலாசையுமற்றவர்சாட்சி நிர்குணரென்றும், இவர்பிறக்கவுமில்லை யிறக்கவுமில்லை வளரவுமில்லைகுறையவுமில்லை யானதால் நித்தியரிசானைநற் புராணரென்றும் இவர்சரீரங்கள் கொல்லப்பட்டு மரித்துப்போகிற போதுந்தாஞ் சொல்லப்பட்டவருமல்லமரித்தவருமல் லென்றும் அறியலாகும்.

வினா- அஃதெப்படியெனின்,

விடை- தேகபந்தியுண்டாயிருக்கிறான் பிறந்தான் வளர்ந்தான் ஓடியாடித் திரிந்தான் ஒருநாளைக்கொரு நாள் குறைந்து இளைத்தானென்கிற ஆறுவிகாரங்களுந் தூரியமாயிருக்கிற தேகத்துக்கே தவிர ஆன்மாவுக்கில்லை இதுவன்றியுந்தாலமெல்கிறதும் இருசமெல்கிறதும் கறுப்பென்கிறதும் சிவப்பென்கிறதும் வர்ணாச்சிரமங்களும் அதினுடைய தர்மங்களும்சரீரத்துக்கே தவிர இந்தவிகாரங்களெல்லாம் சாட்சியாயிருக்கிற ஆன்மாவுக்கில்லை— இப்படிக்கொத்த பிரத்தியகான்மா விளிநிலவுண்மைத்துவமும் அதுவான்மாவாயிருக்கிறதேகாதிகளிடத்தில் ஆன்மத்துவமும் விபரீதமாகக் கற்பித்துக்கொண்டு மோகத்தினுல் சம்சாரசாகரத்திற் கழலுகிறான்.

வினா- அதெப்படியெனின்,

விடை — பிராந்தியினாலே நான்மனுஷன் நான்பிராமணன் நா ன் விவேகி நான்மகாபாவி நான்பிரஷ்டன் நானல்லவன் நான் துக்கி நான்சுகியென்றுபசி தாகமுதலான அநேகங்களை ஆன்மாவினிடத்திற்கற்பிக்கிறான் - மேலும், அநன்யமாவினுடை யதர்மமான சென்மசாமரணங்களும் பசிதாகமுதலான வைகளும்விபரீதமாக ஆன்மாவினிடத்திற் புத்திதோஷத்தினாலே ஆரோ பிக்கிறான் — அப்பா! பிராந்தியினாலே அவனிடத்தில் பொய்யாகக் கற்பி க்கிறதேது அதினுடைய குணதோஷங்களில் அணுமாத்திரமா னதும் ஆன்மாவுக்குக்கூடவுமில்லையென்றறி.

வினா — அதெப்படியெனின்,

விடை — பொட்டலான பூமியிற் காணப்படுகிறதைச் செலமெ ன்று சொன்னாலந்தப் பூமி ஈரமாகுமோ, நேத்திரத்தினு டையதோஷத்தினாற்சங்கைப்பார்த்துப் பச்சையென்கிற தால் அந்தச்சங்கு பச்சையாகுமோ? அல்லவே! ஆகாசங்கறுப் பென்று கற்பித்ததினால் ஆகாசங்கறுப்பாகுமோ? அப்படி போலனாத்மதர்மம் ஆத்மதர்மமாகுமோ.

வினா — இப்படிச் சொன்ன குருவைப் பார்த்துச் சீடன் கே ட்கும்படி, ஸ்வாமீ! சட்சுவுக்கு மனைக்கும் விடயமன் றாயிருக்கிற பிரத்தியகான்மாவினிடத்தில் அநான்மாவாகிற தேகாதி தர்மங்களை எப்படியாரோபிக்கப்படும் கண்ணுக் கெண்டவிஷயத்தினிடத்தில் விஷயாந்தரமானவேறொன்றை யாரோபிக்கலாம் அதுவும் பிரத்தியக்ஷத்தினிடத்தில் தப்பாகக் காணப்பட்டிருக்கிறது — மனதிற்குப் பூர்வங்கண்டிருந்த பதார்த்தத்தை நினைத்திருந்து வேறொரு பதார்த்தங் கண்டபோ து அந்தப்பதார்த்தமே இதுவென்று நினைப்பெட்சனை யுண் டாகும் இப்படிச் சட்சுமனக்குக்கு அகோசரமான ஆன்மா வினிடத்தி லெப்படியத்தியாசங் கூடும் — ஆன்மாவாகிற ஒன் றுக்காலுமனுபவிக்கப்படவில்லை அப்படி அனுபவிக்கப்படா ததுவல்லாமலுந் விசேஷணமான அநான்மாவினிடத்திலெப்படி யாரோபு சொல்லப்படும்? அநான்மாவினிடத்தி லான்மாத்தியா சமெப்படிவந்தது! இதற்கு நிவிர்த்தியாவதெப்படி! திக்கும்! ஜீவேசுரருக்குபாதிகள் சமமாயிருக்கச் சீவனுக்குமா த்திரம்பெந்தமெப்படிவந்தது! ஈசுவரனுக்குப் பெந்தமெப் படியில்லாமற் போயிற்று? அடியேனுக்கு இந்தச் சந்தேசங்க ளைத்தீர்த்துக் கருணைக்கண்ணாற் பார்த்துக் காதலாகையும் போ இன்றுப்படித் தெரியத்தக்கதாகச் சொல்லவேண்டுமெனின்,

விடை— என்றிப்படி கேட்ட சிடனைப்பார்த்து குருவானவர் சொல்லும்படிவாராயிசிடனே ஆன்மாவானவர் மனோவாக்காதிகளுக்கு விடயமாய்க் காணப்படுகிறவரல்ல அப்படிக்கிருந்தாலும் நானென்கிற அநுபவம் அபரோட்சமாய் சகலருக்குமுண்டிருப்பதால் ஆன்மாவிருக்கிறது பிரசித்தமே இப்படியான்மாவிருக்கிற தத்கடையாளமாயிருக்கிறது ஒருவருக்கும் நானல்லவென்கிறது சொல்லப் படவில்லை— நானிருக்கிறேனென்கிறத்தில் ஒருவரும் சாட்சியொப்பனைதேடவில்லை இப்படிபிரமாணங்களுக்கெல்லாம் பிரமாணமிய மெந்தமூலமென்று விசாரித்தறிந்தேலும், இவ்வான்மாவானவஞ்ஞானமாய காரியங்கள் மறைக்கப்பட்டதால் மனசுக்குப் பிரத்தியட்சமாயனுபவிக்கப்படவில்லை.

வினா— அஃதெப்படியெனின்,

விடை— மேகங்களானது சூரியனைமறைத்தது போலிந்தவான்மாவையும் அகங்காராதிவிடயங்கள்மறைக்கப்பட்டது— ஆதலால், விடயத்தைப் பிரத்தியட்சமாய்க்கண்டு அதினிடத்தில் மற்றொருவிடயத்தை யாரோபிக்கவேணுமென்று நீகேட்டசங்கை பெரியவர்களாற் பண்ணவில்லை இப்படியலபித்ததற்குப் பிராந்தியேகாரணம்.

வினா— அதெப்படியெனின்,

விடை— சட்சுமனசுகளுக்குவிடயமன்றாயிருக்கிற ஆகாசத்தினிடத்தில் கறுப்புமுதலானவைகள் பாலராற் கற்பிக்கப்பட்டதுபோல ஆன்மாவினிடத்திலும்புத்திப்பிரமையினால் அநான்மாதிகளைக் கற்பிக்கப்பட்டது— அநான்மாதிகளிடத்திலான்மாத்தியாசம் பண்ணுகிறதற்கு ஒருவொப்பனையும் அபேட்சிக்கவில்லை.

வினா— அதெப்படியெனின்,

விடை— இந்தச் சங்கையென்கிறதிலெந்த ஒப்பனையேவேண்டும்— இதுவன்றியுமுபாதிகளுடன் கூடின பிராந்திகளுக்குமொப்பனைவேணுமென்கிறது காணப்படவில்லை, நிருபாதிகளாயிருக்கிற சர்ப்பமுதலான பிராந்திகள் காணப்பட்டிருக்கிறது உபாதியிற் காணப்படவில்லை— ஆனாலுங் கொஞ்சமொப்பனைகாண்பித்துச் சொல்லுகிறேன்கேட்பாயாக இவ்வான்மாவானவர் அத்தியந்த நிர்மல சூட்சமசுயப்பிரகாசர் இப்படிப் புத்தியும் ஆன்மாவைப்போற்பிரகாசமானதால் ஆன்மப்பிரகாசத்துடன் புத்தியுங்கூடி நிர்மலமாய்விளங்கும்;

வினா- அதெப்படியெனின்,

விடை- சூரியன் முன்னேயிருக்கிற படிகக்கல்லானது எப்படி பிரகாசிக்குமோ அப்படியே ஆன்மப்பிரகாசத்தினால் புத்தியும் அந்தப் புத்திப்பிரகாசத்தினால் மனமும் அந்தமனப்பிரகாசத்தினாலிந்திரியங்களும் அந்த இந்திரியப் பிரகாசத்தினால் தேகமும்விளங்கும் — ஆகையால் தேகேந்திரியாதிகளாயிருக்கிற அநான்மாக்களிடத்தில் ஆன்மாவென்கிற புத்திகள் முடியிற் காண்பித்த திருஷ்டிப்பாலன் நிசமாகக்கண்டதுபோல மூடருக்கு நிசமாய்க்காணப்பட்டிருக்கிறது — அப்பா! ஆன்மாவுக்கு அத்தியாசகாரணமான புத்தியினிடத்திலிப்படியாக ஒப்பனையுண்டிருக்கிறது, அநான்மாவான தேகத்தினிடத்தில் நானென்கிற அத்தியாசமேது சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தப் பூர்வாபூர்வ அத்தியாசத்துக்கு உத்தரோத்தர வத்தியாசமேகாரணம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- சுழுத்தியவஸ்தைகளில் நின்றுமெழுந்திருந்த பேர்களில் அத்தியாசவாசனை காணப்பட்டிருக்கின்றது.

வினா- அப்படிக்காணப்பட்ட அத்தியாசத்துக்குக் காரணமேதெனின்,

விடை- அநாதியாயிருக்கிற அவித்தைவாசனையென்றறி,

வினா- இந்த அத்தியாசபெந்தம்வந்ததற்குக்காரணமேதெனின்,

விடை- யாதொருகாரணத்தினாலே சென்மசாமரணவியாதியாதிதுக்கங்களாகிற அனர்த்தங்கள் தன்னை வந்தடைந்தது, அந்த ஆன்மாவுக்குபாதியாகிய அவித்தைக்குப் பெரிதாயிரண்டுசத்திகளுண்டு.

## ஆவரணவிட்சேபம்.

வினா- அதேதெனின்,

விடை- ஆவரணசத்தி விட்சேபசத்தியென இரண்டுசத்திகளுண்டு இந்தச் சத்திகளுடனே கூடி ஆன்மாவுக்குச் சமுசாரபெந்தம் வந்தது. அந்தஆவரணசத்தியாலது, சத்ததாமத குணப் பிரதானமானதா லாவரணத்துக் கேதுவாயிருந்து அதற்கே மூலாஞ்ஞான மூலவிருளென்று சொல்லப்படும் அதனுல் சகல செகத்து மோகிக்கப்பட்டது — அப்பா! விவேகியாயிருந்தாலும் ஆன்மதத்துவத்தை நன்றாய்க் கேள்விப்பட்ட பண்

டிதனாயிருந்தாலும் ஆவரணசக்தியினால் மறைப்பட்ட ஞானமுடைத்தானவன் தன்னிதயத்திலிருக்கிற ஆன்மாவை அறியமாட்டான் விட்சேபமென்கிற ராசதசக்தியானது புருஷனுடைய பிரவிர்த்திக்கேதுவாய் ஸ்தூலமுதல் சூட்சுமமீறாகவுள்ளதான அசத்தாயிருக்கிற சகல பிரமாண்டங்களையும் ஆன்மாவினிடத்தில் கற்பிக்கும் — இதிற்கூறிச்சொல்லப்பட்ட ஆவரணசக்தியானது புருஷனாயிருக்கிறவனை நித்திரையானது சரீரத்தைமறந்து போக எப்படி மூடுகிறதோ அப்படியே பிரத்தியகான்மாவை உள்ளேதன்றாய் மறைத்துக்கொண்டு வெளியிலிருந்த விட்சேபசக்தியைக் காட்டுவிக்கும் — இந்த ஆவரணமென்ற பெரிதான சக்தியினால் நிர்மலமாயிருக்கிற ஆன்மாவை மறைக்கிறபோது புருஷனானவன் ஆனுபவகம் தகாதிகளினிடத்தில் மோகத்தினால் நானென்கிற ஆன்மபுத்தியை வைக்கிறான்.

விறு- அதெப்படியெனின்,

விடை- நித்திரைபோகின்றவன் சொப்பனங்காண்கிறபோது பொய்யான அந்தச் சொப்பனதேகத்தில் தானென்கிறபுத்தியை எப்படிவைத்தானோ அப்படியே அஞ்ஞானமானதுடைய பிறப்பிறப்புபசிதாகம் பிணி முதலான தேகதர்மங்களை ஆன்மாவினிடத்திற் கற்பிக்கிறான் — இப்படிக்கொத்தபுருஷனானவன் விட்சேபசக்தியினால் ஏவப்பட்டு புண்ணியபாவரூபமான கர்மத்தைச் செய்துகொண்டு அதினால்வரப்பட்டசுகதுக்கங்களைப் பொசித்துக்கொண்டுசமுசாரசாகரத்திற்சுழலுகிறான் — அதனால் பிரத்தியகான்மாவுக்குச்சமுசாரபெந்தமானது அத்தியாசதோஷத்தினாற் பிரபலமாகவுண்டாயிற்று ஆனதால் அந்த அத்தியாசபெந்ததோஷமே கூடிசெற்பவாசம்பிறப்பிறப்புமுதலான துக்கங்களினாலே பலவாதமுங்கிலேசிக்கிறான்.

விறு- அத்தியாசமாவதேதெனின்,

விடை- வஸ்துவையவஸ்துவாகக்கிரகிக்கிறதே அத்தியாசம் இதுபிராந்திமூலசுபாவமானதால் சமுசாரபெந்தத்துக்குக் காரணம் ஆன்மாவுக்கு அத்தியாசத்தினால் சமுசாரபெந்தம் அந்த அத்தியாசம் போனால் சமுசாரபெந்தமில்லை ஆகையால் இந்தப் பெந்தமோட்சங்களிரண்டையும்நன்றாயறி.

வினா- அதேதெனின்,

விடை- புருஷனுக்குப்பிரவிருத்தியேபெந்தம் நிவிர்த்தியேமோட்சம் இந்தப்பிரவிர்த்தி நிவிர்த்திகளினால் பெந்தமோட்சங்களுண்டாயின.

வினா- ஆன்மாவுக்கத்தியாசம்வந்ததேதுவேதெனின்,

விடை- இதுகாலகர்மாதிரூபங்கள் இவ்வத்தியாசமானது இதற்குக்கர்த்தாவாகியஈசுரனுக்குஉபாதியாகப்பரிணமித்துமாயைதான் பொய்யாயிருந்தும் ரச்சுவில்சற்பம்போற்சமுசாரத்தைக் கூட்டுகிறது— ஜீவனைப்போலே ஈசுரனுக்குபாதி கூட்டுறவுசமமாயிருந்தாலுஞ் சுத்தசத்துவமலினசத்துவமென்கிறவுபாதிஅபேதமானதால் ஜீவனுக்குப் பெந்தமேயன்றி ஈசுரனுக்குப்பெந்தமும் அதன்காரியமுமில்லை.

வினா- இதில் ஈசுரவுபாதியேது, ஜீவவுபாதியேதெனின்,

விடை- சுத்தசத்துவப்பிரதானமானமாயையே ஈசுரவுபாதி, மலினசத்துவப்பிரதானமானஅவித்தையேஜீவவுபாதி, இதில்சுத்தசத்துவப்பிரதானமான ஈசுவரனுக்குப் பெந்தமுமில்லை அதினுண்டானவிட்சேபகாரியமுமில்லை.

வினா- அதேதெனின்,

விடை- தமக்குஉபாதியானமாயையைத்தன்வயப்படுத்திக்கொண்டு சர்வக்ஞராயுமறைப்பில்லாதஞானமுள்ளவராயுஞ் சஞ்சலமில்லாதபடிக்குச்சுதந்தரராய்ச்சிருட்டிதிதி சங்காரப்பிரவேசங்களாகிற கிரியைகள் தன்னிச்சைக்கேற்றபடிசெய்துசதாசதங்க ளிரண்டையுந்தமக்குக் கீழ்ப்படுத்தி விளையாடிக்கொண்டிருக்கிறார்— ஆதலால் ஆவரணவிட்சேபமிரண்டுமீசுரனை யொன்றுஞ்செய்யமாட்டாது, வேதமும், ஈசுரன்தனக்குத்தானே சுதந்தரனாய் பிரவிர்த்திகளை யொடுக்கிக்கொண்டுமகா மகிமையைப் பொருந்தியிருக்கிறாரென்று சொல்லுகிறது, மலினசத்துவப்பிரதானமான ஜீவனுக்குப் பெந்தமும்சமுசாரமும் பொருந்தின— இந்தஜீவனுக்கு முன்சொல்லப்பட்ட விட்சேபங்கள் மிகவுந்திரளாய்க் காணப்பட்டிருக்கிறது, இந்தச்சமுசாரத்துக்கு மூலம் விபரீதமானஅத்தியாசம்இந்தஅத்தியாசத்துக்குமூலம்ஆவரணமாகியவஞ்ஞானம்இந்தவஞ்ஞானநிவிர்த்திஞானத்தினால் தவிரக்கர்மத்தினாலாகமாட்டாது.

வினா- அதென் கர்மத்தினால் நிவிர்த்தியாகாவெனின்,

விடை- கர்மத்துக்கும் அஞ்ஞானத்துக்கும் விரோதமில்லை; ஆதலால் கர்மம் அஞ்ஞானத்தைக் கெடுக்கமாட்டாது கன்மத்தினாலே ஜென்மமுங் கன்மத்தினாலே மரணமுமானதால் ஜனனமரணரூபங்களுங் கர்மிகளுக்கே — இந்தக் கன்மிகளுக்குக் கன்மவிலட்சணமான ஞானமில்லை அஞ்ஞான காரியமே கன்மமானதால் இந்தக் கன்மமும் அஞ்ஞானத்தினால் விருத்தியடையும் — அதனால் விருத்தியடைகிறதல்லாது அதினால் நாசமாகாது கன்மத்துக்கு அஞ்ஞானம் விரோதமாகாது, ஞானமே அஞ்ஞானத்துக்கு விரோதம் ஆதலால் அஞ்ஞானத்தைப் போக்கிறதற்கு ஞானமேதவிர வேறில்லையென்றறி.

வினா- அதெப்படியெனின்,

விடை- பிரகாசத்துக்கும் இருட்டுக்கும் எப்படி விரோதமோ அப்படியே ஞானத்துக்கும் அஞ்ஞானத்துக்கும் விரோதங் காணப்பட்டிருக்கிறது ஆனதால ஞானத்தினால் அஞ்ஞானத்தைப் போக்கிற நிமித்தம் புத்திமானாயிருக்கிறவன் ஞானத்தைச் சம்பாதிக்கவேணும் அந்த ஞானமும் ஆன்மானான்மவிவேகத்தினால் சித்திக்குமன்றி மற்றொன்றினாலுஞ் சித்தியாது.

வினா- புருஷனானவன் ஞானத்தைத் தேடுகிற விதமெப்படியெனின்,

விடை- புத்தியினாலே ஆன்மாவிது அநான்மாவிதுவென்று வேறுபடுத்தவேணும் அப்படி வேறுபண்ணினாலான்மாவினிடத்தில் அநான்மபுத்தியாகிற முடிச்சவிழ்ந்து போய் ஆன்மத்துவமும் உண்டாகும் — இப்படியிருக்க மூடர்களாயிருக்கிற பேர்கள் வேதாந்தங்களை விசாரியாமல் தாமே பெரியவர்களென்றெண்ணிக்கொண்டு ஈசுரகடாட்சங் குருகடாட்சமில்லாதபடி, ஆன்மசொரூபத்தை நானாவிதங்களாகச் சொல்லுகிறார்கள்,

## பலமதசித்தாந்தம்.

வினா- அதெங்ஙனெனின்,

விடை- அத்தியந்தபாமர மூடராயிருக்கிற பேர்கள் புத்திரனை ஆன்மாவென்றெண்ணியிருக்கிறார்கள்.

வினா- அதேதெனின்,

விடை- ஆன்மாவினிடத்தில் என்ன பிரீதியிருக்கிறதோ அது

புத்திரனிடத்தில் மிகவுங்கண்டிருப்பதாலும் புத்திரன் உட
ருத்தானிலைத்தானென்கிற அனுபவத்தினுல் ஆன்மாவை பு
த்திரனென்கிற சுருதியினுலுந் தீபத்தில் நின்றுந் தீபம் பிறந்
ததுபோல் பிதாவினிடத்தில் நின்றும் புத்திரனுண்டாகுமென
ன்கிறத்தினுலுந்தகப்பன் குணங்கள் பிள்ளையினிடத்தில் பிசா
ந்தர நியாயம்போற் காணப்பட்டிருக்கிற படியினுலுஞ் சுத்த
மூடனுயிருக்கிறவன் புத்திரனே ஆன்மாவென்றெண்ணுகிறு
ன்—இப்படி புத்திரனே ஆன்மாவென்கிற மதக்காரனை பற்
றொரு மதக்காரன் தூஷணித்துச் சொல்லுகிறுன், புத்திரன்
ஆன்மாவென்கிறதெப்படிக்கூடும் பிரீதிமாத்திரமே யல்லாமே
ல புத்திரனெப்படி ஆன்மாவாவான்—பிரீதியோவன்னமாகிற
போது க்ஷேத்திரபாத்திரதனங்களிலும் பிரீதியிருக்கிறதால் அ
துகளுமான்மாவாகவேணும் அப்படியில்லாகையால் புத்திர
னைக்காட்டிலும் விசேஷமாய் சகலப்பிராணிகளுக்குந் தேகத்
தினிடத்தில் பிரீதிகாணப்படுகின்றது, அதுவே யான்மாவாக
வேணும்.

விஞ- அதெப்படியெனின்,

விடை- வீடுவேகிறபோது புத்திரன்போனலும்போகட்டுமெ
ன்றுதன்தேகத்தைத்தப்பித்துக்கொண்டு ஓடுகிறுன் இதுவன்
றியுந்தன்தேகத்தைச் சவரட்சனை பண்ணிக்கொள்கிற நிமி
முப்புத்திரனைவிற்கின்றுன் அவன்பிரதிகூலனுய்ச்சொல்லுமிக
ளாதவனையில்சங்கரித்துப்போடுகிறுன் ஆகையால் தேகமே ஆன்
மாவன்றிப புத்திரனுன்மாவாகமாட்டான், நிரனுருபாதி மெய்
ப்பனைகளுந்திபத்தைப்போல் புத்திரனிடத்திலில்லை.

விஞ- அதெப்படியெனின்,

விடை- சகலஅவயவங்கள் பொருந்தின பிதாவினிடத்தில் நின்
று நொண்டிமூடங் கூன்குருடாகப் பிறக்கின்றுன் நல்லச
த்குணனுயிருக்கிற தகப்பனிடத்தில் துற்குண புத்திரன் பி
றக்கின்றுன் ஆனதால் நீசொன்னபுத்திராளடாசமே—இந்த
தேகமான துகிரகத்திற்புத்திரனுக்குப்பிதாவைப்போலிருந்து
க்கொண்டுசகலகாரியங்களிலும் சகலைவிஷக்களிலும்பஜமாவ
த்துவந் கண்டிருப்பதால் தேகமே யான்மாவென்று சொல்ல
வேண்டும்—புத்திரனே ஆன்மாவென்கிற சுருதியின் அர்த்த
முக்கியமாய்ப்புத்திரனை ஆன்மாவென்றுசொல்லவில்லை உபசா
ரமாகவான்மாவென்று சொல்லிற்று, மேலும், நானென்கிற அ

அப்பதத்துக்கு லட்சியமாய்க்கண்டது தேகமே தவிர வேறொன்றில்லை, சகலசெந்துக்களுக்கும் தேகமேநானென்கிற நிச்சயம் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டிருக்கிறது, சுருதியிலயுமிந்தப் புருஷன் அன்னரசமயனென்று தேகத்துக்கே புருஷத்துவத் தைச் சொல்லியிருப்பதால் தேகமான புருஷனே ஆன்மாவாகும் ஆன ம் புத்திரன் ஆன்மாவாக பார்ப்பான்—இப்படி தேகமே நான் மென்று சொல்ல, சார்வாகமதத்தினுடைய நிச்சயத்தை மற்றொருமதஸ்தன் கேட்டுப் பொறுக்கமாட்டாமல் தூஷித்துச் சொல்லுகிறான், தேகமெப்படியான்மாவாகும் தேகமானது அசேதனமாய் நானென்றறியப்பட்டிருக்கிறதுமாய் இந்திரியங்களிலே சரிக்கப்பட்டுச் செட்டிக்கிறதே தவிர சுதந்திரமாய்ச் செட்டிக்கவில்லை—கிரகஸ்தருயிருக்கிறவனுக்கு வீடாசிரயமாயிருப்பதுபோலத் சட்வாதியிந்திரியங்களுக்கெல்லாமிருப்பிடம். கியம்பாலியருதலான நாலு அவத்தைகளோடே கூடினதாகியுப்சுக்கிலசுரோணிதத்தாலுண்டாகியும் இருப்பதால் தேகத்துக்கு ஆன்மத்துவமொருக்காலுஞ் சொல்லக்கூடாது, நான்குருடன், நான்செவிடன் நானூமையனென்கிற அனுபவத்தினாலிந்திரியங்களே ஆன்மாவாகவேணும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- இந்திரியங்களுக்கு விடயங்களாயிருக்கிற சத்தியிருக்கிறது அதல்லாமல் உபநிடதத்திலுமிந்திரியங்களே தேகமென்று சொல்லியிருப்பதாலிந்திரியங்களுக்கே ஆன்மத்துவமுண்டு—என்றிப்படி சொன்னமதஸ்தனுடைய நிச்சயத்தைக்கேட்டுப் பொறுக்கமாட்டாமல் மற்றொருமதஸ்தன் தூஷித்துச் சொல்லுகிறான் இந்திரியங்களெப்படி ஆன்மாவாகும் அதென்றிருந்தால் வைப்பட்டுக்கொடாலியைப்போல் தொழிலைச் செய்கிறதே தவிர இந்திரியங்களுக்குச் சுதாசேதனையில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- காரணமாயிருக்கிற கோடாலிக்கெப்படி சுதாசேதனத்துவங்காணப்படவில்லையோ அப்படியே இந்திரியங்களுக்குஞ் சுதாசேதனத்துவமில்லை இந்திரியங்களான்மாவென்று சொன்ன சுருதியினுடைய அர்த்தம் இந்திரியஅதிதேவதைகளைச் சொல்லியதே தவிரப்பிரசித்தமாய் இந்திரியங்களுக்குச் சேதனத்துவஞ் சொல்லவில்லை—அசேதனமாயிருக்கிற இந்திரியங்களுக்கு வெளி

யிலிருக்கிற பதார்த்தத்தைத் தெரிவிக்கிற சாமார்த்திய மெய்படியில்லையோ அப்படியே சடங்களாயிருக்கின்ற சுரோத்திராதி சட்சுவாதிகளுக்கு அசேதனத்துவஞ் சித்திக்கும் ஆனதாலிந்திரியங்களைச் சேட்டிக்கப்பண்ணுகிற பஞ்சவிருத்தியாயிருக்கின்ற பிராணன் அவத்தாத்திரயங்களிலுமிருப்பதாலந்தப் பிராணனே யான்மாவாகவேணும் — இதன்றியும் நான் பசிகொண்டேன் தாகங்கொண்டேனென்கிற அனுபவமிருக்கின்றதாலுஞ் சுருதியிலும் பிராணனே யான்மாவென்று சொல்லியிருப்பதால் பிராணனுக்கேயான்மத்துவமுமின்றி இந்திரியங்களுக்கு ஆன்மத்துவ மொருக்காலுங்கூடாது — என்றிப்படிச் சொன்னமதஸ்தனுடைய நிச்சயத்தை மற்றொருமதக்காரன் ஆக்ஷேபித்துச் சொல்லுகிறான், பிராணனெப்படி ஆன்மாவாகும் வெளியிலே வந்திரிகிற வாயுவைப்போல் உள்ளிருந்து சஞ்சரித்துக் கொண்டிருருத்திபோலல்லது [illegible] என்று தெரியாதபடி சடமாயிருப்பதைப் பிராணன் [illegible] த்துக்கொண்டிருக்கிறது — சுழுத்தியில் பிராணனிருந்தும் [illegible] க்குக் காணப்படவில்லை ஆனதால் [illegible] கொண்டிருப்பனாயிருக்கின்ற [illegible] னோயான்மாவாகவேணுமன்றிப் பிராணன் ஆன்மாவாகமாட்டாது.

வினு- அதெப்படியெனின்,

விடை- நான் சங்கற்பித்தேன் நான் விகற்பித்தேன் நான் சிந்தனைபொருந்தினேனென்கிற அனுபவத்தினாலும் மனோமயனோ ஆன்மாவென்று சுருதிசொன்னதினாலும் மனமேதயான்மாவாகவேணும் பிராணன் ஆன்மாவல்ல, என்றிப்படிச் சொன்னமதஸ்தனுடைய நிச்சயத்தை மற்றொருசடனமதக்காரன் ஆக்ஷேபித்துச் சொல்லுகிறான் மனதுக்கு ஆன்மத்துவ மெப்படிக் கூடும் இந்திரியாதிகள் மனதினாலேவப்பட்டுத் தொழில் செய்கிற தெப்படியோ அப்படியே மனதுங்கர்த்தாவாகியிருக்கிற புத்தியினாலேவப்பட்டுப்பிரவிருத்திக்கிறபடியினால் கரணங்களையெல்லாமேவுகிறவனெவனோ அவனேயான்மாவாகவேணும் — மேலும், ஆன்மாவானவன் சுதந்தரனாகவும் புருஷனாகவு மொன்றினாலேவப்படாதவனாகவுமிருக்கவேணும் ஆதலால் நான் கர்த்தா நான்போக்தா நான் சுகியென்கிற அனுபவம் புத்தியினிடத்திலிருப்பதினால் புத்தியேயான்மா, அகங்காரதர்மம் புத்திதர்மமானதாலும் புத்தியாகிய விஞ்ஞானமயமேயான்மாவென்று வேதஞ்சொல்லியிருப்பதாலும் மனதைக்கா

ட்டிலுங் கர்த்தாவாய் சகலகாரியங்களுஞ்செய்து முடிக்கையா
லும் புத்தியாகிய விஞ்ஞானமயனே யான்மா வாகவேணும்—
என்று நிச்சயம் பண்ணின பௌத்தனுடைய மதத்தைக்கேட்
டுப்பிரபாகரனுந்தார்க்கிகனும் பொறுக்கமாட்டாமல் இவனு
டைய நிச்சயத்தைத் தூஷணித்துச்சொல்லுகிறார்கள், புத்தியெ
ப்படி ஆன்மாவாகும் புத்தி அஞ்ஞானகாரியமாய்க் கடிதில்நா
ஸ்தி படுறவதால் புத்தியான்மாவாக மாட்டாது—புத்தியாதிக
ளின் காரணங்களுமஞ்ஞானத்திலே லயங்கண்டிருப்பதாலும்பா
லவிருத்தர்கள் முதல் நானொன்று மறியேனென்கிற அநுபவஞ் சொ
ல்லுகிறதினாலும் அஞ்ஞானமய மான்மா வாகவேணு மன்றிப்
புத்தியானது ஒருக்காலும் ஆன்மாவாகமாட்டாது—விஞ்ஞான
மயனைக் காட்டிலும் ஆனந்தமயன்வேறென்று சுருதியிற் சொ
ல்லியிருக்கிறது இதன்றியுஞ் சுழுத்தியி லொருதுக்கங் களுமி
ல்லாமல் சுகமாயிருப்பதாலும் ஆனந்தமயனே யான்மா வெ
ன்கிறது அவசியம்,

விஞா- அதெப்படியெனின்,

விடை- புத்தியாதியிந்திரியங்களெல்லாஞ்சுழுத்தியில் அஞ்ஞான
த்திலே லயித்திருப்பதாலுமனக்கூட்டுறவில்லாததினால் துக்கங்க
ளைவில்லை யென்கிறதினாலும் துக்கியாயிருந்தவர்களுக்குக்கூட
ச்சுழுத்தியில்சுகங்கண்டிருப்பதாலும் நானொன்றுமறியேனெ
ன்கிறவநுபவங்கண்டிருப்பதாலும் அஞ்ஞானமாகிய ஆனந்த
மயனே ஆன்மாவாகவேணுமன்றி விஞ்ஞானமயன் ஆன்மாவாக
மாட்டான், என்று நிச்சயித்தமதஸ்தர்களைப்பாட்டமதக்காரன்
மகாபிமானயோசனையினால் தூஷித்துச்சொல்லுகிறான் அஞ்ஞா
னமெப்படியான்மாவாகும்ஞானமுங்கூடியிருக்கவேணும்ஞா
னமில்லாமற்போனால் அஞ்ஞானியென்று அஞ்ஞானத்தையெ
ப்படியறிவான்—சுகமாய் நித்திரைபோனேன் ஒன்றுமறியே
னென்று தன்னுடைய அஞ்ஞானமும் ஞானமும் நித்திரைதெ
ளிந்தெழுந்திருக்கிறவனிடத்திற் காணப்படுகின்றது—சுரு
தியிலும் பிரஞ்ஞானகனமாயிருக்கிற ஆனந்தமயனையே ஆன்
மாவென்று சொல்லியிருப்பதாலிந்த ஞானாஞ்ஞானங்கள்கூடி
னதற்கே யான்மத்துவஞ் சொல்லப்படுமன்றி அஞ்ஞானமட்
டுக்குமான்மத்துவங்கூடாது.

விஞா- அதேதெனின்,

விடை- ஆன்மாவானது மின்மினிப்பூச்சிபோல் சித்துஞ்சட

ஸேர்க்கூடினது ஆதலால் கஞ்சுட்டியாதிகள் போற்சேதனசட டமான அஞ்ஞானத்துக்கு ஆன்மத்துவங் கூடாது ஞானேந் ஞானமே டான்மாவாகவேணும்— என்றிப்படிச் சொன்ன பாட் டமதஸ்தனுடைய நிச்சயத்தை சூனியவாதக்காரன் து ஷித்துச்சொல்லுகிறான் ஞானேந்திரியங்களிரண்டுக்குமான்மத் துவமெப்படிக்கூடும் ஞானேந்திரியங்களிரண்டும் பிரகாசாந்த காரங்கள்போலிருக்குமானதால் இரண்டுக்குஞ் சமானாதிகரணஐக்கி யமும் சையோகமும் ஒன்றுக்கொன்று கலப்பதுங்கூடாது ஆ கையால் ஆன்மப்பிரகாசங்கள் போலிருக்கிற ஞானேந்திரியங் களிரண்டுக்கு மான்மத்துவசித்தியாது — அஞ்ஞானந்தான் ஞானந்தான் புத்திதான் குணங்கள் தான் இவையெல்லாமெள்ள ளவாகிய நித்திரையில் ஒன்று மனுபவிக்கப்படாமல் சூனி யமே யனுபவிக்கப்படுகின்றது — சுழுத்தியிலொருவனுமுவ மில்லை நானென்கிறதுந் தோன்றவில்லையென்று நித்தி ரைவிழித்தெழுந்திருந்த சகலசனங்களாலும் சூனியத்துவமநுபவிக் கப்படுகின்றது ஆகையாற் சூனியமே யான்மாவாகவேணுமென்றி ஞானேந்திரியங்களிரண்டுமான்மாவாகமாட்டாது — வேதத்தி லும் அசத்தே முன்னிருந்ததென்று நன்றுஞ் சொல்லியி ருப்பதால் சூனியத்துக்கேயான்மத்துவஞ் சித்திக்கும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- குடமானது முன்னில்லாமலிருந்து பிறந்ததின் பிற கு குடமென்று காணப்படுவதுபோல் அசத்திலே நின்று ஞ்சத்தான சகலசெகத்தும் பிறந்தது ஆனதால் சூனியமே யாகவேணுமென்றான்- இந்தப் பிரகாரம் நாங்களே விவேகிக ளென்று மதாபிமானத்தோடே தங்கள்தங்கள் மதங்களுக்குத் தகுந்தயோசனைகள் செய்து அதற்குத்தக்க சுருதிகளையுஞ்ச ங்கிரகித்துக்கொண்டு புத்திரன் முதல் சூனியபரியந்தமும் ஆ ன்மாவென்றெண்ணின மதங்களையெல்லாம் அநான்மாவென்று நிரூபிக்கப்பட்டது.

வினா- அதெப்படியெனின்,

விடை- இப்படிக்கொத்த மதக்காரருடைய சுருதியுத்தியனு பவங்களாபாசமாத்திரமாகையாலும் அவர்களபூர்வாபூர்வ யுத்திகளுந்த மோத்தரயுத்தியினால் வாதிக்கப்பட்டுப்போவ தாலும் புத்திரன் முதல் சூனியாந்தமட்டும் அநான்மாக்களெ ன்று சுருதியுத்தியனுபவங்களினால் நிச்சயிக்கப்பட்டது — மே

னும் பிரமாணாந்தரத்தினால் வாதிக்கப்பட்டுப்போனவைத்தானை ப்பெரியவர்களால் யதார்த்தமாயங்கீகரிக்கப்படவில்லை ஆன னால் புத்திராதி சூனியாந்தமும் அனான்மாவென்றுன் புத்தியி னால் நன்றாய்த்தெரிந்துகொள்வாயாக.

வினா- இப்படிசொன்னகுருவைப்பார்த்துச் சீடனானவன் கேட்கும்படி, அய்யா? சுழுத்திகாலத்தில் தேகேந்திரியாதிகள் சகலமும் லயமாய்ப் போனபோது சூனியத்தைத் தவிர வேறொன்றும் அனுபவிக்கப்படவில்லை, தேவரீர் சூனியம் ஆன்மா வல்லவென்றால் அந்தச் சூனியத்தைத் தவிர ஆன்மாவென்று வொருபதார்த்தம் வேறேயிருந்து அனுபவிக்கப் படவில்லை— அப்படியே சுழுத்தியில் ஆன்மாவிருந்தாரென்றால் அவன் அனுபவிக்கப்படவில்லை, அவர்தாமெப்படியிருக்கிறார் இருக்கிற தற்குப்பிரமாணமென்ன, லட்சணமென்ன, அகங்காராதிகளெல்லாம் வாதிக்கப்பட்டுப் போனாலும் ஆன்மா அப்படி வாதிக்கப்படவில்லையே இப்படிக்கொத்த இருதயக்கிரந்திலட்சணமான சமுசயங்களெல்லாம் யுக்தியாகிற வாளினால் அறுத்துக்கிருபைகூர்ந்து அடியேனை ரட்சிக்கவேணுமென்னின்.

விடை— வாராய் சீடனே நீ உன்னுடைய புத்திக்குச்சம்மதமாயிருக்கிற சூட்சுமமானசங்கையைக்கேட்டாய் அது சூட்சுமமான ரகசியம் அது சூட்சுமபுத்தியானவர்களுக்கு யாக்கவிடத்தில் காணப்பட்டிருக்கின்றது— ஆயினும் நீ நம்மையேதேது கேட்டனையோ அதுகளையெல்லாம் நன்றாய் உனக்குத்தெரியச் சொல்லுகிறோம் கேட்பாயாக, அதிரகசியமாகியுஞ் சிரேஷ்டமாகியுஞ் சூட்சுமமாகியுமுள்ள சூட்சுக்களினாலே அறியப்படுகிறதாகியுமிருக்கிற ஆன்மாவானவர் காரியமாயிருக்கின்ற புத்தியாதி இந்திரியங்களெல்லாந்தனக்குக்காரணமான சுழுத்தியஞ்ஞானத்தில் லயமாயிருக்கிற போது ஆலமரம் வித்திற்கானதுபடி யொடுங்கியிருந்ததுபோல அவ்வியாகிருதமா யிருந்தார்— அவ்வான்மாவானவர் சாக்கிரத்தோடே கூடியிருக்கிறவிடத்தில் வியாகிருதனாகியும் சுழுத்தியையடைந்திருக்கிறவிடத்தில் அவ்வியாகிருத சொரூபமாகியுமிருக்கிறாரன்றிச் சூனியமாயில்லாமற்போகவில்லை.

வினா— அதெப்படியெனின்,

விடை-ஆல்மரமானது ஒருவிடத்தில் அங்குரமாயும் ஒருவிடத்தில் வித்தாகவுங் காரியகாரணமாய் அரூபமாயிருந்தது போலான்மாவுஞ் சுழுத்தியில் அவ்வியாகிருதமாயிருக்கிறார்—ஆனதால் சுருதியுமிந்த அவத்தையை அவ்வியாகிருதமென்று சொல்லுகிறது இந்த அர்த்தத்தையறியாமலேதுராளிகள் சுருதியுக்தியினாற் செகத்தைக் காரணத்தே சூனிய மென்றறிந் திருக்கிறார் இதன்றியும் அசத்திலிருந்து ஜகத் துண்டாயிற்றென்பது ஓரிடத்திலுங் கேள்விப்படவுமில்லை காணப்படவுமில்லை, மனுடக்கொம்பின் நின்றும் ஆகாசபுஷ்பத்தினின்றுமொரு பதார்த்தங்களுண்டாயிற் றென்றால் அசத்திலிருந்து சத்துண்டாயிற்றென்பது கூடும்.மண்ணையல்லாமல் குடம்பிறந்ததென்றால் மணலிலுந் தண்ணீரிலுங்குட முண்டாகவேணும் அப்படியொருவிடத்திலுந் தண்ணீர்மணலிரண்டிலுங்குடமுண்டாயிருக்கிறது காணோம் சத்தாயிருக்கிறபிரமத்திலேயே சொரூபமாயுண்டானது ஜகத்துக்குக்காரணமேயல்லாது வேறில்லை இப்படியல்லவென்றால்காரியகாரணலட்சணத்துக்கு விபரீதமாகும் ஆனதால்சகலலோகத்திலுஞ் சகலசாத்திரத்திலுஞ் சத்திலிருந்து சகலமுமுண்டாயிற்றென்று சொல்லுவே சம்மதம்-அசத்திலிருந்து சத்துண்டாயிற்றென்ற சுருதிக்குமேல் சுருதியானது அசத்திலிருந்து சத்துண்டாகுமோ வென்று சங்கித்து அசத்தைப் பொய்யென்று நிஷேதித்துச்சத்திலே நின்று அசத்துண்டாயிற்றென்று சொல்லுகிறது-ஆனதால் வாரய் பிராந்த சிரோமணியே சுழுத்தியிற்பிரக்ஞானமானவன் அவ்வியத்த சத்தத்தைப் பொருந்தி சாக்கிரதையாய் சாட்சியாகப்பார்த்திருப்பதால் சுழுத்தியைச்சூனியத்துவமென்றதப்படிசித்திக்கும்—அப்படிசுழுத்தியைச் சூனியமென்றவறிவே சொல்லப்பட்டது எந்தவிதமாகில் நிச்சயம் பண்ணினாய் அதை யெப்படி சூனியமென்றறிந்தாய் அதைச் சொல்லென்று கேட்டவிடத்தில் மூடாருக்குள்ளே சிரேஷ்டனாயிருந் தவனுறும் அதற்கேற்றவுத்தரமென்னவென்று சொல்லப்போகிறான் இப்படிக்கேட்கின்றபேருக்கு அநுகூலமானவுத்தரஞ்சொல்லுகிறவொருத்தனுமில்லை ஆனதால் நாமேசொல்லுகிறோம் சுழுத்தியிலே கண்ட சூனிய பாவத்தை சூனிய மென்றறிந்தவனெவனோ, நித்திரை போகிறபோது சூனிய மென்று சூனிய பாவமாகத் தன்னாலனுபவிக்கப் பட்ட சூனியத்தைத் தான் தானே சொல்லுகிறான் ஆதலாலந்தச் சூனிய மென்கிற வுத்தரத்திலே தான்கெடாமலிருந்துக் கொண்டு சூனியத்தைப்பார்

இதேரு மென்கிறதன்சத்தையுமறந்து மூடனொருவன் தன்னையுங்கூட்டிச் சூனியமாகச்சொல்லுகிறான்— ஆகையினாலே யாதொருபுருஷனுக்கும் நித்திரையில் சகலமும் லயித்திருப்பதால் தான் ஒன்றையும் அறியாதபடி சுழுத்தி ஸ்தானத்தையடைந்திருக்கிறான் இந்தப்புத்தியாதி இந்திரியங்களில்லாமலிருக்கிற சுழுத்தியையறிந்துக் கொண்டிருக்கிறதெதுவோ அதுவே நிர்விகாரமான ஆத்மாவென்றறி—இப்படிக் கொத்த சுயஞ்சோதியான ஆன்மப்பிரகாசத்தினால் பிரமாண்டத்தில் சூரியசந்திராதிகளும் பிண்டாண்டத்திலிருக்கிற தேகேந்திரியாதிகள் சகலமும் விளங்குகின்றது.

வினா- அதேதெனின்,

விடை- பிரகாசமான சூரியனைத்துலக்குவிக்கிறதற்கு வேறொருபிரகாசாந்தரமான வஸ்து பூமியிலெப்படி காணவில்லையோ அப்படியே யான்மாவைத்துலக்குவிக்கிறதற்கு வேறொருவஸ்துவுமில்லை, யாதொரு சாக்கிர சொப்பன சுழுத்திகளெதினாலறியப்படுகிறதோ அதுவேயான்மா, அப்படியறிந்து வருகிற ஆன்மாவை மெய்யறியப்படும்.

வினா- அதேதெனின்,

விடை- சகலத்தையுந்தகிக்கிறது அக்கினி அந்த அக்கினியைத் தகிக்கிறபதார்த்தம் வேறொன்றெப்படியில்லையோ அப்படியே சகலத்தையுமறிகிறது ஆன்மா அந்தஆன்மாவையறிகிறவன் ஒருவனுமில்லை— ஆனதால் அனுபவரூபமாய்சுயம்பிரகாசமாய்த்தானேயடைந்திருக்கிற ஆன்மாவானது தன்னைவிட அறிகிறதற்கு வேறே யொருஅறிவில்லாததால் தன்னாலே தன்னையறியவேணும்— கிரியமாயிருக்கிற புத்தியாதிகளெல்லாம் சுழுத்தியில் லயமானதால் தானொருத்தனேயிருந்துக்கொண்டு காணாதவன்போலவுங் கேளாதவன்போலவும் அறியாதவன்போலவுமிருக்கிறான் இந்தச் சுழுத்திரூபமான அந்தகாரத்துக்குத்தானே சாட்சியாய்நிருவிகற்பமாய் சுகமாயிருக்கிறான் ஆதலாற்சுழுத்தியிலான்மாவுண்டென்பதிற் பிரமாணந்தானே,

வினா- அதெப்படியெனின்,

விடை- நித்திரைபோயெழுந்திருந்ததன்னாலேயே தானிருந்த நினைப்பை நினைத்துக்கொள்கிறான்,

வினா- அதேதெனின்,

விடை- யாதொருவனும் நான் சுகமாய் நித்திரை போனேன் நானொன்றுமறியேனென்கிற அநுபவமே ஆன்மாவிருக்கிறதற்குப்பிரமாணம் மேலும், சுழுத்தியானந்தமயமென்றும் அன்னிய வஸ்துக்களில்லையென்றுந் தானென்கிறதில்லையென்றுஞ் சுழுத்தியிலநுபவித்ததைஎழுந்திருந்தவுடனினைத்துச் சொல்லுகிறான்.

வினா- அதேதினாலெனின்,

விடை- எவனாலே யெது அநுபவிக்கப்படுகிறதோ அவனாலேயதை நினைக்கவுஞ் சொல்லவுங்கூடும்—அதுதவிர அன்னியனாலநுபவித்த பதார்த்தத்தினுடைய நினைவு வேறெயொருத்தனுக்குத் தோற்ற மாட்டாது ஆனதால் சுழுத்தியிலே தானென்கிற ஆன்மாவிருக்கிறதற்குப் பிரமாணமாகப் பெரியோர்களாலும் பாலவிருத்தாதிகளாலும் அறியப்பட்டிருக்கிறது.

வினா- இதற்கடையாளமேதெனின்,

விடை- முன்னிருந்த நினைப்பே பின்னும் வருகிறது, சுகமாய் நித்திரை போனேனென்கிறதேயடையாளம், பூர்வமொன்றை யநுபவித்ததில்லாமற் போனால் பின்பு முன்பநுபவித்த நினைப்புப்பிறக்கமாட்டாதென்கிற யுக்திகளும் ஆன்மாவுண்டென்பதிற்பிரமாணம்—மாண்டூக்கிய வுபநிடத்திலும் ஆன்மாவானவர் நித்திரையிலொருகாரியங்களுங் கோரவில்லை, அவர் பிரக்ஞானகனராய் ஆனந்தமயராய் ஆனந்தபோக்தாவாயிருக்கிறாரென்று சொன்னதால் சுழுத்தியில் ஆன்மாவிருக்கிறாரென்பதிற் சந்தேகமில்லை.

வினா- சுழுத்தியென்பதேதெனின்,

விடை- ஆன்மாவானதொன்றுங் கோராதபடி சொப்பனமுமில்லாதபடியிருக்கிறதே சுழுத்தி அந்தச்சுழுத்தியில் ஆன்மாவிருக்கிறாரென்று சுருதியாதிகளில் சொல்லப்பட்டிருப்பதால் ஆன்மா அழியாமல் சுழுத்தியிலிருக்கிறதற்குச் சாஸ்திரங்களே பிரமாணம்—அநுபவத்திலும் சுழுத்தியிலொன்றுங் கோராதபடி சொப்பனத்தையுங் காணாதபடி யிருந்தோமென்கிற தற்கு தானில்லாவிட்டாலிதுகள் கூடாது ஆகையால் ஆன்மாவிருக்கிறாரென்று அநுபவிக்கப்பட்டது, இதற்குமுன் சாட்சிப்பிரமாணங்களாய்ச் சொன்ன சுருதி சாஸ்திரங்களினால் ஆன்மாவை

சாட்சியாகப் பெரியவர்களால் அறியப்பட்டிருக்கிறது— ஆகை யாலிந்த ஆன்மாவைக்கேவல மென்றுஞ் சுத்தமென்றுஞ் சச்சி தானந்தலட்சணமென்றும் பிரத்திய கான்மசொரூபமென்று ஞ் சொல்லப்படும்.

வினா- சச்சிதானந்தலட்சணந்தவையேதெனின்,

விடை- காலத்திரயங்களிலும் அவத்தாத்திரயங்களிலு மழியா திருக்கின்றது சத்ரூபத்துவமும், காலத்திரயத்திலு ம் பிரகாசமான அறிவைப்பொருந்தின சைதன்னிய மாயி ருப்பது சித்ரூபத்துவமும், அகண்டமாய்த் தடையற்ற ஆனந்தத்துவமாயிருப்பது ஆனந்தத்துவரூபமாம்.

வினா- இதின்சத்தாவதேதெனின்,

விடை- யாதொருமனுஷனுக்குஞ்சாக்கிர சொப்பன சுழுத்தி யிலேவிடைவிடாமலான்மா விதுவுடையசத்தையானது நாசமின் றிருப்பதால் காலத்திரயத்திலுமான்மா சத்தாயிருக்கிறதெ ன்பது — ஆன்மாவாகிறநான் சதாகாலத்திலு மிருக்கிறே னென்பதி விடைவிடாமலுடையாளங்கள் காணப்பட்டிருக்கி றது இல்லையென்பது வொருக்காலுமில்லை ஆகையால் ஆன்மா வாகிற தனக்கு நித்தியத்துவஞ் சொல்லப்பட்டது — எப்போ தும் போப்போதும் வாலிபவசகயெனைக்குஞ் சொரூதலை னா அவத்தைகளிலுஞ் சாக்கிரமுதலான அத்தகைகளிலும் அன் னியமாயிருக்கிற விருத்திகளிலும் நற்புத்தியாயிருக்கும் போ துந் துற்புத்தியாயிருக்கும்போதுந் கெங்கையானது தன்னி லேயுண்டான அலைகள்தோறுஞ் சலம்விடாமலிருக்கிறதுபோ ல் சதாகாலமும் சகல அவத்தைகளிலும் நானென்று சாட்சியா யேகரூபமாய் சத்ரூபமாயிருக்கின்றதென்றறி— இவ்வகங்கா ராதிகள் நிமிஷநிமிஷந்தோறு மொருபதார்த்தத்தில் பரிண மிக்கிறதும் அஃதில்லாதபோகிறதுமாயிருக்கிறவிகாரங்களோ ட்பொருந்திப் பின்னமாகின்றது, சத்ரூபமான ஆன்மாத் தீர்க்க மாயிருக்கிறதால்சதா நித்தியசொரூபமென்றறி-ஈதொருசொ ப்பனத்தைக்கண்டேனே அந்தநாளைசுகமாய் நித்திரைபோய் சாக்கிரத்தில் விழித்தேனென்கையாலும் இந்த அவத்தாத்திர யங்களிடத்திலுஞ் சத்தாமாத்திரமாய்த் தானிருக்கிற நிஜலும் சத்ரூபமான்பதிற் சந்தேகமில்லை— சுருதியில் சோடசகலைபு டையவன் சிதாபாசனன்றி ஆன்மாவல்லவென்று சொல்லு

னாலும் ஆன்மா நிஷ்களமாகையால் லயமில்லை, லயமில்லாமை யால் ஆன்மா நித்தியமென்றறி.

வினா- சித்தாவதேதெனின்,

விடை- ஜடமாயிருக்கிற பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கிற சூரியன்பிரகாச சொரூபமன்றி ஜடசுபாவ மெப்படியில்லையோ அப்படியே புத்தியாகிய ஜடத்தைத் தோற்றுவிக்கிற ஆன்மா சித்ரூபமென்றறி — ஜடங்களாயிருக்கிற ஜீவர்கள் முதலான பதார்த்தங்களுடைய தோற்றத்துக்குச் சூரியாதிப்பிரபையைத் தவிர வேறிடத்திலுஞ் சுதா தோற்றமெப்படியில்லையோ அப்படியே புத்தியிந்திரியதேகாதிகளுக்குஞ் சுதாதோற்றமில்லை ஆதலால் யாதொரு சிற்பிரகாசத்தைக் கொண்டு இந்தத் தேகேந்திரியாதிகள் விளங்கும் அதுவே சின்மய சொரூபம் அப்படிக்கொத்த சின்மய சொரூபத்தைச் சுருதி சம்மதமாகத் திருஷ்டாந்தத்தில் ஜடபதார்த்தங்களுக்குச் சூரியனெப்படியோ அப்படியே தார்ஷ்டாந்தத்திலும் புத்தியாதிகளைத் தோற்றுவிக்கிற ஆன்மா சின்மயமென்றே சொல்லுகிறது — அப்படி சூரியனானவன் தன்னைத் தோற்றுவிக்கிறதிலும் தனக்கன்னியமான பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கிறதிலுந் தன்னைத் தவிர வேறேயொரு அன்னியப்பிரகாசத்தை யெப்படி யபேக்ஷிக்கவில்லையோ அப்படியே ஆன்மாவுந் தன்னைத் தோற்றுவிக்கிறதிலுந் தனக்கன்னியமான தேகேந்திரியாதிகளைத் தோற்றுவிக்கிறதிலுங் காரணமாவது சின்மயமென்றேயறி — ஆன்மப் பிரகாசமானது வேறொரு பிரகாசங்களை அபேக்ஷிக்கவில்லை.

வினா- அதேதெனின்,

விடை- தன்னுடைய பிரகாசத்தினால் தானே விளங்குகிற சுயஞ்சோதியாகையால் இச்செகத்ரூபமான ஆன்மாவிற்குப் பரப்பிரகாசத்தை அபேக்ஷிக்கத்தேவையில்லை — ஆகையால் அந்தச் சிவப்பிரகாசத்தைச் சந்திரசூரியாக்கினி மீன் முதலானதுகள் எள்ளளவாகிலுந் தோற்றுவிக்கமாட்டாது இந்தச் சந்திர சூரியாதியாகிய செகத்துஞ் சித்ரூபப்பிரகாசத்தினாலே விளங்கப்பட்டுக் கொண்டு வருகிறது ஆதலா லிவ்வான்மாவே பாவியாதி சாக்கிரமாதி சகலாவத்தைகளிலுமிருக்கின்றதென்றறி — இவ்வான்மாவுடைய சொரூபியானதா னானந்த பரிபூரணமே தன்னுடையலட்சணம்.

வினா- அதெப்படியெனின்

விடை- தனக்கன்னியமாகியபதார்த்தங்களிடத்திலேயுஞ்சுகமெ ன்றுபிரீதிவைப்பதாலான்மா சுகவேதுக்களாயிருக்கிற சகல விஷயங்களிலும்அவதியோடேகூடினவானந்தங்காணப்பட்டி ருக்கிறது ஆன்மாஆனந்தமானால்ஒருக்காலு மவதியில்லாததா னதால் அந்தப்பிரமானந்தமேதன்னுடைய ஆனந்தமென்றறி

வினு- அதெப்படியெனின்,

விடை- பிராணிகளுக்கு இந்திரிய நஷ்டமாகியுந்தேகசீரண மாகியும் பிராணன்போகிற தருணத்திலின்னமும் பிழைத்து க்கொள்வோமென்கிற வாசையிருப்பதா லான்மா பிரியவத் துவென்பதிற் சந்தேகமில்லை—ஆகையால் சகல சரீரங்களுக் கும்ஆன்மாபரமானந்தசொரூபம், யாதொருஆனந்தத்தினால் சகல விடயானந்தங்களும் பிறக்குமோ அந்தவிடயானந்தங்க ளும் ஆன்மானந்தத்தைத்தவிரவேறில்லை ஆதலால் ஆன்மா சுக சொரூபமென்றேயறி-புத்திரதனாதிகளைக்காட்டிலும் அன்னி யமானதே கேந்திரியாதிகளைக்காட்டிலும் ஆன்மாப்பிரியவஸ் துவாகையால்ஆன்மாபரமானந்தசொரூபியென்றறி, உலகத்தி ல் ஆபத்துசம்பத்துக்களிரண்டினாலும் பிரியமாயிருக்கிறவஸ் துபிரியமாயிருக்குமே தவிர வொருக்காலும் அப்பிரியமாக மாட்டாது அதுபோல ஆன்மாவொருக்காலும் அப்பிரிய வஸ் துவல்லவென்றறி—சகலப்பிராணிகளுக்கும்ஆன்மா அதிகப்பி ரியவஸ்துவேதவிர அப்பிரியவஸ்துவல்ல.

வினு- அதேதெனின்,

விடை- புத்திரமித்திரகளத்திராதிகளையும் தனதான்னிய முத லாகிய பதார்த்தங்களையுங்கிரகாதிவியாபாரம்உழவுபசுக்கள் சம்ரட்சணைராஜசேவைமுதலாகியகிரியையாதிகளையும்ஆன் மசுகத்தை இச்சித்தேயிச்சித்திருக்கிறார்கள் —பிரவிர்த்தி நிவி ர்த்திமுதலாகிய தொழில்களெல்லாந்தன் சுகத்துக்கே தவிரஅ ன்னியனுக்காகச்செய்யவில்லை ஆகையால்ஆன்மாபரமசுகசொ ரூபியென்றறி—வாராய் சிஷனே முன்சொன்ன ஆன்மா ஆன ந்தசொரூபியானதால்சகலவஸ்துக்களைக்காட்டிலும் சிரேஷ்ட மென்று சொல்லப்பட்டது,யாதாமொருத்தனிப்போது நாம் சொன்ன ஆனந்தசொரூபமான ஆன்மாவைத் தவிரஆனந்தம் வேறேயொன்றிருக்குமென்றெண்ணுகிறானோ அவன்சகலதுக் கத்தையுமடைவானென்றறி,

வினா- இப்படிசொன்ன குருவைப்பார்த்துச் சீஷன் கேட்கு படி, ஸ்ரீகுருஸ்வாமீ? அடியேன் அறியாமையிருக்கும்போதே சாஸ்திரங்கள்கேட்கிலும் அந்தக்கேள்வியினாலுண்டான குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டியது, மோக்ஷமாகிறதுக்கு அநேகவிதமுடையவர்க்கு அபராதத்துக்கிடமாகாது ஆனந்தமான் ஆன்மாவும் அன்னியர்களும் அன்னியம் ஆன்மாசுகமென்பதல்லவென்று நினைத்து அவ்வான்மாவுக்குச் சுகத்தைக்கோரிச் சகல ஜனங்களும் பிரயத்தனம்பண்ணுகிறார்கள் — சகலஜீவர்களுமான்மாவுக்குச் சுகந்தேடுகையிற்பிரயத்தனம் பண்ணுகிறதென்ன? இந்தச்சம்சயங்களை உம்முடையகிருபையினால் தீர்த்துரட்சிக்கவேணுமெனின்,

விடை- இப்படிசொன்னசீஷனைப்பார்த்துக்குருவானவர் சொல்லும்படி, மூடனாயிருக்கிறவன் ஆனந்தசொரூபமாயிருக்கிற தன்னையறியாதபடியே புறம்பே வெளியிலேசுகமிருக்கிறதென்று அந்தசுகத்தைத் தேடப்பிரயத்தனம்பண்ணுகிறான் அறிந்தவன் எத்தனம்பண்ணவில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- கிரகாதிகளிற் புதைத்திருக்கிறதனத்தை அறியாதிருக்கிறவன் புறத்திலே பிச்சைகேட்கிறான் அந்தப்புதையலை அறிந்தவனெப்படி பிச்சையெடுப்பான் ஆகையாலஞ்ஞானியாயிருக்கிறவன் துக்கரூபமான தூலசூக்குமசரீரங்களைச் சுபாவமாகத்தானென்றுநினைத்துச் சுகசொரூபமானதன்னை மறந்து துக்கத்துக்கங்களைக் கொடுக்கிறதாயிருக்கின்ற விடயங்களைச் சுகமென்று இச்சிக்கின்றான் ஞானியாயிருக்கின்றவன் ஒருக்காலும் விடயங்களையிச்சியான்.

வினா- அதேதெனின்,

விடை- துக்கத்தைக்கொடுக்கிறதாயிருக்கின்றவஸ்து வொருக்காலுஞ்சுகத்தைக்கொடுக்கமாட்டாது துக்கமேகொடுக்கும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- துக்கத்தைக்கொடுக்கிற விடத்தைப்பானம் பண்ணினவனுக்கு அந்தவிடமானது மரணத்தைக்கொடுக்குமன்றிப் பிழைக்கப்பண்ணாது அதையறிந்தஞானியானவன் துக்கத்தைக்கொடுக்கின்றதாயிருக்கிறவிடயங்களை இச்சியான் பாமரனாயிருக்கிறபேர் ஆன்மாவன்னியர் சுகமன்னியமென்று நிச்சயித்து

து வெளியிலிருக்கிற விடயசுகத்தின் பொருட்டு நிசமாயெத்தனம் பண்ணுகிறார்கள் சந்தேகமில்லை—உலகத்தில் தனக்கிஷ்டமானவஸ்துவைக்கிரகிக்கிறதிற் சகலசனங்களுக்குந் தோற்றுகிற வானந்தமெதுவோ அவ்வானந்தம் வஸ்துவினுடைய தொழிலையல்லாதுமனதிற் காணும் வஸ்துதர்மமானால் மனதிலெப்படித் தோற்றும்—மனதுக்கு அன்னியமான வஸ்துவினுடையதர்மம் மனதில்தோற்றுமென்பதெங்குங்காணும்.

வினா- ஆனால்அந்தவஸ்துதர்மந்தானானந்தமோவெனின்,

விடை- அதுஞ்சடரூபமானதால்அதற்கும்ஆனந்தமென்பதுகூடாது.

வினா- ஆனால்மனதினுடையதர்மந்தானானந்தமோவெனின்,

விடை- மனதுஞ் சடரூபமானதால்மனதுக்கும்ஆனந்த மென்பது கூடாது ஆதலாற்சுகஞ்சடதர்மமென்கிறதுவோரிடத்திலுங்காணவில்லை அனுபவிக்கப்படவுமில்லை.

வினா- ஆனால்ஆன்மாவினுடையதர்மம்ஆனந்தமோவெனின்,

விடை- ஆன்மாகுணமில்லாமல் நிற்குணமானபடியினால் ஆன்மாவேறென்பதும் ஆனந்தம் வேறென்பதுங் கூடாது ஆகையால் ஆனந்தமேயான்மாவென்றறி—பூர்வபுண்ணியபலத்தினாலிட்டவஸ்துக்களைப்பார்க்குமிடத்தில் சுத்தசாத்துவிதம் பொருந்தின சித்தத்தில் சொச்சதிரவியமான சலத்திற் பிரதிபிம்பிக்கிற சந்திரனைப்போல ஆனந்த லட்சணமான ஆன்மாப்பிரதி விம்பிக்கின்றது—மேலும், அந்தச்சித்தத்திற் பிரதிவிம்பிக்கிற ஆபாசானந்தமானது மிகுந்தபுண்ணிய பலத்தினாலுங் குறைந்தபுண்ணிய பலத்தினாலும்மிகுந்துங்குறைந்துங்காணப்படும்—சுருதியில் சார்வபௌமானந்த முதல் பிரமானந்தமவரையில்யாதோரானந்தங்கள்தாரதம்மியமாயிருக்குமோ அவ்வானந்தங்களதிசயமாகவுமுடிவில் அழிந்துபோவதாகவு மிருக்கின்றதாகையால் அவ்வானந்தங்கள் புண்ணிய சாதனமாய் வருகிற விடயானந்தங்கள்அதுகள் புண்ணியம்பண்ணுகிறபேர்களால்பொசிக்கப் படுகிறது இப்படிப் பொசிக்கப் படுகிற விடயானந்தமானது பொசிக்கிற போதும் பொசியாம லிருக்கிறபோதுந் துக்கத்தையேகொடுக்குமென்று சொல்லப்படுகின்றது.

வினா- அதெப்படியெனின்.

விடை- விடங்கலந்த அன்னத்தைப் புசிக்கிறகாலத்திலும் புசித்தபிறகுந் துக்கத்தையேகொடுக்குமன்றிச் சுகத்தைக்கொடுக்கமாட்டாது அதுபோலவுலகத்தில் பிரமாதிலோகங்களையடைந்த புருஷாளுக்கும் போகாந்தரத்திலே அழிந்துபோகின்ற துக்கமிருக்கும் — இதுவன்றியும் ராஜசன்னிதானத்திற்போகின்ற மந்திரிதளவாய்பிரதானிகளுக்கு மொருவர்க்கொருவர்தாரதன்மிய பேதமெப்படியோ அப்படியே பிரமாதிபேதங்களையடைகிற செந்துக்களுக்குந் தாரதன்மியமானதுக்கமிருக்கும் — ஆதலால் விவேகியானபேர்கள் பிரதிபிம்பமாயிருக்கிற விடயானந்தங்களை ஆசிரயிக்காமல் பிம்பபூதமாயிருக்கிற ஆனந்த லட்சணமான ஆன்மாவை ஆசிரயிக்கவேணும் இந்தப்பிம்பபூதமான ஆனந்தம் சாவயவதம் தொந்தமில்லாத அத்துவைதம், நித்தியம், ஏகம், நிர்ப்பயம் என்றுசொல்லப்படும், இதில்பிரதிபிம்பமாயிருக்கின்ற ஆபாசானந்தமும் அந்தப்பிம்பானந்தம்போலவேகாணப்படுகின்றது.

வினா- அதேதெனின்,

விடை- பிரதிபிம்பானந்தமானது பிம்பானந்தமல்லாமையாலும் பிம்பானந்தத்தைத்தவிரப் பிரதிபிம்பானந்தஞ் சித்தியாதாகையாலும் பிம்பானந்தம்போல்பிரதிபிம்பானந்தமுங் காணப்படுகின்றது அந்தநிர்விகாரமான பிம்பானந்தத்தையும் விகாரமான பிரதிபிம்பானந்தத்தில் ஆனந்தமென்று காணப்படுகின்றது — ஆகையால் பெரியவர்களாயிருக்கிற பேர்களாலும் புத்தியினால் சாக்கிரசொப்பனங்களில்ஒருக்காலும் ஆன்மானந்தத்தையனுபவிக்கப்படவில்லை.

வினா- அதேதினாலெனின்,

விடை- அவித்தியாகாரியமான தேகேந்திரிய காரணக்கூட்டத்தினால் ஆனந்தசொரூபமான ஆன்மா சாக்கிரசொப்பனங்களிற் காணப்படவில்லை - இந்தத்துக்கரூபமானசாக்கிர சொப்பனங்களாகிய நாலுகுட்சமங்கள் சுழுத்தியிலில்லையாகையால் பிரத்தியகானந்த லட்சணமான ஆன்மானந்தஞ் சுழுத்தியிற் காணப்படுகின்றது — அந்தச் சுழுத்தியிற் புத்திமுதலாகிய கருவிகரணாதிகளொன்றுமில்லாததால் ஆன்மா கேவலானந்தமாத்திரமாய்த் தன்னைவிட அன்னியமில்லாத அத்துவைதமாயிரு

க்கின்றதை நித்திரைதவிர்ந்தெழுந்த சகலசனங்களாலும் ஆன்மாசுகமென்றுகாண்கிறார்கள் ஆகையால் ஆன்மாஆனந்த சொரூபமென்பதிற் சந்தேகந்தேவையில்லை—அப்பா! நித்திரை தவிர்ந்தெழுந்திருந்த உன்னாலும் சுகமாய் நித்திரைபோனே னென்கிற நினைவிருக்கையால் ஆன்மா சுகசொரூபியென்றும் உபநிடதார்த்த வாசனையை ஆகிராணியாதபடிக் கிருக்கிற ஸ்ரீ ச்சைவாதிகளினால் துக்கமில்லை ததே சுகமென்று சொன்ன உப சாரமானவார்த்தையைச் சுத்தப்பொய்யென்றும் அறியவாக.

வினா- அதேதெனின்.

விடை- துக்கமில்லாமை, ஓடுமுதலானதுகளிற் காணப்பட்டிருக்கின்றது அவற்றிலானந்தங்காணப்படவில்லை ஆகையால் அந்தயுக்திகூடாது, ஆன்மாகேவலானந்தமென்பதில் நீசந்தேகப்படத்தேவையில்லை, பிரமாதியாகிய சகலசெந்துக்களுந் தங்கள் தங்களுபாதியனுகுணமாய் ஆனந்தலட்சணமானவேகத்தை அனுசரித்துக்கொண்டு ஆனந்திகளாயிருக்கிறார்கள் — இந்தஆனந்தப்பிம்பானந்தமூலமென்பதிற்சந்தேகந்தேவையில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- ஒருவன் பட்சணங்களிற் சுகத்தைக்கொடுக்கிற மதுர மானரசத்தை ருசிபார்க்கிறான் அந்த ரசமானது வெல்லத்தினுடைய மதுரமல்லாமல் பட்சணங்களுடைய மதுரமல்ல அப்படியே விடயசந்நிதானத்திலே யாதோரானந்தந் தோன்றுகின்றதோ அது பிம்பானந்தப்பிரகாசமன்றிச் சடமானவிடயானந்தமல்ல வென்றறி — யாதொருத்தனுக்கு எந்தெந்த விடயங்களோடே கூடுகிறபோது எந்தெந்த ஆனந்தங்காண்கிறதோ அந்தவானந்தம் பரப்பிரமானந்தமே பிரகாசிக்கிறதென்றறி.

வினா- அதெப்படியெனின்,

விடை- சந்திரப்பிரகாசத்தினால் ஆம்பல்புஷ்பமெப்படி மலர்கின்றதோ அப்படியே ஆன்மானந்தத்தினால் விடயானந்தம் பிரகாசிக்கின்றதென்றறி — இப்போது சொல்லிவந்தசத்துச் சித்தானந்தரூபத்துவம் ஆன்மாவுக்குச்சுபாவமேயன்றி அந்நியமில்லை.

வினா- அதேதெனின்,

விடை- ஆன்மாநிர்க்குணமானதால் நிர்க்குணத்திற்குக் குணமெது

ருக்காதுங்கூடாது-இதுவன்றியும் ஆன்மாவைத்தவிர அன்னியவஸ்துவே நிசமாயிருந்தால் அதனுல் ஆன்மாதன்ரூபமழியும் அப்படியில்லாமலன்னியவஸ்துவாகியபிரபஞ்சம் பொய்யாய்ப்போகின்றபடியினால் ஆன்மா ஒருக்காலுந்தன்ரூபமழிகிறவரல்ல, சுருதியில்கேவலனொன்றும் நிர்க்குணனென்றுஞ் சொல்லியிருப்பதால் ஆன்மாவுக்கு ஒருகுணமுங்கூடாது—ஆகையால் அக்கினிக்குச்சுபாவம் உஷ்ணப்பிரகாசங்களெப்படியோ அப்படியே யான்மாவுக்குச் சத்துச்சித்தானந்த மென்றுஞ் சுபாவமென்றறி—இப்படிச்சுத்த அத்துவைதமாகிய பரமான்மாவினிடத்தில்சசாதிகவிசாதிகபேதமுமில்லை-

வினா- அதேதெனின்,

விடை- விசாதிகமாய்க்காணுகிற பிரபஞ்சந்தள்ளப்படுகிற படியினால் ஆன்மாவினிடத்தில் விசாதிகாதிபேதங் காணப்படவில்லை, அஃதெப்படியென்றால் ரச்சுவைத்துக்கு விபரீதமான சற்பமுமெப்படித்தள்ளப்படுகின்றதோ அப்படியே சத்தினிடத்தில் தோற்றிய செகத்தைத்தள்ளிச் சன்மாத்திரமாய்க்காணப்படுகிற தெதுவுண்டோ அதையபாதமென்று அத்துவைதத்தை யறிந்தபெரியவர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது—இப்படி சூட்சும புத்திகளாயிருக்கிற பேர்களால் பிரபஞ்சத்தினுடைய வுற்பத்திச் சத்தாயிருக்கிற பிரமத்தினிடத்தில் விளங்குகின்றதென்று அறிந்திருக்கையால் பிரபஞ்சஞ்சன்மாத்திரமென்றுயுத்தியினுலறி—மேலும் நால்வகையோனியிற்பிறந்த நாலசரீரங்களும் அதுகளின்பொசிப்புக்குயோக்கியமான அன்னபானாதிகளும் அதற்கிருப்பிடமான இந்தச்சகல பிரமாண்டங்களும் பஞ்சீகிருதமான தூலபஞ்சபூதமென்றேயறி—இந்தப்பிரபஞ்சமானது, பிரமத்தினுடைய காரியமாய்க்காணப்பட்டபடியினால் இதைவிசாரிக்கிறபோது மண்ணின் காரியமானகடாசராவாதிகள்மண்ணைத்தவிரவேருகாததுபோல் பிரமமாத்திரமாய்க்காணப்படுகின்றது.

வினா- அதேதெனின்,

விடை- அந்தக்கடாசராவாதிகளையுள்ளும் புறம்புநன்றாய்விசாரித்துப்பார்க்கிறபோது மிருத்திகையைத்தவிரக் கடாதிகளில்லை ஆகையாலிந்தக்கடம் கழுத்தோடேகூடிவாய்க்குவிந்திருக்கிறதென்று சொல்லக்காரியமில்லை இதுவுஞ்சொன்மாத்திரமேயல்லாது மிருத்திகையைத்தவிரவேறில்லை—இந்தக் கடாசராவாதிக

லாக்கடமென்றும் சரீரமென்றும் நாமரூபபேதமாக மூடரளாலே யொருமண்ணைத்தானே யப்படிசொல்லப் பட்டிருக்கின்றதோ அதுகள் நாமரூபபேதமேதவிர விசாரிக்கிறபோது வஸ்துபேதமில்லை அதுபோல் பிரமகாரியமாயிருக்கப்பட்டதான லைகுடபாணிகளாகிய சகலபூதஉபாதிகளென்கிற பிரபஞ்சமும் பிரமத்தைத்தவிர வேறில்லை, காரணத்தைவிட காரியமொருகாலும் பேதமில்லாததுபோல் தோற்றப்பட்ட இந்தச் சகலத்துக்கும் பிரமத்துக்கும் பேதமில்லையென்றறி.

வி௩- அதெப்படியெனின்,

விடை- தன்றன் குணமான சத்ததாதுக்களோடேகூடின பஞ்சீகிருத பூதங்களானசரீரங்களும் பஞ்சீகிருதபூதகாரியமான சூக்ஷமசரீரங்களும் சத்துவாதிகுணங்களோடேகூடி இதுகளுக்குக்காரணமான அவ்வியத்தமாத்திரமாய் ஆன்மாபாசத்துடன் கூடிவிளங்குகின்றது — இப்படி விளங்கப்பட்டசரீரத்திரயங்களுக்கு ஆதார பூதமாய்கண்ட மாயநிதியாய்ச் சுத்த மாயேகமாய்ச்சத்தாயிருக்கிற பரப்பிரமவஸ்துவைத் தவிரச் சரீரத்திரயவிகற்பங்களில்லை — அப்பா! ஒருபுருஷனுக்கு நேத்திரதோஷத்தினால் ஒருசந்திரனிரண்டா யெப்படி காணப்படுகின்றதோ அப்படியே யொன்றாயிருக்கிற பிரமமும் புத்திதோஷத்தினால் பின்னபின்னமாய்க் காணப்படுகின்றது அந்த நேத்திரதோஷமில்லாதவர்களுக்குச் சந்திரனொன்றேயப்படிக்காணகின்றதோ அப்படிபுத்திமுதலான தோஷமற்றிருந்தவர்களுக்குப்பிரமமொன்றாய்க்காணப்படும் — பழுதையினிடத்தில் பாம்பென்றுபிரமித்தவன் தீபங்கொண்டுவந்து பழுதையைப் பார்த்ததின்பின்பு பாம்பென்கிற புத்திபழுதையினிடத்திலேப்படிலயமாகுதோ அப்படியேபிரமத்தினிடத்தில் பிரமையினால் பிரபஞ்சத்தைக்கண்டவன் குருவேதாந்த ரகசியங்களினால் பிரமாணுபவத்தைக்கண்டுபிரமைதீர்ந்தவனுக்குப் பிரபஞ்சம் பிரமத்தினிடத்தில் அயிக்கியம் — இப்படிபிராந்தியினால் பிறந்ததோஷபுத்தியானதொழிந்து போகிறபோது சத்தாய் அத்துவிதமாய்ப்பரப்பிரமவஸ்துவேகமாயிருப்பதால் நிர்விகற்பமான பிரமத்தினிடத்தில் விசாதிகபேதமில்லை யென்றறி — உபாதியான மாயாவித்தைகளுள்ளபோது அபின்னமாயிருக்கின்றஆன்மாவானவர் சசாதிகபேதம்போல் தோற்றுகிறார் அந்த உபாதிகளைச் சொப்பனம் போற்பொய்யென்று தள்ளுகிற

போது அந்த உபாதி தோற்றரவில்லாதபடியினாலே இந்த ஆன்மா
வுஞ்சாதிகபேதமில்லாமல் பிரமப்பிரதிபாதகமாகவிருக்கும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- கடாகாசமானது கடமுடைந்தபோது மகாகாசத்து
டன் கடாகாசமென்கிறது போயொன்றானதுபோல் தூல
சூட்சும உபாதிகளெல்லாமொழிந்தபோது ஆன்மா பிரம
மாகவேயிருப்பானென்றறி—கடமிருந்தபோதுங் கடமில்லாத
போதும் மகாகாசமெப்படியொன்றாயிருக்குமோ அப்படியே
உபாதியிருந்தபோது மில்லாதபோதும் பரிபூரணமாயிருக்கி
ற ஆன்மா வொன்றேதவிரப் பின்னமென்று ஒருவராலுஞ் சொ
ல்லக்கூடாது.

வினா- அதேதெனின்,

விடை- மண்ணைத்தவிர வேறில்லாதிருக்கிற கடாதிகளெல்லாம் மண்ணா
யிருக்கிறபேர்களுக்குப்பேதமாகக்காண்பதுபோலவும் ஒருவ
மிடமிராபமென்றும் க்ஷேத்திரமென்றும் எப்படிப் பின்னமாய்த்
தோற்றுகின்ற தோவப்படிபோலவு மகத்துக்குமகத்தாயிரு
க்கின்ற பரப்பிரமவஸ்து பிரமையினாலே கற்பிக்கப்பட்டவஸ்து
க்களோடே கூடிப்பரிச்சின்னமாகவே தோற்றுகின்றது, அந்தப்
பிரமையைத் தவிர்த்தாலொழிய வொருக்காலும் ஆன்மாவுக்குப்
பேதமென்கிறதில்லை ஆதலாலான்மா பரிபூரணர் பின்னமென்
பவர்க்கொருக்காலுங்கூடாது —பிரமத்திற்குமான்மாவுக்கு மடிக்க
டி பேதங்கற்பிதமேதவிர வாஸ்தவமல்ல, சுருதியிலும் பிரமத்
துக்குமான்மாவுக்குமயிக்கியந்திரளாய்ச் சொல்லியிருக்கிறது.

வினா- அதேதெனின்.

விடை- சாமவேதோபநிஷத்தில் உத்தாலகர் சுவேதகேதுவுக்கு
அத்வைதத்துவம் பொருந்தவேண்டித் தத்துவமசியென்
கிறவாக்கியமுபதேசித்திருக்கின்றார் அதையுனக்குச் சொல்
லுகிறேன் சாவதானமாய்க்கேள், அந்த உபதேசவாக்கியம் வாச்சி
யார்த்தமென்றும் லெட்சியார்த்தமென்றும் இரண்டுவிதமாயிருக்
கும் அதில் வாச்சியார்த்தமானது பிரத்தியட்சவிரோதமாகையா
ல் வாச்சியார்த்தங்களுக்கையிக்கியங்கூடாது, அவ்விரோதங்களெல்
லாமொழிந்த தத்துவபதார்த்தங்களுடைய லெட்சியார்த்தங்களு
க்கே ஐயிக்கியங்கூடும்.

வினா- என்றிப்படிசொன்ன குருவைப்பார்த்து சிஷ்யன் கேட்கு
மபடி, சுவாமீ! தத்துவபதங்களுடைய அர்த்தமெத்தனை விதம்

வாச்சியார்த்தமாவதென்ன? லட்சியார்த்தமாவதென்ன? வாச்சியார்த்தத்துக்கு ஐயிக்கியங்கூடுகிறபோது அந்தவிரோதமெப்படியில்லாமற்போகும்? தத்துவமசியென்கிற வாக்கியத்திற்குலட்சியார்த்தமான ஜீவப்பிரமாயிக்கங்கூடுகிறதில் எந்தலட்சணை சொல்லப்பட்டிருக்கின்றது? இது களைக்கருணையினால் அடியேனுக்குநன்றாய்த்தெரியச்சொல்லவேணுமெனின்,

விடை— வாராய் வித்துவானாயிருக்கிற சிஷ்யனே இன்றைக்குன்னுடையதபசானது நிறைவேறியது இந்தவாக்கியார்த்தசிரவணத்தினால்மகா நல்லஞானமுண்டாம் இந்தத்தத்துவபதங்களுடைய அர்த்தத்தைத்தெரிந்து விசாரியாதபடியெவ்வளவுகாலமிருக்கிறார்களோ அவ்வளவுகாலமும் அந்த மனுஷர்களுக்குச்செனன மரணரூபமான சம்சாரசாகரமுண்டு—ஆதலால் சற்புருஷர்களுக்குச்சச்சிதானந்த அகண்டாகாசரூபாவஸ்தையானை இந்தவாக்கியார்த்தசிரவணத்தினாலுண்டான அபரோட்சஞானத்தினால்மோட்சசாதனஞ்சித்திக்கும்,முமுட்சுவாயிருக்கிறபுருஷனானவன்செனனபந்த மொழிவதின்பொருட்டு இந்தவாக்கியத்தை நன்றாயறியவேணும் ஆகையால் நீயுஞ்சாவதான மாய்க்கேள் உனக்குத்தெரியும்படி நன்றாய்ச்சொல்லுகிறோம்.

வினா— அதேதெனின்,

விடை— மகாவாக்கியங்களுக்கு வாச்சியார்த்த லட்சியார்த்தபேதமாகஅர்த்தங்கள்பகுவிதங்களாய் பெரியவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது அதைஉனக்குச்சொல்லுகிறோகிரமேகேளீ.—தத்துவமசியென்கிறவாக்கியத்தில்தத்தொம் அசியென்னுமூன்றுபதமாயிருக்கும்அதில்முந்தினபதமானதத்பதார்த்தத்துடைய அர்த்தமிங்கேசொல்லுகிறோம்.

வினா— அதேதெனின்,

விடை— சாஸ்திரார்த்தங்களை யுணர்ந்தபெரியவர்களால் தற்பதவாச்சியார்த்தமென்றுதற்பதலட்சியார்த்தமென்றுஞ்சொல்லப்படும் அதில்பெரியோர்களாற் சொல்லப்பட்ட வாச்சியார்த்தத்தைமுந்திச்சொல்லுகிறோம்.

வினா— அதெப்படியெனின்,

விடை— சத்துவகுணமிகுத்தச்சித்பிரதிபிம்பத்தோடே கூடிச்சமஷ்டிரூபவஞ்ஞானமாகிறஆகாசாதிவிராட்புருஷனைத்தமானகாரியத்துடன் கூடினபிரதிபிம்பாவிச் சின்ன சைத

ஷ்களியமானது சச்சிதானந்த லட்சணத்தைப் பொருந்தியுஞ் ச
ர்வஞ்ஞத்துவமீசாத்துவம் அந்தரியாமித்துவமாகிய குணங்க
ளோடே கூடிக்கொண்டிருக்கிற தாயுந் திருஷ்டிஸ்திதி சங்கார
தர்மங்களுடன் கூடினதாயுஞ் சகலப்பிரபஞ்சத்தையு முற்ப
விக்கிறதாயுங் குணங்களினால் எண்ணத்தொலையாததாயு மிருக்
கின்றது, அந்த அவ்வியக்தமான பிரமமே வாச்சியார்த்த மென்
ன்றுசொல்லப்படும் இனிசுருதிசம்பந்தமாய்ச் சொல்லப்பட்டி
ருக்கிற தற்பதலட்சியார்த்தத்தைச் சொல்லுகிறோம்.

வினா- எப்படியெனின்,

விடை- சத்தபரிசரூபரசகந்தங்களில்லாததாயும் வாக்கினால்வா
சனிக்கப்படாததாயும் மனதினால் எண்ணப்படாததாயும் பா
ணியினால் கிரகிக்கப்படாததாயு மொன்றினாலுந் தள்ளப்ப
டாததாயும் ஒருதொழிலினுமெட்டாததாயும் ஆனந்தமேமய
லட்சணமாய்ப்பொருந்தினதாயும் அனந்தமாயு நித்தியாதீ
தமாயுஞ் சத்துவாதிகுணங்களில்லாததாயும் விலட்சணமாயும் பி
ராந்தியினால் ஆரோபிக்கப்பட்டவஸ்துக்களுக்கு அதிட்டானமா
யுஞ்சத்தாயும் அத்துவிதமாயுஞ் சுத்தபுத்தமுக்தலானந்த லட்ச
ணமாயுமிருக்கின்ற நிர்விசேஷப்பிரமமே தற்பதலட்சியார்த்
தமென்றுசொல்லப்படும்- இனிதொம் பதத்துக்கும் வாச்சியார்
த்தலட்சியார்த்தமென்று இரண்டுவிதமாய்ச் சொல்லப்பட்டதி
ல் தொம்பதவாச்சியார்த்தத்தை முந்திச்சொல்லுகிறோம்.

வினா- அதேதெனின்,

விடை- மலினசத்துவம் பொருந்திச் சித்பிரதிபிம்பத்துட
னே கூடிப்புத்திமுதல் தூலசரீராந்தமாய்க் காரியகாரணலட்
சணமாகிய வியஷ்டி ரூபமான அவித்தையிற்பிரதிவிம்பித்து
ச்சீவனென்கிற பேரைப்பொருந்தியும்- சட்பாவவிகாரங்களுட
ன் கூடி நான்பாலன் நான்குமாரன் நான் யௌவனன் நான் பெரு
த்தேன் நான் இறுத்தேனென்கிற தூலசரீர தன்மங்களுடனே கூ
டியும் பசிதாகசோகமோகஜராமரணசடூர்மிகளைப் பொருந்தியு
ம் நானூமைசெவிடன் குருடன் முடக்கிறையன் நான் போகிறே
ன் வருகிறேனென்கிற இந்திரியகர்மங்களுடனே கூடியுங் காமஞ்
சங்கற்பம்பொறாமை சந்தோஷம் பயம்கவலை மறதி இதுமுத
லானமனோதர்மங்களுடன் கூடியும்- நான் கர்த்தா நான் போக்
தா நான் சுகி நான் துக்கியென்கிற ஆங்காரதர்மங்களுடன் கூடி
யுந் திரிகரணத்தினாற் பண்ணப்பட்ட புண்ணிய பாவபலபோக

த்தின்பொருட்டுச் சொர்க்காதிகளையடைந்து அவிலுண்டா-
வ: சுகதுக்கங்களைத் தன்னுடைய கர்மத்துக்கீடாய்ப் புசித்-
துக்கொண்டு பிரமையேயாமேட கூடின புருஷனுக்கை மேன தொம்-
பதவாச்சியார்த்தமென்று சொல்லப்படும் — இனி, தொம்பதல-
ட்சியார்த்தத்தைச்சொல்லக்கேட்பாயாக.

வினா- அதெப்படியெனின்,

விடை- அவித்தியாலட்சணமான தேகேந்திரியகரணமேனுபு-
த்திப்பிராணஅகங்காரரூபமான வடாதிகளிலொட்டாததாயு-
ம்மன்னேருகளில் ஜாகருடையதிலிருக்கிற சூர்யாணிக்கக்-
கல்லானது அதுகளைப்பெட்டிலக்குவிக்கின்றதோ அப்-
படியே இந்தப் பிரமேனைத்திரியாதி தேகத்துக்குள்ளே சோதி-
யாயிருந்து துலக்குவித்துக்கொண்டு அந்தத்தேகாவத்தைகளுக்-
கெல்லாஞ்சாட்சியாய்ப் பிரத்தியகான்மாவாயுந்தேகேந்திரியவியா-
பாரங்களைப்பார்த்துக்கொண்டிருக்கிறதாய் அறிகிறதாயுமேக-
மாயுஞ்சத்தியமாயும் நிர்விகாரமாயும் பூரணமாயுஞ் சூட்சு-
மாயுஞ்சர்வப்பிரகாசமாயுந்தடஸ்தமாயுங் கூடஸ்தமாயுமிருக்கி-
ற ஆன்மாவே தொம்பதத்துக்கு லட்சியார்த்தமென்றுசொல்-
லப்படும் அப்பா! தத்துவபதங்களுடைய அர்த்தம் இப்படி
சொல்லப்பட்டது இனிவாக்கியார்த்தத்தினுடைய நிர்ணயத்-
தைச்சொல்லுகிறோம்.

வாக்கியநிர்ணயம்.

வினா- அதேதெனின்,

விடை- தத்துவமசியென்கிறவாக்கியமானது சம்பந்தத்திரயங்-
களுடன் கூடியிருந்தால்தத்துவபதார்த்தங்களிரண்டுக்கும்
அசிபதத்தினால் ஐக்கியங்கூட்டப்படும்.

வினா- அந்தச்சம்பந்தத்திரயங்களேதெனின்,

விடை- சாமானாதிகரண்ய சம்பந்தமென்றும் விசேஷண வி-
சேஷியதா சம்பந்தமென்றும் லட்சியலட்சணபாவசம்பந்த-
மென்று மூன்றுவிதப், அதில்தற்பதந் தொம்பதங்களிரண்டி-
ற்குஞ்சாமானாதிகரண்ய சம்பந்தமென்றுந் தற்பத தொம்பதா-
ர்த்தாளாயிருக்கிற ஜீவேசுரர்களுக்கு விசேஷண விசேஷியதா
சம்பந்தமென்றும் அதிஷ்டானமான பிரத்தியகான்மா பரமான்-
மாக்களுக்குலட்சியலட்சணபாவசம்பந்தமென்றும் அறிந்துகொ-
ளாற்சொல்லப்படும்.

வினா- இதில் சாமானாதிகரண்ய சம்பந்தமாவதேதெனின்,

விடை- பரோட்சத்துவமுதலான தர்மங்களுடன் கூடி[illegible] ன்னியமெதுவோ, பிரத்தியட்சத்துவாதி தர்மங்களின் [illegible] த்தினை சைதன்யமெதுவோ அவ்விரண்டிற்குந் தத்துவம்பதங்க ளிருவல் அயிக்கங்கூட்டுகிறதே சாமானாதிகரண்ய சம்பந்த மென்று சொல்லுகிறார்கள் — தற்பதார்த்தமான அபரோட்சத்துவாதிதர்மங்களுடன்கூடின சித்துக்கும் த்வம்பதார்த்தமான அபரோட்சத்வாதி தர்மங்களுடன் கூடின சித்துக்கும் ஒன்றுக்கொன்று பேதமாயிருக்கிற வாக்கியார்த்தத்தைத் தள்ளிவிடுத்திடமாகவிசேஷணவிசேஷியதாசம்பந்தங் காணப்பட்டிருக்கிறது — தத்துவம்பதார்த்தங்களிரண்டுக்குமயிக்கங் கூட்டுகிறதில்விருத்தாங்கிசமெது காணப்பட்டிருக்குமோ அந்த விரோதத்தைத்தள்ளி அவிருத்தமாயிருக்கின்ற சித்தோடே யைக்கியங்கூட்டுகிறதேலட்சியலட்சணபாவசம்பந்தமென்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது.

வினா- இதில்விருத்தாங்கிசங்களைத்தள்ளுகிறதற்கு விசேஷண விசேஷியதா சம்பந்தங்காணப்பட்டிருப்பதேதெனின்,

விடை- நீலோற்பலமென்கிறபோது வாக்கியார்த்தசங்கதியெப்படிக் காணப்பட்டிருக்கின்றதோ அப்படியே தத்துவமசியென்கிறபோது வாக்கியார்த்தசங்கதிகூடாது.

வினா- அதேதெனின்,

விடை- நீலத்துவம்பட்த்தைவிட்டு நீங்கிவிசேட்டமாயுற்பலத்திற் கூடினதுபோலத் தத்துவபதங்களிரண்டும் அன்னியோன்னிய பேதத்தைத்தள்ளி விசேஷண விசேஷியத்துவமொரு பிரகாரமாய்க்கூடுகிறது — ஆகலால் அந்த விசேஷண விசேஷியத்துவம் நீலோற்பலமென்கிறவாக்கியத்தில் பொருந்தினதுபோலத் தத்துவமசியென்கிறவாக்கியத்திற் பொருந்தாது,

வினா- அதெப்படியெனின்,

விடை- வாக்கியார்த்தமாயிருக்கிற தத்துவபதங்களில் பிரத்தியட்ச பரோட்சத்துவாதி விரோதங்காணப்பட்டிருக்கின்றது ஆகலால்கூடாது.

வினா- அந்தவிரோததர்மமேதெனின்,

விடை- தத்பதார்த்தமாயிருக்கிற ஈசானிடத்தில் சர்வஞ்ஞத்துவம் சர்வேசுரத்துவஞ் சர்வஉத்தமோத்துவம் சத்தியகாமத்துவம் சத்தியசங்கல்பத்துவம் பரோக்ஷத்துவ முதலானதுகள் காணப்பட்டிருக்கின்றது தொம்பதார்த்தத்தில் ஜீவத்துவங்கிஞ்சிக்ஞத்துவந் துக்கிவனாத்துவம் அவித்தியாவசத்துவமிந்தவிரோதங்கள் காணப்பட்டிருக்கின்றது- ஆகையால் அந்தவிருத்ததர்மங்களோடு பொருந்தின தத்துவபதார்த்தங்களாகிற ஜீவேசுரருக்கு ஏகத்துவமெப்படிக்கூடும்— ஜீவேசுராளிரண்டு பேரும் அப்படியொருவர்க்கொருவர் விருத்ததர்மங்களுடன் கூடியொருத்தருக்கொருத்தர் விலக்ஷணமாய்ப்பனியும் நெருப்பும் போலிருப்பதாலிவர்களுக்கு முக்கியமாயயிக்கியங்கூட்டுகிறபோது சுருதிஸ்மிருதிவிரோதமுமிருக்கும்— சுருதியானது இந்தத்தத்துவ பதார்த்தங்களுக்கு அதியென்று அயிக்கியத்தைத் தாற்பரியமாய்ச் சொல்லியிருப்பதால் அந்தச்சுருதி வசனத்தை அங்கீகாரம்பண்ணவேணும்— இப்படிவாக்கியார்த்தங்களை அங்கீகரிப்போமென்றால் ஒன்றுக்கொன்று விருத்த மிருப்பதால் அங்கீகரிக்கக்கூடாது ஆகையாலக்ஷணையை அங்கீகரிக்க வேண்டியிருக்கின்றது.

விஞா- அதெங்ஙனெனின்,

விடை- விட்டலக்ஷணையென்றும் விடாதலக்ஷணையென்றும் விட்டுவிடாதலக்ஷணையென்றும் திரிவிதமாயிருக்கும்.

விஞா- ஆனால் விட்டலக்ஷணையாகிய கெங்காயாங்கோஷப்பிரதிவசதியென்கிறதினால் தத்துவபதார்த்தத்துக்கு அயிக்கங்கூட்டலாமோவெனின்,

விடை- முக்கியமாயிருக்கிறகங்காசலத்தைத் தள்ளிக்கரையைக் குறிக்கையாலும் தத்துவமசியென்கிறவாக்கியத்திற்கு அப்படியொன்றைவிட்டொன்றைக்குறிப்பதில்லாமல் அயிக்கியம் பண்ணுவதாலும் விட்டலக்ஷணையினால் அயிக்கங்கூட்டப்படாது.

விஞா- சோணத்திஷ்டோகவேதோதாவதியென்கிற விடாதலக்ஷணையைக்கொண்டு அயிக்கங்கூடுமோவெனின்,

விடை- சிவலையும்வெள்ளையும்போகின்றதென்று பொதுவசனமாய்ச்சொன்னதேதவிர இன்னதென்று குறித்துச்சொல்லாததால் விடாதலக்ஷணையினாலும் அயிக்கங்கூடாது.

விஞா- பின்னையெதினால்தான் அயிக்கங்கூடுமெனின்,

விடை— சோயந்தேவதத்தனென்கிறதில் விட்டுவிடாத லக்ஷணையி
னால் ஐக்கியமெப்படிக்கூடுமோ அப்படியே தத்துவமசி
யென்கிற வாக்கியத்துக்கும் ஐக்கியங்கூடும்.

வினா— அதெப்படியெனின்,

விடை— சோயந்தேவதத்தனென்கிறவாக்கியார்த்தந்தேவதத்தனி
டத்தில்முன்காணப்பட்ட தூரத்துவம் அன்னட்டகைமுதலான
துகளும் அப்போதிருந்த தேசகாலமுதலான துகளும்பி
ன்புசமீபமாகியாயிருக்கிற போதுண்டானசட்டுமுதலான
துகளும்இப்போதிருந்த தேசகாலமுதலான துகளும் ஒன்று
க்கொன்று விருத்தமானதால் இவ்விரண்டு விரோதத்தையுந்த
ள்ளியதந்தேவதத்தனுடைய சரீரமாத்திரமர்த்தமாகக்கொ
ண்டு அவனேயிவன் இவனேயவனென்று ஐக்கியப்படுவது
போல் தத்துவமசியென்கிறத்தில் தற்பதவாச்சியார்த்தமாகி
ய சர்வஞ்ஞத்துவ பரோக்ஷத்துவ முதலானவிருத்தாம்சத்தை
யுந்தொம்பதவாச்சியார்த்தமாகிய கிஞ்சிக்ஞத்துவமுதலான
விருத்தாம்சத்தையுந் தள்ளித்தற்பதலக்ஷியார்த்தமாகிய
சின்மாத்திரமானபரமான்மாவுக்குந் தொம்பதலக்ஷியார்த்
தமாகிய சின்மாத்திரமானபிரத்தியகான்மாவுக்கும் அபேத
த்தினால் அத்வைதியமென்று ஐக்கியங்கூடும் — இப்படி
லக்ஷணையினால்ஐக்கியானுபவமாய்க் கூட்டப்பட்டசொரூபஞ்சீ
வோபாதிகளை யொழித்ததாயுஞ்சச்சிதானந்தமாகியும் அத்து
வைதமாகியும் நிர்விசேடமாகியும் நிராபாசமாகியும்வாக்கினுள்
அப்படிக்கொத்ததிப்படிக்கொத்த தென்றுவமானமாய்ச்சொ
ல்லப்படாததாகியு மொன்றைக்கொண்டு காட்டப்படாததாகி
யும் ஆனந்தமாகியுஞ்சாந்தமாகியும்அச்சுதமாகியும் அதர்க்கிய
மாகியும் அபிரேயமாகியும்நிர்க்குணமாகியும் அகண்டைகரசப்
பிரமமாகியுமிருந்ததே அபேதாயிக்கானுபவமாம்அப்பா! தத்
துவபதலக்ஷியார்த்தாளான பிரத்திகான்மாப்பிரமங்களுக்கு ஏக
த்துவம் பொருந்துகிறதற்கு உபாதிவிசேஷங்களில் விரோதங்
காணப்பட்டிருக்கின்றது, இப்படிக்காணப்பட்டிருக்கின்ற உ
பாதிவிசேடங்களைத்தள்ளுகிறபோது தத்துவபதார்த்தாளாம் பி
ரத்திகான்மாப்பிரமாயிக்கத்துக்கு ஒருவிரோதமுமில்லை — இந்
தப்பிரத்திகான்மா பரமான்மாவாகிற இரண்டுபேரிடத்திலுமு
பாதியுமுபாதிகளுடையகூட்டுறவும்உபாதி செய்கிறதொழில்க
ளுந்தொழில்களின்விலக்ஷணமும்பிரமையினால்பண்ணப்பட்
டதாயிருக்கின்றசகலப் பிரபஞ்சமும் கற்பிதமானதால் பொய்

மாய்ச் சொப்பனத்திற் கண்டபொருள்போல் சாக்கிரத்திலு
ம் சத்தியமாய்க் காணப் படுகின்றது—நித்திரையினால் உண்
டான சொப்பன சரீரங்களான சகலாகாதிப் பிரபஞ்சங்க
ளுஞ் சிலகாலத்திலே தங்களுக்கு சத்தியமென்று நிச்சயமுண்டா
கைக்கும் இருக்காதுங்கூடாது.

வினா- அதெப்படியெனின்,

விடை- மாயையினால் கற்பிக்கப்பட்ட தேசகால ஜெகதீசாதி
ரூபங்களான பிரமைகளும் அந்தச்சொப்பனம்போலவே பொய்
யானதால் அதில் கற்பிதமான சீவேசுரர்களிரண்டு பேரினு
மெய்மெய்யெனவும் பொய்யென் ஆகையாலிருவரும்பொ
ய்யேயாம்—சொப்பன சாக்கிரங்களான இரண்டவத்தையிலு
ம் பிராந்தியினால் உண்டான விகற்பங்களினுஞ் செட்டுறதொ
டுயில் கனாத்தாரதன்மியமாய்க் காணவேண்டாம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- சொப்பனத்தில் ஒருவிடயத்தைத் தானறிந்து கண்ட
விடயமும் பொய்யாய்ப் போகுமோ அப்படி
யே சாக்கிரத்திலே கண்டதுங் காணப்பட்ட விடயமும்
பொய்யென்றறி—இந்தச்சாக்கிர சொப்பனங்களிரண்டும்
அவித்தியா காரியமானபடியினால் சொப்பனம் போலவே
சாக்கிரமுமாம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- காண்பானுங்காண்பனவுங்காட்சியுமாகிய திரிபுடி சா
க்கிர சொப்பனங்களிரண்டுக்குஞ் சரியானதாலிரண்டுக்குந்
தாரதம்மிய பேதமில்லை யென்றறி—சுழுத்தியில் சொப்
பன சாக்கிரங்களில்லாதது எல்லாராலும் அனுபவிக்கப் படுகி
ன்றது ஆகலாலிந்தச் சாக்கிர சொப்பனங்களிரண்டும் பொய்
யானதால் இவ்விரண்டுக்கும்பேதமில்லை—வாராய்சிவேதியனே
கேட்டனை பிரமத்தினிடத்திற் சுசாதிவிசாதிலட்சணைபேதம் பிராந்
தியினால் கற்பிக்கப்பட்டிருக்கின்றது அதுகாலத்திரயங்களிலு
ம்பாரமார்த்தமாகவில்லை யென்றறி—எகாவேதத்தில் பிரசாபதி
ண்யவுடநிடதத்தில் செளனகரைக்குறித் தருமரிஷிவர்க்கமகாரிஷி
யானவர்ச்சித்தானந்தத்தைத் துவிரவேற்ற பன்னியமொன்றின்

காணப்படவுமில்லை, கேட்கவுமில்லை ருசிகொள்ளவுமில்லை யெ
ன்றும் பிரமத்துக்கு அன்னியமானவஸ்து ஒன்றுமில்லை யெ
ன்றும் த்வைதத்தை நிஷேதிக்கிறார் ஆகலால் பிரமத்தில் கற்பி
தமான செகத்தாகிற பிரமைபோய் யென்றறி—பிரமத்துக்க
ன்னியமல்லாதகற்பிதமானதால் பிரமம் சதா அத்துவிதம் அ
கல்விகல்பசூனியம் நிருபாதிகம் நிருமலம் நிரந்தரானந்தகன
ம் நிரதிசயமாயிருக்கின்றசொரூபமொன்றென்றறி—ஆகலால்
இந்தப்பிரமத்தைத்தவிரவேறே யன்னியமாயொரு வஸ்துவுமி
ல்லை, குணத்தோற்றரவுமில்லாமல் வாக்குப்பிரவிர்த்தியு மில்லா
மல் மனப்பிரவிர்த்தியு மில்லாமலிருக்கிற கேவலமாய்ப் பிரம
சாந்தமாய் அனந்தமாய் ஆனந்தமாத்திரமாய் சதா அத்வைத
மாயிருக்கிற பிரமமாத்திரமாய்க் காண்கிற தென்றறி—வாராய்
சீடனே இப்போது உனக்குச்சொன்ன தத்துவமானது சத்திய
சச்சிதானந்தாத்மக சராசரமாற்ற நித்தியமான வஸ்து எ
துவோ அதுவே நீயாகும் தம்முடைய வசனத்தைச் சத்தியமாக
வெண்ணிக்கொள்—நீ அன்னமயகோசமான தூலதேகமுமல்ல
பிராணனுமல்ல, இந்திரியங்களுமல்ல, வாக்குமல்ல, மனமுமல
்ல, புத்தியுமல்ல, அகங்காரமுமல்ல, இந்தத்தேகேந்திரியாதி
கூட்டுறவுமல்ல, ஆகலால் அந்தத்தேகேந்திரியமனோபுத்தியகங்
காராதிகளெல்லாவற்றையுந் தனக்குவிஷயமாகக்கொண்டு அவைகளுக்
கெல்லாஞ்சாட்சியாயிருக்கிற யாதொரு சுயம்பிரகாசமானவ
ஸ்துவுண்டோ அதுவே நீயாகும் உலகத்தில் யாதொருவஸ்து
பிறக்கின்றதோ அந்தவஸ்துவே விர்த்தியடைகிறதுங்காலம் வ
ந்தபோது அழிந்துபோகிறதுமாயிருக்கும் உனக்குப்பிறப்பு
பிறப்புமில்லை இந்தப்பிறப்பிறப்புஇரண்டுமில்லாததால் நீநி
த்தியனென்றறி—இந்தத்தேகமானது யாதொன்று பிறந்த
தோ அதுவே விர்த்தியடைந்து கர்மக்ஷயத்தினால் நாசமடை
யும் நீயாகுமிந்தப்பிறப்பு வளர்ப்பு முதலாகிய அவத்தைகளி
லும் இருந்து இந்த அவத்தைகளெல்லாமறிந்துக்கொண்டிருக்
கிற அறிவாகியசாட்சியே நீயாகும்—சுயம்பிரகாசமாய் சகலாத்
துமகமாகியுஞ்சாக்கிராதிஅவத்தைகளிலும் அகம் அகமென்றறி
யாமலனுபவிக்கப்பட்டு விளங்கியும் புத்திமுதலான சமஸ்தவி
காரங்களிலும் அவிகாரமாயிருந்துக் கொண்டு அந்தவிகாரங்க

ளையறிந்திருக்கிற பிரமமெதுவோ அந்தக்கேவல ஞானமாத்திர சொரூபமே நீயாவாய் — உள்ளும்புறம்புங்கண்ட ஞானமெதுவோ அதுவேஜடபுத்திகளுக்கு ஆரோபித நாமரூபப் பிரபஞ்சம் போலக்காணகின்றது.

வினா— அதெப்படியெனின்,

விடை— மிருத்திகையேகடசாரவாதிகள் போலவும் விசாரிக்கி லந்தமிருத்திகை நிர்விகாரமாயிருக்கிற தெப்படியோ அப்படியே சகலவிகாரங்களு மற்றுத்தன்னிலே காணப்பட்டுக் கேவலபோதமாத்திரமான யாதொருபிரமமுண்டோ அதுவே நீயாவாய் — அழிவில்லாதபடி சுத்தஞான மாகிய ஆன்மசொரூபத்தினிடத்தில் கற்பிதமான ஆகாசாதிபஞ்ச பூதங்களுக் கெல்லாஞ் சிரத்தையைக் கொடுத்துக்கொண்டு தன்னுடைய பிரகாசமகிமையினாற்சகலத்தையுமறிந்துக்கொண்டு கேவல ஞானமாத்திரமானபிரமமெதுவோ அதுவே நீயாவாய் — நிருமல மான அந்தக்கரணத்தைப் பொருந்தித் திடசமாதியில் இருந்தபெரியோர்களாலுங் காணாதிருக்கிற ஆனந்தத்தைப் பிரத்தியக்ஷமாகக்கண்டு பரமாம் சக்கூட்டங்களினால் சந்தோஷிப்பட்டிருக்கிற கேவலஞானமாத்திரமான பிரம சொரூப மெதுவோ அதுவே நீயாவாய் — சுருதியில் அவ்வியமென்றும் அபார மென்றும் அனந்தமென்றும் அமித்தியமென்றும் அவ்வியத்தமென்றும் அட்சர மென்றும் அநாசிரய மென்றும் அப்பிரமேயமென்றும் ஆனந்தமென்றும் அசற்கனமென்றும் அஜமமென்றும் அத்வைத மென்றுஞ் சொல்லப்பட்ட கேவலபோதமாத்திரமான பிரமமெதுவோ அதுவே நீயாவாய் — ஏராயிடனே சொரூபமாகிய உன்னிடத்தில் சரீரத்தோடேகூட்டுறவும் அந்தச்சரீரத்தினுடைய தொழில்களும் பிராந்தியினலேயாரோபிக்கப்பட்டிருக்கின்றது, பரமார்த்தமாய் விசாரிக்கு மிடத்தில் இவ்வாரோபங்களெள்ளளவு முன்னிடத்திலில்லை ஆகலால் உன்னைப்பிரமனாகப் பார்த்துக்கொண்டு மிருத்தியுவினுடைய பயத்தைவிட்டுவிடு — பிராந்தியினலே யாரோபிக்கப்பட்டயாதொருதேகாதிப்பிரபஞ்சங்களையும் பிரபஞ்சமாகத்தானே பார்த்தபிராந்தியைத்தள்ளிவஸ்து திருஷ்டியாய்ப்பார்க்குமிடத்தில்அந்தவஸ்துவேநீயாவாய்உன்னைத்தவிரவேறே அ

ன்னியமானவஸ்து உலகத்திலே வேறொன்றுமில்லை ஆகலால் அந்நித்தியா பிந்நமாயிருக்கிறவுனக்குப் பயமென்ன — இந்தச் சகலப் பிரபஞ்சமும் பிரமசொரூபமாயிருக்கிற நாமே யென்று பார்க்கிறவனுக்குப்பயமெங்கிருந்து வரப்போகிறது ஆகையால் வேலானந்தலட்சண அபயரூபமான பிரமம் நீயாவாய் — நிட்களமாகவும் நிட்கிரியமாகவும் சாந்தமாகவும் சத்தாகவும் அந்நியமாகவுமிருக்கிற பிரமம் நீயாவாய் — ஞாதுரு ஞானஞேய மெனாத்தாகவும் ஞாதாவுக்கும் அபின்னமாகவும் அகண்ட ஞானமாகவும் அறியப்பட்டதறியப்படாததென்கிற விரண்டுமில்லாததாகவுமிருக்கிற யாதொரு சுத்தபோதரூபன்டோ அதுவே நீயாவாய் — அந்தர்ப்பிரக்ஞை பகிர்ப்பிரக்ஞை யென்கிற சொற்களையெட்டாததாகவும் பிரத்தியக்சொரூபமாகவும் சுயம்பிரகாசமாத்திரமாகவும் ஆகாசம்போலநிருவிகாரமாகவுஞ் சத்தாமாத்திரமாகவும் சமரசமாகவும் ஏகமாகவுமிருக்கிற யாதொருசுத்தபோதரூபன்டோ அதுவே நீயாவாய் — சர்வாகாரமாகவுஞ் சர்வமல்லாததாகவுஞ் சர்வத்துக்குமப்பாற்பட்டதாகவுஞ் சாசுவதமாகவுஞ் சத்தியமாகவும் ஏகமாகவுமிருக்கிற யாதொரு சுத்தபோதரூபன்டோவதுவே நீயாவாய் — நித்தியானந்த அகண்டகாசமாகியும் நிட்களமாகியும் நிட்கிரியமாகியும் பிரத்தியக்கு அபின்னமாகியும் அவியத்தமாகியு மிருக்கிற யாதொரு சுத்தபோதரூபன்டோ அதுவே நீயாவாய் ஆகலால் நிற்குணமாகியும் நிர்விகற்பமாகியுமிருக்கிற பிரமமே நானென்று அகண்டாகாரவிருத்தியோடு கூடிப்பிரமத்தினிடத்தில் நிட்கிரியனாய் சாக்ஷியிலேயிரு — அப்பா! சொப்பனத்தோற்றரவைத் தள்ளுகிறதாயும் பரமானந்தலகரியைக் கொடுக்கிறதாயும் நிர்மலமாயும் இருக்கிற அகண்டாகாரசுகவிருத்தியை உவமையில்லாதபிரமானந்த பரமசுகத்தில் அகோராத்திரமுஞ்செலுத்திக்கொண்டு பிராரத்தத்தினால் வருகிற போகங்களைப் புசித்துக்கொண்டு சாந்தியிலேயிருவாராய்ச்சியே பிரமானந்தரசத்தையுண்டு திருந்தின சத்தோவிபுத்தியினாலே ஏகாக்கிரகித்தனாயிருந்துகொண்டு சதாகாலமும் சமாதிநிஷ்டனாய் மௌனசீலனாய் சுகமாயிரு.

விரு — என்றிப்படிச்சொன்ன குருவை நமஸ்காரம்பண்ணினவாறும் சுவாமீ! இந்தமகாவாக்கியத்தைக் கேட்டமாத்திரத்திலு

[illegible]

விடை- [illegible]

வினா- இதில் முக்கியாதிகாரியாவது யெவன்,

விடை- [illegible] முக்கியாதிகாரியென்று சொல்லப்படும்.

வினா- இனி [illegible] காரியமாவதாதெனின்,

விடை- [illegible]

வினா- அதெப்படியெனின்,

விடை- பாத்திரத்துக்குக் காரணமான [illegible]

யேகாரணமானஅஞ்ஞானத்துக்குநாசம்வரும்போதுகாரியமாயிருக்கிறதேகாதிப் பிரபஞ்சத்துக்கு நாசம்வருமென்றறி— இப்பிரபை யானது சூரியனை யெப்படி துலக்கு விக்க மாட்டாதோ அப்படியே அந்தக்கரண கற்பிதமான சிதாபாசன்சுயம்பிரகாச மாயிருக்கிற பரப்பிரமத்தைத் துலக்கு விக்க மாட்டான்.

வினா- அதேதெனின்,

விடை- பிரசண்டகிரணங்களுடன் கூடியசூரியனானவர் பிரகாசிக்கும்போது இப்பிரபையானது தன்னுடைய வொளி கெட்டு அந்தச்சூரியகிரணத்தில் எப்படி அடங்கிப் போகிறதோ அப்படியே சிதாபாசனும்பரப்பிரமப் பிரகாசத்தினால் தன்னுடைய பிரகாசங்கெட்டுத்தானும்உபாதியோடே கூடமடிமைப்போவதால் ஆன்மாவைத்துலக்கு விக்கமாட்டான் ஆகலால் பிம்பபூதமான பரப்பிரமமே சேடித்திருக்கு மென்றறி— உபாதியான அந்தக்கரணம்போகிறபோது அதிற்பிரதிபிம்பித்த ஆபாசனும்அதிட்டானமாத்திரமாயிருப்பன்.

வினா- அதெப்படியெனின்,

விடை- முகத்துக்கெதிராகக் காண்பித்த கண்ணாடியை வாங்கி விடும்போது அந்தக்கண்ணாடியில் காண்பித்த ஆபாசமுகமானது போய்யதார்த்த முகமாயெப்படிக் கண்டதோ அப்படியேயுபாதியழிகிறபோது அதிற்பிரதிபிம்பமான ஆபாசனும் அதிட்டானமாத்திரமாயிருப்பனென்றறி.

வினா- இந்தச்சிதாபாசனானவன் அந்தக்கரணவிருத்தியிற் கூடி வெளியிலிருக்கிற கடத்தையறிகிறபோது அந்தக்கடாஞ்ஞானத்தைப்போக்கிக்கடத்தைத் துலக்குவித்தது போல உள்ளேயிருக்கிற சயம்பிரகாசமானபிரத்தியான்மாவைத் துலக்குவிப்பனோவெனின்,

விடை- சிதாபாசனானவன் பலவியாப்தியானதால் பிரத்தியகான்மாவைத் துலக்குவிக்கமாட்டான்— ஆகலாற் பிரத்தியகான்மாவை யறிகிறதற்கு அந்தக்கரணவிருத்திவியாப்திக்கவேணுமே தவிரப்பலமான சிதாபாசவியாப்தி தேவையில்லை— சுருதிகளிலும் மனதினால் அறியப்படாதென்கிறபலவியாப்தியும் சொல்லியிருப்பதால் நன்றாய்ப் பகுத்தறிந்து சூட்சமபுத்தியினாற் பிரமத்தை யறியவேணும்— எவன் பிரஞ்

ஞாமாந்தமாயிருக்கிறதோ அவனுக்குச் சுருதியைக் கேட்டமாத்திரத்திலே அகண்டாகாரவிருத்தி பிறக்கமாட்டாது, சிரவணமனன நிதித்தியாசனங்கள் யாதொருத்தன் நிரந்தரஞ்செய்து வருகிறதோ அவனுக்கே புத்திசூட்சுமமாகும், அதனாலவன் சூட்சுமவஸ்துவையறிந்துகொள்வான்—ஆதலால் அந்தப் பிரஞ்ஞாமாந்திகளாயிருக்கிறவர்கள் பரப்பிரமவஸ்துவை நன்றாயறிகிறதின் பொருட்டுச்சிரவணமனன நிதித்தியாசனங்களைச்செய்யவேணும்.

## ஷட்லிங்கதாத்பரியம்.

வினா- அதேதெனின்,

விடை- சகலவேதாந்தவாக்கியங்களுக்குஞ்சரீதாகவும்அத்விதீயமாகவு மிருக்கிற பரப்பிரமத்தினிடத்தில் ஷட்விதலிங்கங்களால் தாத்பரிய நிச்சயம்பண்ணுவதே சிரவணமென்று சொல்லப்படும்.

வினா- அவையாதெனின்,

விடை- உபக்கிரமமுபசங்காரமிரண்டுமொரோலிங்கம், அப்பியாசமிரண்டாம்லிங்கம், அபூர்வதைமூன்றாம் லிங்கம், பலம் நாலாம்லிங்கம், அர்த்தவாதம் அஞ்சாம் லிங்கம், உற்பத்தி ஆறாம்லிங்கமென்றுசொல்லப்படும்.

வினா- இதில்உபக்கிரமமுபசங்காரமாவதேதெனின்,

விடை-உபக்கிரமமாவது சச்சிதானந்த அகண்டமாயிருக்கிறபரப்பிரமசொரூபத்தினிடத்தில்அத்தியாரோபமாக இந்தச்சகலபூதபிரமாண்டபிண்டாண்டங்களாகியஜெகத்துண்டாயிற்று, இந்தச்ஜெகத்தாகியசிருஷ்டியாகிறதற்குமுன் பிரமம் சத்தாமாத்திரமாகவேயிருந்ததென்று பிரதிவாதிக்கிறதும், உபசங்காரமாவது இந்த உற்பத்தியானசகல ஜெகத்தும்அபவாதக்கிரமமாயொடுங்குகையாலிந்தப்பிரமாண்டபிண்டாண்டமென்கிற உபாதியிற் கூடஸ்தபிரமங்களுக்கு அந்த உபாதியையொழித்தனைத்துவயிக்கியத்தைக்கூறப்படுகிறதுமாம்.

வினா- அப்பியாசமாவதேதெனின்,

விடை- நீயேபரப்பிரமம் நீயேபரப்பிரமமென்றநேகப்பிரகாரமாகவுபதேசிக்கையாலும்அதுவேசதன்னைக்கூட்டிச்சொல்வதாலும் சேதனனுடைய சொரூபத்துக்கே அத்துவைத ஆன்மத்துவம்போதிக்கிறதாலும் அப்பியாசமென்றுசொல்லப்படும்.

வி– அபூர்வதையாவதேதெனின்,

விடை– யாதொரு விஷயம் பிரமாணங்களுக்கு [illegible]
பிரமாணத்தினாலும் அறியப்படாத [illegible],
இதரப்பிரமாணங்களினாலும் அறியப்படாமலிருப்பதே [illegible]
அபூர்வதையாம்.

வி– பலமாவதேதெனின்,

விடை– இந்த வேதசாத்திரங்களின் [illegible]
நித்தியமாத்திர நிர்க்குண [illegible] விருக்குமென்ற பிர
[illegible] தானே [illegible] நித்தியமாத்திர
வித்தாக்ஷி சைதன்ய [illegible] நான்
காரணப்பிரமம் நானே [illegible] சொரூபமாய் விளங்
கும், இந்தத் தேகேந்திரியாதிகளை ஜகத்தாயப் பிரகாசிக்
கும் [illegible] பிர
ரமத்துவத்திலே நிச்சயமாக [illegible]
ட்டோ ஜகம் சர்வாத்துமா [illegible]
ஆனந்த சொரூபமாகவிருக்குமென்று அபிப்பிராயமிக்கிறதே பலம்.

வி– அர்த்தவாதமாவதேதெனின்,

விடை– எந்த வஸ்துவைக் கேட்டதினால் கேள்விக்கெட்டாதவை
களும் கேட்கப்படுகின்றதோ, எந்த வஸ்துவை மனனம் பண்ணி
னதினால் மனனம்பண்ணப்படாதவைகளும் மனனம் பண்ணப்படு
கிறதோ, எந்த வஸ்துவையறிந்த மாத்திரத்தில் அறியப்படாதவை
யும் அறியப்படுகிறதோ, அதுவே யாவற்றுக்கும் [illegible]
ஸ்தத்துக்கும் ஆதாரமாய்விளங்குவதென்று சொல்லுகிறதே அர்த்
தவாதம்.

வி– உற்பத்தியாவதேதெனின்,

விடை– கடத்துக்குமண்ணும் நூலுக்கு வஸ்திரம் ஆபரணத்துக்கு
ப் பொன்னும் ஆயுதாதிகளுக்கு இரும்பும் எப்படிக் காரணமா
யிருக்கின்றதோ அப்படியே தோற்றப்பட்ட சகல ஜகத்துக்
கும் பிரமமே காரணமென்று ஜகத்துக்கும் பிரமத்துக்கும் அபி
ன்னத்துவம் பிரதிபாதிக்கின்றதே உற்பத்தியென்று சொல்லப்
படும். இந்தப்படி வேதாந்தவாக்கியங்களினால் சிரவணம் பண்
ணப்பட்ட அத்துவைதமான பிரத்தியகாத்மாவென்னும் வஸ்துவை
அனுகூலமான யுக்திகளினால் ஆலோசித்து நிச்சயிக்கின்றதே மன
னமென்னும் — விஷயத்திலேயிருக்கிற தேகேந்திரியாதிகளைத்
தள்ளிச் சஜாதியமான அகண்டாகார விருத்தியோடே கூடமா

ஊயினுச்சியில் விட்டதயிலதாரை போல் இடைவிடாமல் அகண்டாகாரவிருத்திகளினால் நிரந்தரந்தியானம்பண்ணுறதே நிதித்தியாசனமென்று சொல்லப்படும் — யாதொருத்தனுக்குக்கேவலியாசிரவணத்திற்சமுசயமெவ்வளவுகாலந்தீரவில்லையோ அதுவரைக்குஞ்சிரவணம்பண்ணவேணும் — சிரவணம்பண்ணி நிச்சயித்தசொரூபத்தில் சமுசயமெவ்வளவுகாலந் தீரவில்லையோ அவ்வளவுகாலஞ் சுருதியுத்திகளினால்மனனம்பண்ணவேணும் - தேகமேநானென்கிற விபரீத பாவனையானது மனதில் எவ்வளவுகாலம் நாசமடையவில்லையோ அவ்வளவுகாலம்மோட்சம்வேணுமென்றிச் சித்தவன் நிரந்தரந்தியானம் பண்ணவேணும் — அபரோட்ச சாட்சாத்காரத்தில் குதர்க்கங்களுடன் கூடின திரிவிதப்பிரபஞ்சமானது எந்தமட்டும் நாசமடையவில்லையோ அதுவரைக்குமஞ்ஞானந்தன்னுடனாகா, ஆதலால் மோட்சத்திலே யிச்சையுள்ளவன் தியானசமாதிகளை அனுஷ்டிக்கச்செய்யவேணும்.

வினா- தியானசமாதியாவதேதெனின்,

விடை- சவிகல்பசமாதியென்றும் நிர்விகல்ப சமாதியென்றும் இரண்டுவிதமாகவிருக்கும் அதில் சவிகல்ப சமாதிலட்சணத்தைமுந்திச்சொல்லுகிறேன்கேட்பாயாக.

வினா- அதேதெனின்,

